பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 03 சனிக்கிழமை (16.04.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :141





பொலன்னறுவை மாவட்டத்தில் சொருவில்ப் பகுதியிலுள்ள காட்டுப் பிரதேசத்தில் இருந்த கருணா குழுவினரின் முகாம் நேற்றுத் தாக்குதலுக்குள்ளானது.

தாக்குதலுக்குப் பின்னர் முகாமில் இருந்த கூடாரங்களுக்குள் சடலங்கள் கிடப்பதையும் அங்கிருந்த பொருள்கள் சிதறிக்கிடப்பதையும் படங்களில் காணலாம்.

# சொருவில் பிரதேசத்தில் கருணா குழு மீது தாக்கு!

## 5பேர் பலி; இருவர் காயம்: உள்முரண்பாடே காரணம்?

கொழும்பு, ஏப்ரல் 16

**பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள சொருவில் பிரதேசத்தில் நேற்று அதிகாலை கருணா குழுவினர் தங்கியிருந்த சிறிய முகாம் தாக்கப்பட்டுள்ளது. இதில் அங்கிருந்த கருணா அணியினர் சிலர் கொல்லப்பட்டனர்; வேறு சிலர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதலில் 5 பேர் கொல்லப்பட்டனர் என்றும், மேலும் இருவரைக் காணவில்லை என்றும் பொலீஸார் தெரிவித்தனர். எனினும் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை குறைந்தது 9 ஆக இருக்கும் என்று 'தமிழ் நெற்' இணையத்தளம் தெரிவித்தது.**

**உயிரிழந்தவர்களும் காயமடைந்தவர்களும் கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பொலீஸாரும் இராணுவத்தினரும் உறுதிப்படுத்தினர்.**

பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள சொருவில் பிரதேசத்திற்கும் மன்னம்பிட்டிக்கும் இடைப்பட்ட காட்டுப்பகுதியிலேயே இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. மட்டக்களப்புக்கு வடமேற்கே கிட்டத்தட்ட 80 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கின்றது இந்த இடம். சொருவில் ஆற்றோரமாகவே சம்பவம் இடம்பெற்ற வண்ணான்துரையடிக் கிராமம் இருக்கின்றது.

தாக்குதல் நடந்த இடத்தில் அமைந்திருந்த கருணா குழுவினரின் முகாமில் ஐந்து கூடாரங்கள் இருந்தன. அவற்றில் மூன்றில் ஆள்கள் இருந்தனர். அவையே தாக்கப்பட்டுள்ளன. மற்றைய ஒன்றில் உணவுப் பொருள்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இளம் தாயும் பெண் குழந்தையும் சடலங்களாக மீட்பு!

ஜெனீவா,ஏப்.16

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் தாய் ஒருவரும் அவரது ஒரு வயதுப் பெண் குழந்தையும் சுவிற்ஸர்லாந்தின் லைசனா என்ற இடத்தில் சடலங்களாகக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக உறவினர்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

கழுத்தில் சுருக்கிடப்பட்ட நிலையில் தாயின் சடலமும் கத்திக் குத்துக் காயத்துடன் குழந்தையின் சடலமும் வீட்டின் உள்ளே கிடக்கக் காணப்பட்டதாக தமக்குக் கிடைத்த தகவல்கள் மூலம் அறிய வந்திருப்பதாக உறவினர்கள் மேலும் உதயனுக்குத் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கணவர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவமே பொறுப்பு என விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

திருகோணமலை,ஏப்.16

சொருவில் பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதலுக்கு இலங்கை இராணுவமே பொறுப்பேற்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர் என அவர்கள் ஆதரவு இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

"தமிழீழத் தேசவிரோதிகளை ஒற்றர் படையாகப் பயன்படுத்திய ஸ்ரீலங்கா இராணுவமே சொருவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்குப் பொறுப்பேற்க வேண்டும்" - என்று புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தைச் சேர்ந்த ஒருவர் கருத்துத் தெரிவித்தார் என்று அந்த இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது

இதுகுறித்து அந்த அரசியல்துறைப் பிரமுகர் மேலும் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொலன்னறுவை மாவட்டம் சொருவில் கிராமத்தில் கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் மீதுமேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்து ஊடகங்கள் மூலமும் பொதுமக்கள்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மட்டுவிலில் கோஷ்டி மோதல்: குண்டுவீச்சில் இருவர் காயம்!

மட்டுவில் தெற்கில் நேற்று இரவு இடம்பெற்ற கோஷ்டி மோதலில் கைக்குண்டு வீச்சு இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

இதில் காயமடைந்தவர்கள் என்று கருதப்படும் இருவர் நேற்றிரவு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த சிற்சபேசன் சுதர்சன் (வயது-27), சிதம்பரநாதன் தவக்குமார் (வயது 21) ஆகிய இருவருமே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

முன்னதாக, மட்டுவில் பகுதியில் நேற்று பிற்பகல் கோஷ்டி மோதல் மூண்டதாகவும்-

இதில் காயமடைந்த 10இற்கும் மேற்பட்டோர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் மட்டுவிலைச் சேர்ந்த சண்கமுகராஜா சிறிதரன் (வயது-37), செல்லன் இராஜேந்திரன் (வயது-43), வேலன் சின்னராசா (வயது-43) ஆகியோரும்,

கொடிகாமத்தைச் சேர்ந்த கந்தசாமி சுதாகரன்

(16ஆம் பக்கம் பார்க்க)

## திருக்கோவில் பிரதேச செயலர் நேற்று இரவு சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு,ஏப்.16

அம்பாறை மாவட்டம் திருகோவில் பிரதேசச் செயலர் ஏ.கே.தவராஜா (வயது-38) நேற்று இரவு இனந்தெரியாத இரு நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றிரவு 6.45மணியளவில் தனது அலுவலகத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் புறப்பட்டார் என்றும் -

வழியில் அரியநாயகம் வீதியில் வைத்து இனந்தெரியாத இருவர் அவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர் என்றும் - அப்பகுதி வாசிகள் தெரிவித்தனர்.

அவர்9மில்லி மீற்றர் பிஸ்டல் ரகத்துப்பாக்கியால் அண்மை யிலிருந்து சுடப்பட்டுள்ளார் என்றும் - நான்கு சூட்டுக் காயங்கள் அவரது சடலத்தில் காணப்படுகின்றன என்றும் -



இச்சம்பவம் தொடர்பாக (16ஆம் பக்கம் பார்க்க)

## இம்முறை மேதினக் கூட்டம் நல்லூர் வடக்கு வீதியில்

தமிழ்மக்களின் அவலங்களை எடுத்தியம்பும் வகையில் இம்முறை மேதின நிகழ்வு நல்லூரில் எழுச்சியுடன் நடத்தப்படவுள்ளது.

நேற்று மாலை 4.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தக்கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்தில் இயங்கும் பொது அமைப்புகள், கூட்டுறவுச்சங்கங்கள், சனசமூக நிலையங்கள், வர்த்தக நிலையங்கள், தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கங்கள், தேசிய எழுச்சிப்பேரவை, அரச நிறுவனங்கள், ஆசிரியர் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

மேதினப்பேரணியை யாழ்.பல்கலைக்கழக வளாகத்திலிருந்து தொடங்குவது என்றும் -

அங்கிருந்து இராமநாதன் வீதி வழியாக நாச்சிமார் கோவிலடி - காங்கேசன்துறை வீதி, தட்டாதெருச்சந்தி - அரசடி வீதி வழியாக நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தைச் சென்றடைவதென்றும் -

நல்லூர் ஆலய வடக்கு வீதியில் விசேடமாக அமைக்கப்படும் மேடையில் மேதினக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சுகாதாரப் பொதி நாளை விநியோகம்

யாழ்ப்பாணம்,ஏப்.16

கனேடியன் செஞ்சிலுவைச் சங்கமும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையும் இணைந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவச சுகாதாரப் பொதி விநியோகங்களை மேற்கொண்டுவருகின்றன.

இதுவரை பருத்தித்துறைப் பகுதியில் உள்ள நலன்புரி நிலையங்களில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு இப்பொதி விநியோகம் இடம்பெற்றுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9. மணிக்கு உறவினர் வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்கும், நலன்புரி நிலையங்களில் இதுவரை பொதிகளைப் பெறாதவர்களுக்கும் சுகாதாரப் பொதி விநியோகம் இடம்பெறவுள்ளதாகவும் -

சுனாமி அட்டையைச் சமர்ப்பித்து இப்பொதியைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் -

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைத் தலைவர் வைத்தியகலாநிதி வை.தியாகராஜா தெரிவித்தார். (ஒ-12)

# சொல்ஹெய்ம் நாளை புத்தளம் செல்கின்றார்

கொழும்பு,ஏப்.16

நோர்வே சமாதானக்குழுவின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் நாளை புத்தளத்துக்குச் சென்று இடம்பெயர்ந்த முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடவிருக்கின்றார்.

நுரைச்சோலை, ஆலங்குடா, மன்னார் வீதி, சோல்டன் போன்ற பகுதிகளிலுள்ள அகதி முகாமகளுக்குச் சென்று அங்கு வாழும் மக்களுடன் அவர் கலந்துரையாடவுள்ளார். நாளை பிற்பகல் 4 மணிக்குப் புத்தளம் பாத்திமா மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து வாழும் முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கில் வடமாகாண முஸ்லிம் பிரதிநிதிகளின் குழு கடந்த வருடம் டிசெம்பர் 14ஆம் திகதி விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்துக் கலந்துரையாடியது. அவரினூடாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு வடமாகாண முஸ்லிம்கள் தொடர்பான மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. இதன்போது இம்மாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்காகப் புத்தளததிற்கு வருவதாக உறுதியளித்ததற்கமையவே நோர்வே நாட்டு விசேட பிரதிநிதி நாளை புத்தளம் விஜயம் செய்கிறார்.

இக்கூட்டத்தில் சகலரையும் கலந்துகொள்ளும்படியும், அகதி, உள்ளூர் மக்களின் பிரச்சினைகள் பற்றிய மகஜர்களை கையளிக்கும்படியும் வடக்கு முஸ்லிகளின் சார்பாக சமூக அபிவிருத்திக்கான ஆய்வுச் செயலமைப்பு வேண்டுகோள்விடுத்துள்ளது.

இதற்கிடையில் நாளை இலங்கைவரும் எரிக சொல்ஹெய்மின் விஜயம் தொடர்பாக நோர்வே தூதரகம் உத்தியோகபூர்வமாக செய்திக்குறிப்பு ஒன்றை விடுத்துள்ளது. அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 19ஆம் திகதி மட்டக்களப்புக்குச் செல்லும் அவர் அங்குள்ள தற்போதைய பாதுகாப்பு நிலைமை மற்றும் சுனாமி நிலைமை தொடர்பாக ஆராய்வார்.

அதன்பின் வன்னி செல்லும் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவார்.

சுனாமி பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக அவர் அரச மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்களை நடத்துவார். (ஒ-3)

## முறிகண்டி நபரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,ஏப்.16

கிளிநொச்சி முறிகண்டியைச் சேர்ந்தவரான முத்தையா முத்துவேல் என்பவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ளதாகவும் -

இறந்தவரின் உறவினர்கள் மருத்துவமனை நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளும்படியும் -

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ)

## சுனாமி பாதித்த சிறுவரின் கல்வி நிதிக்கு கொடிதினம்

யாழ்ப்பாணம்,ஏப்.16

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டு நிதிக்காக தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் யாழ். அலுவலகத்தினால் 'கொடிதினம்' அனுஷ்டிக்கப்படவுள்ளது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு நிதி சேர்ப்பதற்காக அடுத்தமாதம் 2ஆம் திகதி தொடக்கம் 8ஆம் திகதி வரை ஆறு நாள்கள் இந்தக் கொடிதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. (ஒ-7)

# எரிபொருள் விலை அதிகரிப்புக்காக விரைவில் அமைச்சரவைப் பத்திரம்

கொழும்பு,ஏப்.16

சர்வதேச சந்தையில் எரிபொருள் விலைகள் அதிகரித்திருப்பதனால் இலங்கையிலும் அவற்றின் விலைகளை அதிகரிப்பதற்கும், மின் கட்டணங்களை உயர்த்துவதற்கும் வழி செய்யும் விசேட அமைச்சரவைப் பத்திரமொன்றை மின்சத்தி, எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்திர எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்பிக்கவுள்ளார் எனத்தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி தலைமையில் எதிர்வரும் 20 ஆம் திகதி கூடவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தின்போதே இந்த அமைச்சரவைப் பத்திரம் சமர்பிக்கப்படவுள்ளது.

முன்னதாக, தற்போதைய சூழ்நிலைகளின் படி மின்கட்டணம் மற்றும் எரிபொருள் விலைகளில் அதிகரிப்புச் செய்யப்படவேண்டுமென மின்சத்தி எரிபொருள்துறை அமைச்சர், திறைசேரியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## கற்கைநெறி ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.16

தொழில் நிர்வாக முதுமாணிக்கற்கை நெறிக்கான ஆரமப நிகழ்வும் வழிகாட்டல் கருத்தரங்கும் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஐ.ஐ.எஸ். நிறுவனப் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிலிங்கோ நிறுவனத்தின் உயர் கல்விச் செயற்பாட்டிலுள்ள ஐ.சி.பி.ரி. நிறுவனத்துடன் ஐ.ஐ.எஸ். நிறுவனம் இணைந்து இக்கற்கை நெறியை ஆரம்பிக்கவுள்ளது.

ஐ.ஐ.எஸ். நிறுவன இயக்குநர் விக்னேஷ் தலைமையில் நடைபெறவுள்ள ஆரம்ப நிகழ்வில் மணிபால் பல்கலைக்கழகத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள், ஐ.சி.பி.ரி. நிறுவனத் தலைவர் ஜெகத் அல்விஸ், பொதுமுகாமையாளர் மோகான் பத்திரன, நிறுவனத்தின் உயர் மட்டப் பிரதிநிதிகளான அனுரா கமகே, நிரோஜன் மடமிற்றிகே ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-202)

# பொலீஸார்–ஆயுததாரிகள் சண்டையில் ஐவர் காயம்!

கொழும்பு,ஏப்.16

திஸ்ஸமகராம - உனாவ பிரதேசத்தில் உள்ள சட்டவிரோத சூதாட்ட மையத்துக்கருகில் நேற்றுமுன்தினம் இரவு பொலீஸாருக்கும், ஆயுததாரிகளுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டயில் மூவர் காயமடைந்துள்ளனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச் சண்டையில் இரு பொலீஸ் அதிகாரிகள் காயமடைந்துள்ளனர் என்றும் தெரியவருகிறது.

காயமடைந்தவர்களில் இருவர் அம்பாந்தோட்டை வைத்தியசாலையிலும் மற்றையவர் மாத்தறை வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். காயமடைந்த பொலீஸ் அதிகாரிகள் இருவரும் கதிர்காமம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சூதாட்டம் நடைபெற்ற இடத்தில் இருந்தவர்கள் பொலீஸ் அதிகாரிகள் மீதும் பொலீஸ் ஜீப்வண்டி மீதும் தாக்குதல் நடத்த முற்பட்டனர் எனவும் பொலீஸார் கூறினர். இதனையடுத்து ஏற்பட்ட குழப்பநிலை தம்மால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக உதவிப்பொலீஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். (க)

## ரெலிகொம் பிராந்திய அலுவலகம் யாழில் இன்று திறப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.16

ரெலிகொம் நிறுவனத்தின் வடபிராந்திய அலுவலகம் இன்று முற்பகல் 11.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படவிருக்கின்றது.

இதுவரை வடக்கு - கிழக்குக்கென இணைந்து செயற்பட்டு வந்த அலுவலகம் இன்று முதல் வடக்குக்கு எனத் தனியாகச் செயற்பட உள்ளது.

இந்த அலுவலகத்தின் பொறுப்பதிகாரியாக எஸ்.யோகேந்திரன் பணியாற்றவிருக்கிறார். (ஒ-3)

## மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ஒ-3)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம் அமைச்சுச் செயலருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.16

வடக்கு - கிழக்கு மாகாண பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகள் கல்வியமைச்சின் சிரேஷ்ட பொதுச் செயலாளர் கே.ஏ.எல்.எல்.விஜயரட்ண, மேலதிக செயலாளர் எஸ்.தில்லைநடராஜா ஆகியோரைக் கடந்த திங்கட்கிழமை சந்தித்து உரையாடினர்

மேற்படி சங்கம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் முதல் நியமனத் திகதியிலிருந்து, அரசு வெளியிட்ட நிரந்தரச் சேவை சுற்றுநிருபங்களும் குறிப்பிடப்பட்ட காலத்தில் தொடர்ச்சியான சேவை நாள்களும் கருத்தில் எடுக்கப்படும் என்றும் -

பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் பதில்கிடைத்ததும் நிரந்தர நியமனம் குறித்து சுற்றுநிருபம் வெளியிடப்படும் என்றும் - இச் சந்திப்பின்போது சிரேஷ்ட பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

அனைத்துப் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் நிரந்திர சேவையில் இணைக்குமாறு கோரும் மனு இச்சந்திப்பின்போது சிரேஷ்ட பொதுச் செயலரிடம் கையளிக்கப்பட்டது - என்றுள்ளது. (ஒ)

# கிழக்குக்கு செல்வார் ரொக்கா

கொழும்பு,ஏப்.16

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இலங்கை வரும் தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரீனா ரொக்கா, ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மீள்கட்டுமானப் பணிகளை பார்வையிடுவதற்காக கிழக்கு மாகாணத்திற்குச் செல்லவுள்ளார்.

அதற்கு முன்னர் கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை கிறிஸ்ரீனா ரொக்கா சந்திக்கவுள்ளார்.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண கைத்தொழிலாளர்களுக்குத் தேவையான கைத்தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வொன்றில்அவர் கலந்துகொள்ளவுள்ளார். அவரது இந்த விஜயத்தின்போது அவர் நோர்வேயின்விசேட பிரதிநிதி எரிக்சொல்ஹெய்மையும் சந்தித்துப் பேசுவார் என்ற பலத்த எதிர்பார்ப்பும் நிலவுகிறது. (க)

## கல்வீச்சில் பொலீஸார் காயம்!

அம்பாறை மாவட்ட மருதமுனையில் நேற்று மாலை பொதுமக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் போது இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கல் வீச்சிற்கு இலக்காகிக் காயமடைநதுள்ளார்.

உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் ஏற்பாட்டில் தொழில் உபகரணங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த நிவாரண உதவிகளைப் பெறும் வாய்ப்பைப் பெற்றிராதவர்கள் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது ஏற்பட்ட பதற்ற நிலையைத் தவிர்ப்பதற்காக பொலீஸார் ஆகாய வேட்டுக்களைத் தீர்த்து கூட்டத்தைக் கலைத்தனர்.

அப்போது இடம்பெற்ற கல்வீச்சிலேயே பொலீஸ்காரர் காயமடைந்தார். (ஒ)

# அப்ரிடியின் அதிரடிச் சதத்தால் பாகிஸ்தான் வெற்றி

இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே கான்பூரில் நேற்று நடைபெற்ற ஐந்தாவது ஒருநாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் 5 விக்கெட்டுக்களால் வெற்றியடைந்தது. இதன்படி 6 ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடரில் பாகிஸ்தான் 3-2 என்ற முன்னிலையைப்பெற்றது.



இந்த ஆட்டத்துக்கான இந்திய அணியில் கங்குலி, நெஹ்ரா ஆகியோர் விளையாடவில்லை. அவர்களுக்குப் பதிலாக தினேஷ் மொங்கியா, கும்ளே ஆகியோர் களமிறங்கினர்.

பாகிஸ்தான் அணியில் முகமது சமி நீக்கப்பட்டு இப்திகார் சேர்க்கப்பட்டார்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 249 ஓட்டங்களைப் பெற்றது. இந்த ஆட்டத்தில் இந்திய அணியில் முன் வரிசைத் துடுப்பாட்ட வீரர்களின் செயற்பாடு மிகமோசமாக இருந்தது.

ஆட்டத்தின் ஒரு கட்டத்தில் 59 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து இக்கட்டனா நிலையில் இந்தியா இருந்தது. அதன்போது 5 ஆவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த டிராவிட், கைப் ஆகிய இருவரும் நிதானித்து ஓட்டங்களைக் குவித்தனர். இவர்கள் இருவர் மட்டுமே இந்திய அணிசார்பாக குறிப்பிடும்படியாக விளையாடினர் டிராவிட் 86 ஓட்டங்களையும் கைப் 78 ஓட்டங்களையும் பெற்றனா.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக நவீட் 3 விக்கெட்டுக்களையும், ரசாக் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

வெற்றி இலக்காக 250 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 42.1 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றது. எனவே, இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் 5 விக்கெட்டுக்களால் வெற்றியடைந்தது.

அந்த அணி சார்பாக அப்ரிடி 45 பந்துகளில் 10 பவுண்டரிகள் 9 சிக்ஸர்கள் அடங்கலாக 102 ஓட்டங்களைக் குவித்தார். சர்வதேசக் கிரிக்கெட்டில் அதிவிரைவாக அடிக்கப்பட்ட 2 ஆவது சதம் இதுவாகும். தவிர மலிக் 41 ஓட்டங்களையும், இன்சமாம் ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் இந்திய அணி சார்பாக கும்ளே 2 விக்கெட்டுக்களையும், டெண்டுல்கர், ஷேவாக், ஹர்பஜன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிச் சதமடித்த அப்ரிடி ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார். (க)



# பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் முஷாரப் இன்று புதுடில்லி விஜயம்



புதுடில்லி,ஏப்.16

பாகிஸ்தான் அதிபர் முஷாரப் இந்தியாவில் மூன்று நாள் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டு சனிக்கிழமை தனி விமானம் மூலம் இந்தியா வருகிறார்.

இஸ்லாமாபாத்தில் இருந்து நேரடியாக ஜெய்ப்பூர் வந்துசேரும் இவர், ஜெய்ப்பூர் விமான நிலையத்தில் இருந்து ஹெலிகொப்டரில் ஆஜ்மீர்தர்காவுக்குச் சென்று தொழுகை நடத்துவார்.

பின்னர் ஆஜ்மீரில் இருந்து புதுடில்லி வரும் இவருக்கு விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படும்.

அதன் பின்னர் பிரதமர் மன்மோகன் சிங்கும், முஷாரப்பும் இரு நாட்டுப் பிரச்சினைகள் குறித்து பேச்சு நடத்துவர். தொடர்ந்து பிரதமர் மன்மோகன் சிங் தனது வீட்டில் முஷாரப்புக்கு இரவு விருந்து அளிக்கிறார். இதில் முஷாரப்பின் மனைவியும் கலந்துகொள்கிறார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை புதுடில்லியில் நடைபெறும் இந்திய - பாகிஸ்தான் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியை முஷாரப்பும், பிரதமர் மன்மோகன் சிங்கும் பார்வையிடுவர். காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, முன்னாள் பிரதமர் வாஜ்பாய் உள்ளிட்ட தலைவர்களும் அவர்களுடன் அமர்ந்து போட்டியைப் பார்வையிடுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அன்றையதினம் மாலையில் முஷாரப்புக்கு ஜனாதிபதி அப்துல்கலாம் விருந்து அளிப்பார். ஹூரியத் மாநாட்டு அனைத்துக் கட்சிக்குழுப் பிரதிநிதிகளும் முஷாரப்பைச் சந்திக்கிறார்கள். புதுடில்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரகம் சார்பிலும் பாகிஸ்தான் அதிபருக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

புதுடில்லி வரும் முஷாரப் அங்குள்ள தாஜ் ஹோட்டலில் தங்குகிறார். அவருக்காக ஹோட்டலின் 9ஆவது மாடியில் 70 அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதில் முஷாரப் அவரது மனைவி செபா மற்றும் பாகிஸ்தான் பிரதிநிதிகள் தங்குவர்.

முஷாரப் வருகையை முன்னிட்டு புதுடில்லியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கிரிக்கெட் ஸ்ரேடியம், அவர் தங்கும் இடம், மற்றும் சுற்றுப் பயணம் செய்யும் இடங்களைப் படையினர் தங்கள் வசம் பொறுப்பேற்று பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். விளையாட்டு அரங்கின் உள்ளேயும், வெளியேயும் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். படையினர் சாதாரண உடையிலும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பாதுகாப்புக் கருதி கிரிக்கெட் போட்டி நடைபெறும் மைதானத்தின் அருகே முஷாரப்பும், மன்மோகன் சிங்கும் ஹெலிகொப்டரில் வந்து இறங்குவர். அங்கிருந்து குண்டு துளைக்காத காரில் அவர்கள் மைதானத்தை வந்தடைவர். (எ)

பாக். ஜனாதிபதி முஷாரப் தங்கவுள்ள ஹோட்டல்.



## புதிய பாப்பரசர் தெரிவு திங்களன்று

# வாக்குப்பதிவுத் தகவல்களை கர்தினால்கள் வெளியே சொன்னால் கடும் நடவடிக்கை

வத்திக்கான்,ஏப்.16

பாப்பரசர் 2ஆம் அருளப்பர் சின்னப்பர் மரணமடைந்ததைத் தொடர்ந்து புதிய பாப்பரசரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் நாளைமறுதினம் நடக்கிறது.

வத்திக்கான் நகரில் உள்ள கிங்ஸ்டன் தேவாலயத்தில் பூட்டிய அறைக்குள் இரகசிய ஆலோசனை வாக்கெடுப்பு மூலம் இந்தத் தேர்தல் நடக்கிறது. 115 கர்தினால்கள் புதிய பாபரசரைத் தேர்தெடுக்கிறார்கள்.

புதிய பாப்பரசரைத் தேர்ந்தெடுக்கும் கர்தினால்களுக்கு இந்தமுறை சில விதிமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளன. இரகசிய ஆலோசனைக்கு இடையே அவர்கள் தனி அறையில் படுத்துத் தூங்கலாம். இடையிடையே பூங்காவில் உலா வந்து சுத்தமான காற்றைச் சுவாசிக்கலாம்.

ஆனால், ஆலோசனைக் கூட்டம் மற்றும் இரகசிய வாக்கெடுப்பில் நடந்தது என்ன என்பது போன்ற தகவல்களை அவர்கள் வெளியே சொல்லக்கூடாது. செல்போன்களையும் அவர்கள் உள்ளே கொண்டுசெல்லக்கூடாது, சிவப்புநிற அங்கி அணிந்து அவர்கள் உள்ளே செல்ல வேண்டும். ஆலோசனைக் கூட்டம் நடக்கும் அறைக்குள் செல்வதற்கு முன் அவர்கள் எந்தத் தகவல்களையும் தெரிவிக்கமாட்டோம் என்று உறுதிமொழி ஏற்றுக்கொள்ளவேண்டும். கருத்து வேறுபாடுகளையோ அல்லது உள்ளே நடந்த சம்பவங்களையோ வெளியே சொல்லும் கர்தினால்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வத்திக்கான் நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. அவர்கள் திருச்சபையில் இருந்தே புதிய பாப்பரசரால் நீக்கப்படுவார்கள்.

இரகசிய வாக்கெடுப்பு நடக்கும் அறையில் ஒட்டுக்கேட்கும் கருவிகள் ஏதாவது பொருத்தப்பட்டுள்ளதா? என்று அந்த அறை முழுவதும் தனியார் உளவு அமைப்பு சோதனை நடத்தி வருகிறது.

புதிய பாப்பரசர் தேர்தலில் லஞ்சம் கொடுக்க முயல்பவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

பாப்பரசர் தேர்தலை 3 நாள்களுக்குள் நடத்தி முடித்துவிடவேண்டும் என்று கர்தினால்கள் முடிவு செய்துள்ளனர். அது முடியாமல்போனால் கூட்டத்தை நிறுத்திவிட்டு கர்தினால்கள் பிரார்த்தனை நடத்துவார்கள். அதையடுத்து மீண்டும் தேர்தல் நடைபெறும்.

13 ஆவது நூற்றாண்டில் புதிய பாப்பரசரைத் தேர்ந்தெடுக்கும் இரகசியக் கூட்டமும், தேர்தலும் 2 ஆண்டுகள் 9 மாதங்கள் 2 நாள்கள் நீடித்தது. அதுபோன்ற நிலை மீண்டும் ஏற்படக்கூடாது என்றும் கர்தினால்கள் விரும்புகின்றார்கள்.

இந்த நிலையில் புதிய பாப்பரசராக வர அதிக வாய்ப்பு இருப்பதாகக் கூறப்பட்ட ஜேர்மன் கர்தினால் ஜோசப் ரட்சகருக்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. (எ-க)

## நேபாளத்தில் ஓராண்டுக்குள் உள்ளூராட்சித் தேர்தல்

காத்மண்டு,ஏப்.16

நேபாளத்தில் ஓராண்டுக்குள் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படும் என்று மன்னர் ஞானேந்திரா அறிவித்துள்ளார்.

நேபாளப் புத்தாண்டை ஒட்டி நாட்டு மக்களுக்கு ஞானேந்திரா வியாழக்கிழமை ஆற்றிய உரையிலேயே இதனைத் தெரிவித்தார்.

"பாதுகாப்புப் படையினர் முன்பை விடத் திறமையாகச் செயற்படுகின்றனர் என்பதால் சட்டம், ஒழுங்கு நிலைமை படிப்படியாக உயர்ந்துள்ளது. இச்சூழலில் நேபாளத்தில் மக்களாட்சியை மீண்டும் மலரச் செய்வதில் தாமதம காட்டக்கூடாது. உள்ளூராட்சித் தேர்தலை இந்த ஆண்டுக்குள் நடத்தவேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழுவுக்கு அரசு உத்தரவிட்டுள்ளது" என்று தெரிவித்தார் அவர்.

நாட்டில் ஜனநாயகத்துக்கு ஆபத்து நேரிட இருந்தால்தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டது என்றும் கூறினார்.

கடந்த 2002 நவம்பரில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் மிரட்டலை அடுத்து தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

நேபாளத்தில் தற்போதுள்ள நிலை மாற உள்ளூராட்சித் தேர்தலில் அனைவரும் கலந்துகொண்டு மீண்டும் ஜனநாயகம் மலர வழிவகை செய்யவேண்டும் என்றும் மன்னர் ஞானேந்திரா கேட்டுக்கொண்டார். (எ-க)

# ஈராக்கில் குண்டுத் தாக்குதல்கள் 15 பேர் பலி; 40 பேர் காயம்!

பக்தாத்,ஏப்.16

ஈராக் தலைநகர் பக்தாத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 15 பேர் உயிரிழந்தனர்; 40 பேர் காயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அரச அலுவலகங்கள் அமைந்திருந்த பகுதிக்குள்ளேயே மேற்படி குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. குண்டுகள் வெடித்த பகுதியிலேயே ஈராக் உள்துறை அமைச்சின் கட்டடமும் உள்ளது.

மேற்படி தாக்குதல்களால் ஏராளமான வாகனங்கள் சேதமடைந்துள்ளன என்றும் -

ஈராக் பொதுத் தேர்தல் நடைபெற்றதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மோசமான தீவிரவாதத் தாக்குதல்களில் இதுவும் ஒன்று எனவும் ஈராக் அரச அதிகாரிகள் கூறினர்.

மேற்படி தாக்குதல்களுக்கு தமது இயக்கமே பொறுப்பாகும் என்று ஜோர்தானைப் பிறப்பிடமாகக் கொண்ட - ஈராக்கில் அல்கெய்டா இயக்கத்தின் தலைவராகச் செயற்படும் - அபு முஸாப் அல்-ஸர்கவி தெரிவித்துள்ளார்.

இவ்வாறான தாக்குதல்கள், தீவிரவாதிகள் விரக்தியடைந்துள்ளார்கள் என்பதையே எடுத்துக்காட்டுகின்றன என்று ஈராக் உள்துறை அமைச்சர் பலா நக்ஷிப் தெரிவித்தார்.

ஆனால், ஈராக்கில் அண்மைய காலங்களில் தீவிரவாத தாக்குதல்கள் அதிகரித்துள்ளன என்று பாதுகாப்பு அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன. (எ-க)

## மண்டேலாவுக்கு விருது

ஸ்டாக்ஹோம்,ஏப்.16

தென்னாபிரிக்க நாட்டில் குழந்தைகளின் உரிமைக்காகப் பாடுபட்டதற்காக அந்நாட்டின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலாவுக்கு சுவீடன் நாட்டின் விருது வழங்கப்பட்டுள்ளது

நெல்சன் மண்டேலா, அவரது மனைவி கிரேசா மைக்கேல் மற்றும் கென்யா நாட்டின் சமூக சேவகர்களுக்கும் இந்த விருது பகிர்ந்தளிக்கப்படுகிறது.

90 லட்சம் ரூபா மதிப்புக்கொண்ட இந்த விருது, இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டு 'உலக நண்பர்கள் விருது ஆகவும், உலக குழந்தைகள் நலன் காப்போர் விருது' ஆகவும் சுவீடன் நாட்டால் வழங்கப்பட்டு வருகிறது

இதுகுறித்து சுவீடன் குழந்தைகளின் உலக அமைப்பின் அமைப்பாளர் செய்தியாளர்களிடம் கூறியதாவது :-

தென்னாபிரிக்காவில் வாழும் குழந்தைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியது, சம உரிமையை பெற்றது, பெண் குழந்தைகள் பள்ளி செல்லும் உரிமையை பெற்றது ஆகிய சிறப்பான சமூக சேவைகளுக்காக மண்டேலாவுக்கும் அவரது மனைவிக்கும் 'உலக நண்பர்கள் விருது' வழங்கப்படுகிறது. உலகெங்கிலும் உள்ள 24 லட்சம் பள்ளிக் குழந்தைகளிடம் எடுக்கப்பட்ட வாக்கெடுப்பு மூலம் இவர்கள் தேர்வு செய்யப்பட்டனர் - என்றார். (எ-க)

# பித்தளைப் பாத்திரத்தில் தண்ணீர் உடல் நலத்திற்கு உகந்தது

## அமெரிக்க ஆய்வொன்று தகவல்

நியூயோர்க்,ஏப்.16

பித்தளைப் பாத்திரங்களில் தண்ணீரை வைத்துக் குடிப்பது உடல் நலத்திற்கு உகந்தது என்று அறிவியல் ரீதியான உண்மை என நிரூபிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் நியூகேஸ்டில் நகரில் உள்ள நர்த்தம்பராயா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நுண்ணுயிரியல் நிபுணர் நியூயோர்க்கில் இருந்து வெளிவரும் 'இயற்கை' என்ற இதழில் எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரையில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அறிவியல் ரீதியாக பித்தளைப் பாத்திரத்தில் வைக்கப்பட்டுள்ள தண்ணீரில் பற்றீரியா கிருமிகள் நீண்டநேரம் உயிர்வாழ்வதில்லை. பித்தளைப் பாத்திரங்கள் இயற்கையாக குடிதண்ணீர் சுத்திகரிப்புக் கருவியாகச் செயற்படுகின்றன. இதனால், பித்தளைப் பாத்திரங்களில் தண்ணீரை வைத்துக் குடிப்பவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை.

வளர்ந்துவரும் நாடுகளில் பிளாஸ்ரிக் பாத்திரங்களில் வைக்கப்படும் தண்ணீரில் பற்றீரியாக்கள் அழிவதில்லை. இதனால், கொலரா உட்பட பல நோய்கள் மனிதனைத் தொற்றிக் கொள்கின்றன.

இந்நோய்கள் குழந்தைகளையே பெரிதும் பாதிக்கின்றன. தண்ணீரால் ஏற்படும் நோய்களுக்கு ஆண்டுதோறும் 20 லட்சம் குழந்தைகள் உலகம் முழுவதும் பலியாகின்றனர் என்றுள்ளது. (எ-க)

## சூரிய சக்தி, காற்று வலு மின்சக்தி மூலம்

# அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் வறுமையை ஒழிக்கமுடியும் என்கிறது ஐ.நாவின் அமைப்பொன்று

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் சூரிய சக்தியையும், காற்று வலுவையும் உபயோகித்து பல ஆயிரக்கணக்கான மெகாவோட்ஸ் மின்சக்தியை உற்பத்தி செய்வதன் மூலம், வறுமையை ஒழித்துக்கட்ட முடியும் என்றும், பெற்றோலியப் பொருள்களுக்கென செலவிடும் பெருந்தொகைப் பணத்தைச் சேமிக்கமுடியும் என்றும் அமெரிக்க நிறுவனம் ஒன்று அறிவித்திருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் செயற்படும் சூரிய மற்றும் காற்று வலு சக்தி வள மதிப்பீட்டு அமைப்பு இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளது.

ஆபிரிக்கா, ஆசியா, தெற்கு மற்றும் மத்திய அமெரிக்கா என்பனவற்றைச் சேர்ந்த 13 அபிவிருத்தியடையும் நாடுகள் இத்தகைய இயற்கை வளங்களை உபயோகித்து சக்தி வளத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று மேற்படி அமைப்பு அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் சீனாவில் ஒரு லட்சம் மெகாவோட்ஸும், பிரேஸிலில 80 ஆயிரம் மெகாவோட்ஸும், இலங்கையில் 26ஆயிரம் மெகாவோட்ஸும் சூரிய மற்றும் காற்று இயற்கை வளங்களைக் கொண்டு மின்சக்தியை உற்பத்தி செய்யமுடியும் என்று மதிப்பீடுகள் மூலம் தெரியவந்திருக்கிறது.

இந்தத் தொகை தற்சமயம் இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள மின் உற்பத்தி நிலையங்கள் தரும் மின்சக்தியிலும் பார்க்க 10 மடங்கு அதிகமானதாகும்.

ஜேர்மனி, ஜப்பான் உட்பட பல கைத்தொழில்மய நாடுகளும் சூரிய சக்தியையும், காற்று வலுவையும் உபயோகித்து பெருமளவு மின்சாரத்தை உற்பத்தி செய்து வருகின்றன என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மீளப்பெறும் சக்தி வள ஆய்வுகூடம், நிக்கரகோவாவின் சக்திவள அமைச்சு, எதியோப்பியாவின் கிராமிய சக்தி வள அபிவிருத்தி நிலையம் என்பன சூரிய மற்றும் காற்றுவலு சக்திவள அமைப்பில் இடம் பெற்றிருக்கின்றன. (எ-க)

# அறிவித்தல்

கந்தையா சோமேஸ்வரானந்தனும் பெண் கமலாம்பிகையும் (இல. 443, டொக்கியாட் றோட், திருகோணமலை) ஆகிய நாம் எம்மால் 15.07.2002இல் 8648ஆம் இலக்கத்தில் வவுனியா நொத்தாரிஸ் ஏ.கேதீஸ்வரனால் எமது 2ஆம் பெயரின் சகோதரன் வவுனியா றோட் வைரவப் புளியங்குளம் பொன்னம்பலம சபாலிங்கம் (N.I.C 470591188V) என்பவருக்கு வழங்கிய 'அற்றோனி தத்து வத்தை 07.03.2005 இலிருந்து வெற்றும் வெறிதும் ஆக்கி விடுகின்றோம்.

எனவே, எமது சார்பில் 07.03.2005இல் பொன்னம்பலம் சபாலிங்கத்தால் செய்யும் எந்த நடவடிக்கையும் வெற்றும் வெறிதும ஆகும் என்பதை இத்தால் வெளிப்படுத்துகின்றோம்.

**சோ.கமலாம்பிகை**

குறித்த கந்தையா சோமேஸ்வரானந்தனும் பெண் கமலாம்பிகை யின் 07.03.2005இல் இருந்து குறித்த அற்றோனி தத்து வத்தை மீளப்பெற உரித்துள்ளது என்பதை இத்தால் உறுதியளிக்கின்றேன்.

ஞா.சிவஞானம் சட்டத்தரணி
12.04.2005 (44258)(21-16)

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்களுக்கான விடைகள் மாறிப் பிரசுரமாகின

உதயனில் செவ்வாய்க்கிழமைதோறும் இலவச இணைப்பாக வெளிவரும் 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்களில் இரண்டாவது வினாத்தாள் கடந்த 12ஆம் திகதி உதயனில் பிரசுரமாகியிருந்தது. அந்த வினாத்தாள்களுக்கான விடைகளுக்குப் பதிலாக நேற்று வெள்ளிக்கிழமை உதயனில் தவறுதலாக மூன்றாவது வினாத்தாளுக்குரிய பதில்கள் பிரசுரமாகிவிட்டன.

அதனால் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய குழப்பங்களுக்காக வருந்துகின்றோம்.

இரண்டாவது வினாத்தாள்களுக்கான சரியான விடைகள் இன்றைய உதயனில் கீழே பிரசுரமாகின்றன.

ஏற்கனவே விடைகள் வெளியாகிவிட்ட போதிலும் மூன்றாவது வினாத்தாள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வழமைபோன்று வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (ஆ-ர்)

## புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்-2 விடைகள்

ஐந்தாம் தரத்துக்குரிய - புலமைப்பரிசில் பரீட்சை
மாதிரி வினாத்தாள் இல.2 இற்கான விடைகள் வருமாறு

வினாத்தாள் - I

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (01) 3 | (02) 2 | (03) 3 | (04)2 | (05) கு | (06) ல் |
| (07) 2 | (08) 3 | (09) 3 | (10) 2 | (11) 2 | (12) 3 |
| (13) 5 | (14) 3 | (15) 4 | (16) 3 | (17) 3 | (18) 2 |
| (19) 1 | (20) 2 | (21) 1 | (22) 2 | (23) 3 | (24) 3 |
| (25) 1 | (26) 2 | (27) 3 | (28)1 | (29) 3,5 | (30) 2,3 |
| (31) 4 | (32) 2 | (33) 2 | (34) 4 | (35) 3 | (36) 3 |
| (37) 2 | (38) 2 | (39)3 | (40) 2 | | |

வினாத்தாள் - II

(01)
1) மலைகள், கிரிகள் /வரைகள் 2) திறந்த 3) அக்கம்பக்கம 4) சலசல 5) வண்ணவண்ண 6) கீதங்கள் 7) சிறிய/ அழகிய / இனிய 8) பகலவன் / சூரியன் 9) அருவியும் 10) கிராமங்கள் 11) அஃறிணை 12) பலவின்பால் 13) பன்மை 14) படர்க்கை 15) Village 16) Clouds 17) Trees 18) Birds

(02)
(i) மனதை நெகிழச் செய்து விட்டது
(ii) நடைபெறவுள்ளதை முன்னதாகச் சொல்லல்

(03) (i) ஆற்றிலே படகு போகிறது / போகின்றது
(ii) மழை பெய்தது.

(04) (i) விதவை - கைம்பெண் (ii) ஏகபோகம் (iii) மாரி

(05) (i) பழங்கள்
(ii) கரும்பலகையைத் துடை / சுத்தம் செய்
(iii) கதிரை (iv) உப அதிபர்

(06)
(i) விதுஹல்பதி (ii) மேசய

(08)
(i) 2 (ii) 3 (iii) 3 (iv) 2 (v) 4 (vi) 4
(vii) 2 (viii) 3 (ix) 3 (x) 1

(07) (i) பென்சில் (ii) மாம்பழம்

(09)
1) கழுகு 2) கிளி 3) தேன்சிட்டு 4) நாரை 5) தாரா

(10)
1) மின் உலர்த்தி 2) மின் கேத்தல் 3) மின்னழுத்தி 4) மின்துறப்பணம்

(11)
1) 100 02) 4086 3) கனவுரு 4) 12 cm
5) காலை 5.25 மு.ப. 5.25

(12)
(i) பொருத்தமாகக் குறித்தல்




(ii) சுனில்
(iii) 6 (iv) 2 (v) 396 ரூபா (vi) 6 (vii) 30

(13) (i) ஆயத்தம் செய் (ii) குறிப்பிற்குச் செல்

(14)
(i) மீன் முள்ளுத் தையல் (ii) கம்பளித் தையல்

(15) பொருத்தமான வசனங்கள்

புள்ளித்திட்டம்

வினாத்தாள் I :
$40 \times 2\frac{1}{2} = 100$ புள்ளிகள்

வினாத்தாள் II :

| | | |
|---|---|---|
| 1) 18 புள்ளி | 6) 2 புள்ளி | 11) 10 புள்ளி |
| 2) 4 புள்ளி | 7) 2 புள்ளி | 12) 16 புள்ளி |
| 3) 4 புள்ளி | 8) 10 புள்ளி | 13) 2 புள்ளி |
| 4) 5 புள்ளி | 9) 5 புள்ளி | 14) 2 புள்ளி |
| 5) 4 புள்ளி | 10)4 புள்ளி | 15) 12 புள்ளி |

உ

யாழ்.அத்தியடி

## பிள்ளையார் கோயில் வசந்தோற்சவம் - 2005

விநாயக அடியார்களே!

இன்று (16.04.2005) சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசையுடன் ஆரம்பமாகி திருவூஞ்சல் நடைபெற்று அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் எழுந்தருளி எம்பெருமான் வீதிவலம் வந்து அருள் பாலிப்பார்.

**9.00 மணிக்கு குப்புசாமி பாலமுருகன் குழுவினரின்**

**விசேட மங்கள இசைக்கச்சேரி நடைபெறும்.**

அதனைத் தொடர்ந்து

**சாகித்தியம் இசைக் குழுவினரின்**

**'இன்னிசை கானம்'** இடம்பெறும்.

ஐங்கரன் அடியார்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*பிள்ளையார் பணியில்*
(44252) அத்தியடி இளைஞர்கள்.



உ

சாவகச்சேரி

**அருள்மிகு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடைபெற்ற புத்தாண்டு அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

முதலாம் பரிசு:
வெற்றி இல. 5456 – K. திலீபன், மீசாலை வடக்கு, கொடிகாமம்.

இரண்டாம் பரிசு:
வெற்றிபெற்ற இல. 7371 – மு. சிவரட்ணம், சரசாலை வடக்கு, சாவகச்சேரி

மூன்றாம் பரிசு:
வெற்றிபெற்ற இல. 5335 - ஸ்ரீகோணேஸ்வர புத்தகசாலை, சாவகச்சேரி.

ஆறுதல் பரிசுகள் - 15

| வெற்றிபெற்ற இல. | பெயர் | விலாசம் |
|---|---|---|
| ★ 3565 | ப.நேசம்மா | இந்துக் கல்லூரி லேன், யாழ்ப்பாணம் |
| ★ 2352 | ந.கேதீஸ்வரன் | கல்வயல், சாவகச்சேரி |
| ★ 265 | செ.நடராசா | உடுவில் கிழக்கு, சுன்னாகம் |
| ★ 4172 | குகதாஸ் கஜனி | இலுப்பையடி லேன், மட்டுவில் |
| ★ 3081 | தெ.ஸ்ரீகாந்தன் | கண்டி வீதி, சாவகச்சேரி |
| ★ 4864 | ந.அன்னபூரணம் | நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி |
| ★ 3914 | கு.வீசுவலிங்கம் | மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி |
| ★ 5432 | சண்முகநாதன் | காமதேனு, புத்தூர் வீதி |
| ★ 4806 | வேலாயுதம் | கைதடி தெற்கு, கைதடி |
| ★ 8921 | நவனி | மட்டுவில், சாவகச்சேரி |
| ★ 2229 | மே.ராசன் | டச்சு வீதி, சாவகச்சேரி |
| ★ 6708 | ச.முருகையா | கைதடி தெற்கு, கைதடி- |
| ★ 1663 | குகானந்தன் | மடத்தடி வீதி |
| ★ 7706 | அட்ஷயன் | மாவடி, கரவெட்டி |
| ★ 818 | வே.நிசாந்தினி | கல்வயல், சாவகச்சேரி |

(44255) (24-21-18)

இச்சீட்டிழுப்பு ஆலய அன்னதான, திருமண மண்டபத்துக்காக மேற்படி ஆலய முன்றிலில் பொதுமக்கள், பிரமுகர்கள் முன்னிலையில் 14.04.2005 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது. பரிசுக்குரியவர்கள் நேரில் வந்து பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
ஆலய தர்மகர்த்தா
பிரம்மஸ்ரீ ப.மகாகணபதி சர்மா.

## துன்பந்தீர அருள்வாக்கு

குழந்தைப் பேறில்லாதவர்கள், திருமணத்தடை, தோஷம் உள்ளவர்கள், குடும்பப் பிரச்சினைகள், வெளிநாடு செல்லத்தடை, தொழிலில் முன்னேற்றமின்மை, கல்வியில் முன்னேற்றமின்மை, தீராத நோய் தீர அருள்வாக்குக் கூறப்படும்.
கொழும்பு-6, பெர்ணாந்து வீதியிலுள்ள துன்பந்தீர்க்கும் கலியுக தெய்வமான ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்திலிருந்து

**ஞானகணேஸ்வரி அம்மன்**

அவர்கள் 17.04.2005 முதல் 20.04.2005 வரை யாழ்ப்பாணத்தில் அருள் வாக்குக் கூறவுள்ளார்.
விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய இடம்:

**ஞானவைரவர் ஆலயம்,**
கலாசாலை வீதி, 2ஆவது ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

பூசை நேரம்: *காலை 10.30 மணி*
*மாலை 5.30 மணி*

(44269) (39-21-18)

## BARATHY

**சித்தன்கேணி**

இப்பிரதேசத்தில் பொருளியற் பாடத்தில் உள்ள கற்பித்தல் குறைபாட்டினை தீர்க்க, சித்தன்கேணியில் எனிமேல் என்றும் பொருளியல்: **திரு.மகேந்திரன்**

**A/L 2006**

☆ பேரினப் பொருளாதாரம்
☆ பகுதி II - பணம், வங்கி, விலைமட்டம்

**A/L 2007**

அலகு I பொருளியல் அறிமுகம்.
அனுமதியினை பெற்றுக்கொள்ளவும்.

குறிப்பு:
பல ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு கல்வி கற்பித்த பிரபல பொருளியல் ஆசிரியருடைய வகுப்பு மிக நீண்ட இடை வெளிக்குப் பின் ஆரம்பிக்கின்றதையிட்டு மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

(44194)(32-21-18)

## BARATHY

**சித்தன்கேணி**

**A/L 2007**

கலை-வர்த்தகப் பிரிவுகள் புதிய பிரிவு ஆரம்பமாகி நடைபெறுகின்றது. நீங்கள் நன்கு அறிந்த பிரபலமிக்க ஆசிரியர் குழுவினால் -

| | |
|---|---|
| பொருளியல் | - திரு.மகேந்திரன் |
| கணக்கீடு | - திரு.முகுந்தன் |
| வணிகக்கல்வி | - திரு.பசில் |
| தமிழ் | - திரு.பாலா |
| இந்துநாகரிகம் | - திரு.சுரேஸ் |
| அளவையியல | - திரு.R.P.சர்மா |
| இந்துசமயம் | - திரு.தரன் |
| புவியியல் | - திரு.குமரன் |
| அரசியல் | - திரு.றஜீவன் |
| நாட.அரங் | - திரு.சுதன் |
| கிறிஸ்தவம் | - திரு.வசந்தன் |
| வரலாறு | - திரு.பத்மன் |
| ஆங்கிலம் | - திரு.நிஷாந்தன் |

**O/L DAY CLASS**

திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி காலை 8-12 மணிவரை.
**பிரிவு - I ஆரம்பமாகி நடைபெறுகின்றது.**
90 மாணவர்களுக்கு மட்டும்தான் அனுமதி வழங்கப்படும்.

(44218)(21-32-18)

# பொருளியற் கல்லூரி

பெருமாள் கோயில் அருகில் - இணுவில் மத்திய கல்லூரி அருகில்
நாவலர் றோட், யாழ்ப்பாணம். கே.கே.எஸ்.றோட், இணுவில்.

(இரு இடங்களிலும்)
**மீண்டும் ஒரு புதிய பிரிவு**

**A/L 2007** கலை- வர்த்தகப் பிரிவுகள் சனி, ஞாயிறு

எமது தனித்துவம் பெற்ற ஆசிரியர் குழுவினால

| A/L 2007 | யாழ் நகரில் | இணுவிலில் |
|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | மகேந்திரன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| அளவையியல் | R.P.சர்மா | R.P.சர்மா |
| புவியியல் | குமரன் | குமரன் |
| இந்துசமயம் | தரன் | தரன் |
| நாட.அரங்கியல் | சுகந்தன் | சுதன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| வரலாறு | பத்மன் | பத்மன் |
| அரசியல் | றஜீவன் | றஜீவன் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் |

(44195) (39-21-18)

யாழ்நகரில்- கலைப்பிரிவு - வர்த்தகப்பிரிவு - 9.00 a.m. (ப.நே.)
இணுவிலில்- கலைப்பிரிவு - 8.00 a.m. வர்த்தகப் பிரிவு- 3.00 p.m.

# மரண அறிவித்தல்

## திருமதி பவளம் கணபதிப்பிள்ளை



நவிண்டிலைப் பிறப்பிடமாகவும், தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளம் கணபதிப் பிள்ளை அவர்கள் 12.04.2005 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் அமரர் கணபதிப்பிள்ளை (உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டர்) அவர்களின் பாரியாரும் பிரமிளா (மாலா), சௌந்தரநாதன் (சௌந்தர்-சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அமரர் சுகுமார், மேகலா (சுவிஸ்) ஆகியோரின் அன்புமிகு மாமியாரும் சுஜீவன் (இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி), வைஷ்ணவி (இராமநாதன் மகளிர் கல்லூரி), சிதூஷ், விதூஷ் ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் மலரஞ்சலிக்காக 13.04.2005 மற்றும் 15.04.2005 ஆகிய திகதிகளில் மஹிந்த மலர்ச்சாலை கல்கிசையில் வைக்கப்பட்டு, மாலை 5.00 மணியளவில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி பி.சுகுமார்
43/162, வைத்தியா வீதி, தெஹிவளை.
தொ.இல: 011-2729640, 0773-131399
(C/42322)(21-32-18)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## தீர்க்கமான முடிவு எடுக்கும் காலகட்டம்

ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் நீண்டகால விஜயத்தை முடித்துக்கொண்டு விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல் குழு பெரும்பாலும் நாளை வன்னி திரும்பும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அக் குழுவுக்குத் தலைமை வகித்துச் சென்ற விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை அடுத்த ஓரிரு தினங்களில் கிளிநொச்சியில் வைத்து நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் சந்திக்கவுள்ளார்.

அப்போது, ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்குரிய பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு எடுக்கப்படவேண்டிய முன்முயற்சிகள் குறித்து ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக் குழுவினர் நோர்வேயிலும், பிற ஐரோப்பிய நாடுகளிலும் தொடர்சுற்றுப் பயணங்களை மேற்கொண்டிருந்த இச் சமயத்தில், நோர்வே அனுசரணை அணியின் விசேட பிரதிநிதியான எரிக் சொல்ஹெய்மும், ஏனைய பிரதிநிதிகளும் அவ்வப்போது அவர்களுடன் தொடர்ந்து தொடர்புகளைப் பேணி வந்தனர்.

அப்படிக் கருத்துப் பரிமாறல்களைப் பேணிவந்த நிலையில், சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நாடு திரும்பிய கையோடு உடனடியாக மீண்டும் அவர்களைக் கிளிநொச்சியில் வந்து சொல்ஹெய்ம் ஏன் சந்திக்க வேண்டும்? இந்த இரண்டொரு நாள்களில் புதிதாக என்ன மாற்றங்கள் - புலிகள் தரப்பிலிருந்து - வந்துவிடப் போகின்றன? - என்ற கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாதது.

பொதுக்கட்டமைப்பு விவகாரம் தொடர்பாக, பல்வேறு யோசனைகள் - ஆலோசனைத் திட்டங்கள் - சு.ப.தமிழ்ச்செல்வன் குழுவினர் நோர்வேயிலும் பிற ஐரோப்பிய நாடுகளிலும் சுற்றுப் பயணம் செய்த காலத்தில் அவர்களோடு நோர்வே அனுசரணைக் குழுவினரால் பரிமாறப்பட்டன. அவை குறித்து மட்டுமல்லாமல் உத்தேச இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை, இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு ஆகியன குறித்தெல்லாம் - தாம் அரசியல் சுற்றுப் பிரயாணம் செய்த நாடுகளில் எல்லாம் - அந்நாடுகளின் தலைவர்களோடும் அதிகாரிகளோடும் ஆலோசனை கலந்து, அத்தரப்புகளின் நிலைப்பாடுகளை அறிந்து, புலிகளின் அரசியல் குழுவினர் திரும்புகின்றனர்.

தமது ஐரோப்பியச் சுற்றுப் பயண சமயத்தில் பொதுக் கட்டமைப்பு ஏற்பாடுகள் தொடர்பாக நோர்வே அனுசரணைத் தரப்போடும், பிறநாடுகளின் தலைவர்களோடும் தாம் ஆராய்ந்த விடயங்களை அரசியல் விவகாரக் குழுத்தலைவர் சு.ப.தமிழ்ச்செல்வன் நாளை நாடு திரும்பியதும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடம் தெரிவிக்கவிருக்கின்றார்.

தலைவர் பிரபாகரனோடு ஆற அமர இருந்து இவ் விடயங்கள் குறித்து ஆலோசித்த பின்னர், அவரின் வழிகாட்டலோடு - முடிவோடு - தீர்மானத்தோடு - எரிக் சொல்ஹெய்மை, சு.ப.தமிழ்ச்செல்வன் அடுத்த வார முற்பகுதியில் சந்திப்பார்.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் -

ஒருபுறம் நோர்வேத் தரப்பின் ஊடாக ஸ்ரீலங்கா அரசுத் தரப்பின் நிலைப்பாட்டையும், மறுபுறம் நேரடியாகச் சென்று, சுற்றுப்பிரயாணம் செய்து பெற்ற பட்டறிவின் மூலம் கற்றறிந்து கொண்ட ஐரோப்பிய நாடுகளின் நிலைப்பாட்டையும் உள்வாங்கிக் கொண்டு இது சம்பந்தமான முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர் புலிகள்.

ஆழிப்பேரலை தாக்கி நான்காவது மாதம் இது. இன்னும் நான்கு, ஐந்து மாதங்களில் மாரி மழை பிடித்து விடும். அதற்கு முன்னர் விரைந்து ஆழிப்பேரலையால் அவலமுற்று, நிர்க்கதியாகி நிற்கும் பல்லாயிரக்கணக்கான கரையோர மக்களுக்கு அடிப்படைக் கட்டுமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய அவசரமும் அவசியமும் எழுந்துள்ளது.

இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய பொதுக்கட்டமைப்புக் குறித்து, அதன்பங்கு - பணி பற்றி, அதன் அதிகார வரம்புகள் மற்றும் கையாளும் விடயங்கள் சம்பந்தமாக, அரசுத் தரப்பு கடைப்பிடிக்கும் இறுக்கமான நிலைப்பாட்டுக்கு மத்தியிலேயே இவ் விடயத்தில் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் புலிகள்.

ஆழிப்பேரலைத் தாக்கத்தில் அழிந்துபோன பிரதேசத்தை மீளக்கட்டியெழுப்பும் பணி கடலோடும், கடற்கரைப் பிரதேசத்தோடும் சம்பந்தப்பட்டது. அந்த மீள் கட்டுமானப்பணியை முன்னெடுக்கும்போது அப்பிரதேசம் தொடர்பான விடயங்களைக் கையாள்வது தவிர்க்க முடியாதது. நாட்டின் இறைமை, ஆளுமை என்று கூறிக்கொண்டு அப்பணியை முன்னெடுக்கும் பொறுப்பை உத்தேசப் பொதுக்கட்டமைப்பிடம் கையளிக்க மறுப்பது ஏற்கமுடியாததாகும். இவ்வாறு 'அடம் பிடிக்கும்' அரசின் போக்குக்கு மத்தியிலேயே இவ்வாறு இராஜதந்திர நகர்வுகளை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர் புலிகள். அந்த வகையில், உள்நாட்டு அரசியல் போக்கில் இந்த வாரம் முக்கியத்துவம் பெறுகின்றது.

# வியாபாரிமூலையில் நிறுவப்பட்ட 15 வீடுகள் புதனன்று கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.16

சிறுவர் பாதுகாப்பு நிதியமும் அறவழிப் போராட்டக்குழுவும் இணைந்து பருத்தித்துறை வியாபாரி மூலையில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்காக அமைத்த 15 வீடுகளைக் கையளிக்கும் வைபவம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

அறவழிப் போராட்டக்குழுத் தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சுனாமி அனர்த்தச் செயலணியின் பணிப்பாளர் பாலையாவும் சிறப்பு விருந்தினராக சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் பங்காளித்துவ முகாமையாளர் திருமதி ஞானச்செல்வி சிங்கேஸ்வரனும் கலந்துகொண்டனர்.

இந்த 15 வீடுகளின் பயனாளிகளுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் சமையல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இதேவேளை -

அறவழிப் போராட்டக்குழு பிரான்ஸ் நாட்டிலுள்ள மக்களின் உதவியுடன் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு வானொலிப் பெட்டிகள், பாவனைப் பெட்டிகள், சைக்கிள்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள் என்பவற்றையும் வழங்கியுள்ளது.

(ஜ-7)

## வெடிக்காத நிலையில் 4 எறிகணைகள் நுணாவில் மத்தியிலிருந்து மீட்பு

தென்மராட்சி, ஏப்.16

சாவகச்சேரி, நுணாவில் மத்தியில் உள்ள காணியொன்றில் இருந்து வெடிக்காத நிலையில் நான்கு எறிகணைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

காணியைத் துப்புரவு செய்த போது நான்கு எறிகணைகளும் ஓரிடத்தில் வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது.

அப்பகுதியில் உள்ள சபாநாயகம் இளங்கோ என்பவரின் காணியிலேயே இவை கண்டுபிடிக்கப்பட்டன என்றும்-

இக்காணியில் முன்னர் படையினரின் காவலரண்கள் இருந்தன என்றும்-

சேதமடைந்த நிலையில் காணப்பட்ட காவலரண்களைத் துப்புரவு செய்த போதே எறிகணைகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது என்றும் கூறப்பட்டது. (எ-117)

## பிரதேச மட்ட பிரச்சினைகளைத் தீர்க்க மத்தியஸ்தர் சபைகள் நிறுவப்படும்

பிரதேச மட்டத்தில் உருவாகும் பிரச்சினைகளை பேச்சுக்கள் மூலம் தீர்க்கும் பொருட்டு யாழ்.மாவட்டத்தில் 10 மத்தியஸ்தர் சபைகள் அமைக்கப்படவுள்ளன.

இச்சபைகளுக்கென ஏற்கனவே, பிரதேச செயலகங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சை மத்தியஸ்தர் சபையின் ஆணைக்குழுவினால் நடத்தப்படவுள்ளது.

நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ள பிரதேச செயலர் பிரிவு, திகதி, நேரம் பற்றிய விவரம் வருமாறு:

எதிர்வரும் 18 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாண பிரதேச செயலகத்திலும் -

19 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு வேலணை பிரதேச செயலகத்திலும் பிற்பகல் 2.30 மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திலும் 20 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு சங்கானை பிரதேச செயலகத்திலும் பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்திலும் நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

(எ-76-204)

### மீசாலை விக்னேஸ்வராவில் கல்வி கற்கும்

## இருபது வறிய மாணவர்களுக்கு மாதாந்தம் கல்வி ஊக்குவிப்பு நிதி

தென்மராட்சி, ஏப்.16

மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 20 மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மாதாந்தம் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

பிரிட்டனில் வசிக்கும் மீசாலை மேற்கைச் சேர்ந்த மூன்று குடும்பங்கள் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஊடாக இந்த நிதியை வழங்கவுள்ளன.

இவ்வித்தியாலயத்தில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 20 மாணவர்களுக்கு மாதாந்தம் இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டது.

பிரிட்டனில் வசிக்கும் இரத்தினகுமார், விஜயரஞ்சனி, வேணுகோபன் மைதிலி, ஜெயசான் ஸ்ரீரஞ்சினி ஆகியோரே இந்த நிதியினை மாணவர்களுக்கு வழங்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-117)

## 330 மீன்பிடிக்கலங்கள் இதுவரை புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.16

ஆழிப்பேரலையின்போது வடமராட்சி பிரதேசத்தில் சேதமடைந்த 330 மீன்பிடிக்கலங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

நீரியல் வளத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகபீடங்கள் இதனைத் தெரிவித்தன.

சுனாமி தாக்கத்தின் போது வடமராட்சிப் பிரதேசத்தில் சேதமான மீன்பிடிக்கலங்களில் திருத்தக்கூடிய நிலையிலுள்ள அறுநூறு மீன்பிடிக்கலங்கள் இனங்காணப்பட்டன. அவற்றில் முதற்கட்டமாக, 330 மீன்பிடிக்கலங்கள் தற்போது திருத்தப்பட்டுள்ளன.

நோர்வே மக்கள் நிதியம் 315 மீன்பிடிக்கலங்களையும், யாழ்.மாவட்ட கடற்றொழில் பயிற்சிக் கல்லூரி 15 மீன்பிடிக்கலங்களையும் தமது நிதியுதவியுடன் திருத்திக் கொடுத்துள்ளன.

மிகுதியாகவுள்ள 270 மீன்பிடிக்கலங்களும் அடுத்த கட்டமாகத் திருத்திக் கொடுக்கப்படும் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (எ-7)

## உதவி கேட்டு சிறுவனின் சைக்கிளில் ஏறியவர் கைப்பையை அபகரித்துக் கொண்டு ஓடித்தப்பினார்

### ஊர்காவற்றுறையில் கடந்த சனியன்று சம்பவம்

ஊர்காவற்றுறை, ஏப்.16

வீதியால் சென்றுகொண்டிருந்த சிறுவனின் சைக்கிளில் உதவி கேட்டு ஏறிய நபர், சிறுவன் வைத்திருந்த ஆறாயிரம் ரூபா பணத்தை அபகரித்துக் கொண்டு தலைமறைவாகினார்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை ஊர்காவற்றுறையில் நடைபெற்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கக் கிளை ஒன்றில் கிளை முகாமையாளராகக் கடமையாற்றும் ஒருவர் தனது கிளையில் நாளாந்த விற்பனை மூலம் பெறப்பட்ட பணத்தை மகனிடம் கொடுத்து தலைமையலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கூறியுள்ளார்.

இதன்படி, சிறுவன் தந்தையார் கொடுத்துவிட்ட பணம் அடங்கிய கைப்பையை சைக்கிளில் முன்னால் பொருத்தப்பட்டிருந்த கூடையினுள் வைத்து எடுத்துச் சென்றுள்ளான்.

இதன்போது, ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றிற்குச் சமீபமாகச் சிறுவனை வழிமறித்த நபர் தன்னை ஏற்றிச் செல்லுமாறு கூறவே சிறுவனும் மறுபேச்சின்றி ஏற்றிச் சென்றுள்ளான்.

எனினும், சிறிது நேரம் சென்றதும் மேற்படி நபர் சைக்கிளை விட்டு இறங்கும்போது கூடையினுள் இருந்த கைப்பையையும் எடுத்துக்கொண்டு இறங்கியுள்ளார்.

இதனை அவதானித்த சிறுவன், கூக்குரலிடவே குறித்த நபர் பற்றைகளினூடாக ஓடி தலைமறைவாகியுள்ளார். இது குறித்து ஊர்காவற்றுறை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(எ-6)

## அனலைதீவு இறங்குதுறையில் புதிதாகப் பயணிகள் தங்குமடம்

### ஐயனார் ஆலய பரிபாலன சபை நிறுவும்

ஊர்காவற்றுறை, ஏப்.16

அனலைதீவு இறங்குதுறையில் பயணிகள் தங்குமடம் ஒன்று அனலைதீவு ஐயனார் ஆலய பரிபாலன சபையினால் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கென மேற்படி ஆலய பரிபாலன சபையினால் ஒன்றரை லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் தி.நடனசிகாமணி தெரிவித்தார்.

தற்சமயம் அனலைதீவு இறங்குதுறைக்குச் சமீபமாக ஏற்கனவே, நிர்மாணிக்கப்பட்டிருந்த பயணிகள் தங்குமடத்தை கடற்படையினர் தமது முகாமாகப் பாவித்து வருகின்றனர்.

இதனால், இறங்கு துறையில் பயணிகள் வெய்யில் மற்றும் மழைக்காலங்களில் ஒதுங்குவதற்கு இடமின்றிப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனைக் கருத்திற்கொண்டே இறங்குதுறையில் புதிய தங்குமடம் ஒன்றைப் பயணிகள் நலன்கருதி நிர்மாணிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார். (எ-16)

### உதயவாக்கு

மனிதனின் தன்மையே அவன் அடையும் வெற்றிகளுக்கெல்லாம் அடிப்படை. - ஆலன்ஜேம்ஸ்

### நாளை

*சித்திரை 04*
*ஞாயிற்றுக்கிழமை*
*17.04.2005*
*திதி : அட்டமி*
*முற்பகல் 09.44 வரை*
*நட்சத்திரம் : பூசம்*
*பின்இரவு 12.10 வரை*
*ஸ்ரீராம நவமி*
*சுபநேரம் : 09.04 - 10.34*
*ராகுகாலம் : 04.34 - 06.04*
*(யாவும் பழைய நேரப்படி)*

## சதாவதானியின் 98 ஆவது ஆண்டு விழா: 'உதயன்' அனுசரணையில் பரிசில்கள்

யாழ்ப்பாணம், ஏப்.16

சதாவதானி நா.கதிரவேற்பிள்ளையின் 98 ஆவது ஆண்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு பருத்தித்துறை சனசமூக நிலைய அரங்கில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் ந.தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பருத்தித்துறை உதவிப் பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

வடமராட்சி பிரதேச முன்பள்ளி உதவிப் பணிப்பாளர் துரை சத்தியசீலன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

'இன்றைய கல்வியில் மொழியின் பங்கு' என்னும் பொருளில் யாழ். பல்கலைக்கழக கல்வியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

தொடர்ந்து 'இன்றைய தொடர்பு சாதன வளர்ச்சியால் குடும்பத்தில் பெரிதும் விஞ்சுவது குதூகலமா? குழப்பமா?' என்னும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெறும்.

சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை குருபூசைத் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படும்.

இந்தப் போட்டியில் முதலாம் இடத்தை மதிவதனி விநாயகமூர்த்தி (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), இரண்டாம் இடத்தை பரராஜசிங்கம் ரமேஸ் (புலோலி தெற்கு), மூன்றாம் இடத்தை அபிதா ஆதித்தன் (தும்பசிட்டி, புலோலி மத்தி) ஆகியோர் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பரிசில்கள் உதயன் அனுசரணையுடன் வழங்கப்படவுள்ளன.

(எ-204)

# இலங்கையில் இனவெறி என்பது இன ஒழிப்பு அடிப்படையிலானது

ஈழத்தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற சிக்கல் அனைத்துலகப் பிரச்சினையாக ஆக்கப்படும் போதுதான் உரிய பயன் கிடைக்குமென்ற முறையில் தமிழ்ச்செல்வனும் அவர் குழுவும் தென்னாபிரிக்கப் பேராயர் டெஸ்மண்ட் அவர்களைச் சந்தித்தது, வாழ்த்தி வரவேற்க வேண்டிய செய்தி. உலகப்புகழ் படைத்த நெல்சன் மண்டேலா அவர்களுடன் நிறவெறிக்கெதிராகப் போராடியவர்களில் பேராயர் டெஸ்மண்ட் குறிப்பிடத்தக்கவர். இவ்வேளையில் தென்னாபிரிக்காவிலும், இலங்கையிலும் நிலவுகின்ற இனவெறியைப் பற்றியும் ஒப்புநோக்கி மறைந்த சிந்தனைச் சிற்பி கதிரவேற்பிள்ளை கூறிய கூற்று இங்கு நினைவுகொள்ளத்தக்கது. 'Racial discrimination in South Africa is only skin Deep. But in Ceylon it is soul Deep. In South Africa there is racial segregatiom. In Ceylon it is racial liquidation.' இதனை தமிழாக்கம் செய்யின் பின்வருமாறு கூறலாம். தென்னாபிரிக்காவிலுள்ள இனவெறி தோல் அளவில் மட்டுந்தான் உள்ளது. இலங்கையின் இனவெறியோ தமிழினத்தின் ஆன்மாவை அழிக்கின்ற அளவு ஆழமாக உள்ளது. தென்னாபிரிக்காவில் நிலவிய இனவெறி, இன ஒதுக்கல் என்ற முறையில் அமைந்திருந்தது. இலங்கையில் உள்ள இனவெறியோ இன ஒழிப்பு என்ற முறையில் அமைகின்றது. ஆகவே, தான் இலங்கையில் நிலவுகின்ற இனவெறி ஆபத்து மிக்கதென்பதை உணர்த்துகின்ற முறையில் தமிழ்ச்செல்வன் அவர்கள் தென்னாபிரிக்கப் பேராயருடன் உரையாடி உறவுபூண்டு ஈழத்தமிழரின் நிலையை விளக்கியிருப்பது நாம் வாழ்த்தி வரவேற்க வேண்டிய நிகழ்ச்சியாகும்.

**மா.க.ஈழவேந்தன்,**
**நாடாளுமன்ற உறுப்பினர்,**
**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு.**

போராட்டத்தில் சாவு ஏற்படுவது தவிர்க்க முடியாது. ஆனால், ஈழத்தமிழன் ஏன் சாகடிக்கப்படுகின்றான் என்பதை நாம் உணர்த்தியே யாக வேண்டும். அப்போதுதான் நாம் ஏன் சாகடிக்கப்படுகின்றோம் என்பதை உலகம் உணரமுடியும். உலகின் கருத்தினை எம்மால் ஈர்க்கின்ற முறையில் தென்னாபிரிக்காவில் மட்டுமல்ல, உரோமின் கத்தோலிக்கத் தலைமைப்பீடத்துடனும் தொடர்புகொண்டு எம் நிலையை விளக்கியிருப்பது எம் காலத்தின் தேவையை நிறைவுசெய்கின்ற பணியாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளை வெறும் பயங்கர வாதிகள் என்று கூறி திசைதிருப்பும் முயற்சியில் எவரும் இனி ஈடுபட முடியாது. நாம் ஏன் ஆயுதம் தாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டோம் என்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் பக்குவமான, பயனுள்ள, தகுதி வாய்ந்த தூதுவமொழியில் பேசி வருவது நாம் ஈட்டிய மற்றுமொரு வெற்றியாகும்.

இனிமேலும், இலங்கையில் போர் வெடிக்குமாயின் அதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளோ, தமிழர்களோ பொறுப்பாளிகளல்ல. பொறுப்பற்ற முறையில் இயங்கும் சிங்கள வெறியாட்டத்தின் விளைவே மீண்டும் போர் மூள்வதற்கு காரணம் என்பதை தமிழ்ச்செல்வனின் உலகச் சுற்றுப்பயணம் எடுத்து விளக்குகின்றது. எனவே, தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெறுகின்ற இந்த உலகச் சுற்றுப்பயணம் எமக்கு வெற்றியளித்துள்ளதென்றே நாம் கருதுகின்றோம்.

ஈழத்தமிழர் சிக்கல் அனைத்துலகச் சிக்கலாக்கப்பட வேண்டும் என்று கூறி, மறைந்த எம் மதியுரைஞர் நாட்டுப்பற்றாளர் தில்லைக்கூத்தன் அவர்களின் கனவும் ஓரளவு நனவாகி வருவது நயக்கத்தக்க செயலாகும். ★

## நான்கு பட்டதாரிகள் பயிற்சிக்குத் தெரிவு

யாழ்ப்பாணம்,ஏப்.16

பட்டதாரிகள் பயிற்சி நியமனத்தின்போது நியமனம் வழங்கப்படாத நிலையில் தவறவிடப்பட்ட பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 4 உயர் தேசிய கணக்கியல் பட்டதாரிகள் பயிற்சிக்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பட்டதாரிகள் தவறவிடப்பட்டமை தொடர்பாக யாழ்.மாவட்ட உயர் தேசிய கணக்கியல், வர்த்தக, முகாமைத்துவ பட்டதாரிகள் சங்கம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் மேன்முறையீடு செய்திருந்தது.

இதன்பிரகாரம் ஏ.பிரசாந்தி (தும்பளை), எஸ்.சியாமளா (புலோலி), ஆர்.சாந்தகுமார் வல்வெட்டித்துறை), எஸ்.சுதாகர் (வல்வெட்டித்துறை) ஆகியோர் நிதி திட்டமிடல் அமைச்சினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் பட்டதாரிகள் பயிற்சிக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (எ)


**BITSMANS**
**கல்வி நிறுவனம், மானிப்பாய்.**
A/L 2007 — கணிதம், உயிரியல் வகுப்புகள்

| | |
|---|---|
| * பௌதிகம் | திரு.ஜோசீலன் |
| * இரசாயனம் | திரு.N.மகேஸ்வரன் |
| * இணைந்த கணிதம் | திரு.பிரதீபன் |
| * உயிரியல் | திரு.ஞானேந்திரன் |
| | திரு.தயாபரன் |

ஆரம்பம்: 17.04.2005 ஞாயிறு 4.30 p.m. (44242)(21-17-18)


# சுனாமி பாதித்த வடமராட்சி மீனவருக்கு கண்ணாடி இழைப் படகுகள் கிடைக்கும்

## நீரியல் வளத் திணைக்கள அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,ஏப்.16

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பிரதேச கடற்றொழிலாளர்களுக்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் கண்ணாடி இழைப் படகுகளை வழங்கவுள்ளன.

இவ்வாறு தெரிவித்தார் நீரியல் வளத் திணைக்களத்தின் யாழ்.அலுவலகப் பரிசோதகர் து.விக்னேஸ்வரன்.

ஆழிப்பேரலையில் முற்றாகச் சேதமடைந்த மீன்பிடிப் படகுகளுக்குப் பதிலாக இந்தப் படகுகள் வழங்கப்படவுள்ளன.

அரசசார்பற்ற நிறுவனங்களான மனித உரிமை நிதியம் 30 படகுகளையும், 'ஒக்ஸ்பாம்' நிறுவனம் 40 படகுகளையும், ஐக்கிய நாடுகள் நிதியம் 250 படகுகளையும், 'கரித்தாஸ்' நிறுவனம் 200 படகுகளையும், 'போரூட்' நிறுவனம் 33 படகுகளையும் 'கெயர்' நிறுவனம் 170 படகுகளையும் வழங்கவுள்ளது.

இதேவேளை - இதுவரை 188 படகுகள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் 'கியூமெடிக்கா' 154 படகுகளையும், 'ஜி.ரி.இசற்' 15 படகுகளையும் தென்னிந்தியத் திருச்சபை 9 படகுகளையும் பட்டினிக்கு எதிரான நிறுவனம் 10 கட்டுமரங்களையும் வழங்கியுள்ளன - என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-7)


**C.C.A சுன்னாகம்**
2007 கலை, வர்த்தகம் வகுப்புகள்

| | |
|---|---|
| பொருளியல் | - உதயன் |
| அளவையியல் | - சயந்தன் |
| கணக்கீடு | - தவா |
| தமிழ் | - பத்மநாதன் |
| வணிகக்கல்வி | - முரளி |
| நாடகம் | - ற்மேஸ் |
| இ.நாகரிகம் | - சுரேஸ் |
| புவியியல் | - கிஸ்ணா |

ஆரம்பம் - 16.04.2005 சனி. 6.30 a.m (40738)(21-17-18)


## தையல் பயிற்சி நிலையம்

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவில் மாதர் தையல் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் நெடுந்தீவு மத்தியில் இந்தப் பயிற்சி நடைபெற்று வருகிறது. (எ-112)

## பொதுசன உதவிப்பணம்

வலி.தென்மேற்கு,ஏப்.16

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மாதாந்தப் பொதுசன உதவிப் பணம் பெறுபவர்களுக்கு ஏப்ரல் மாதத்திற்கான கொடுப்பனவு அந்தந்தத் தபால் அலுவலகங்களுக்கு இவ்வாரம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தத்தமது பிரிவுத் தபால் அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு இக்கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று வலி.தென்மேற்குப் பிரதேச செயலக பிரிவுச் சமூகசேவை உத்தியோகத்தர் தெரிவித்தார். (எ-135)

## சாவகச்சேரி நகரசபைப் பிரிவில் விரைவில் குடிதண்ணீர் வழங்கும் திட்டம்

சாவகச்சேரி,ஏப்.16

சாவகச்சேரி நகரசபை பொதுமக்களுக்கான குடிதண்ணீர் விநியோகப் பணியை மிக விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

சாவகச்சேரி நகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிதண்ணீர் விநியோகப் பணி நடைமுறைப்படுத்தப்படும்.

இத்திட்டத்திற்கென 'நிக்கொட்' நிறுவனம் தண்ணீர் பவுஸர் ஒன்றை நகரசபைக்கு வழங்கியுள்ளது. இந்தநிறுவனம் ஏற்கனவே நகரசபைக்கு தண்ணீர் பம்பியை வழங்கியிருந்தது.

மேற்படி குடிதண்ணீர் வழங்குதல் நடைமுறைப்படுத்தப்படுமானால், பெரும்பாலான குடும்பங்கள் இதன்மூலம் நன்மை பெறக்கூடியதாக இருக்கும் என நகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை - சாவகச்சேரி நகரசபை வளாகத்தில், 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள நீர்த்தாங்கியில் இருந்து குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது. (எ-31)


**BITSMANS**
கல்வி நிறுவனம் மானிப்பாய்
A/L 2007 கலை, வர்த்தக வகுப்புகள்

| | |
|---|---|
| தமிழ் | - N.பாலா |
| அளவையியல் | - R.P.சர்மா |
| புவியியல் | - S.ஜெகன் |
| நாட.அரங்கியலும் | - சுதன் |
| இந்துநாகரிகம் | - N.பாலா |
| வரலாறு | - செல்வி குமுதா |
| பொருளியல் | - P.சண் |
| கணக்கீடு | - N.ராஜன், வில்சன் |
| வணிகக்கல்வி | - உமாகாந் |

ஆரம்பம்: 16/04/2005 சனி 10.30 am.

**Organ/Violin Notes**
எமது புதிய வெளியீடுகளாக இசைக்குறிப்புகள் பாகம் 36, கேள்விஞானம் ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன,
S.S.Rajeendran,
Karaweena Isai Manram,
75, Temple Rd, Nallur, Jaffna.
T.P. 0713055991
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500மீ தெற்கே) (44150)

**விற்பனைக்கு**
* 10- நம்பர் டை மெஷின்
* 6- நம்பர் டை மெஷின்
* 3- நம்பர் டை மெஷின்
* டபிள் கியர் டபிள்றோளர் மெஷின் (புதியது)
* Coire டை (20)
* 145 டை
* 1 பெரல் மெஷின்

ஆகியவை எம்மிடம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: E.S.K,
232, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்,
T.P.: 077 6032188
(44154)(21-17-18)

**D.C.M.**
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ஆனைப்பந்தி இந்து குருகுலம் முன்பாக)
A/L 2007 பிரிவு 02
கலை வர்த்தகம்
ஆரம்பம்:
16 ஏப்ரல் 2005 – சனி காலை 7.00 மணி
D.C.M. இயக்குநர் S.சிறீதரன்

ஓம் வீராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!
**பாராட்டி வாழ்த்துகின்றோம்**
இளங்கலை வேந்தன்,
**வேலுப்பிள்ளை சிதம்பரநாதன் (பொன்னர்)**
அவர்கள் கலாபூஷணம் விருதுபெற்றமையைப் பாராட்டியும் அவர் நாடகத்துறையிலும் கைத்தொழில் துறையிலும் மேன்மேலும் வளர்ச்சி பெற்று, சீரும் சிறப்புற வாழவேண்டுமென்று மனதார வாழ்த்தும் உள்ளங்கள்
த.குகதாசன்,
க.ஜெகன்,
வ.கஜேந்திரன்.
காளி கோயிலடி,
உடுவில். (41244)(21-17-18)

**C.C.A சுன்னாகம்**
O/L DAY CLASS
ஆரம்பம்
18.04.2005
(திங்கள்)
8.00 a.m. (40738)

**மின்சாரத் தொழிற்கருவிகளுக்கான ஏக விநியோகத்தர்கள் தேவை**
இத்தொழிற்றுறையில் தேர்ச்சியும் அனுபவமும் கொண்டவர்கள் தயவுசெய்து இன்றிலிருந்து 14 நாள்களுக்குள் விண்ணப்பங்களைப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
C/O.விளம்பர இலக்கம்: 2555,
உதயன்,
யாழ்ப்பாணம். (44129)(21-17-18)


## மீளக்குடியமர்ந்தோருக்கு உதவிப் பொருள்கள்

நெடுந்தீவு,ஏப்.16

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் உதவியுடன் அண்மையில் இந்தியாவிலிருந்து விமானம் மூலம் நாடு திரும்பி நெடுந்தீவுப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்தவர்களுக்குப் பாவனைப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் இந்தப் பொருள்களை வழங்கியுள்ளது.

நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனையில் வைத்து இந்த உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன என உதவி அரச அதிபர் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-112)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி சுப்பிரமணியம்



நல்லூர் தெற்கைச் சேர்ந்த திருமதி அன்னலட்சுமி சுப்பிரமணியம் அவர்கள் 2005.04.14 வியாழக்கிழமை ஜேர்மனியில் காலமாகிவிட்டார். அன்னார் சோமசுந்தரம் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் சுபாசினி, சுபாஸ்கர், அனங்கன் ஆகியோரின் அன்புத் தாயாரும் மகேந்திரனின் அன்பு மாமியாரும் இராசையா - பூரணம் தம்பதிகளின் அன்பு மகளும் கோகிலலட்சுமி, மகேந்திரன், அரிச்சந்திரன், சந்திரமோகன், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பரமசாமி, Dr.கந்தையா மற்றும் இராமசாமி, பேரின்பநாயகம், இராகுலன், கமலாதேவி, சுகந்தினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

34/2 கச்சேரி,
நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (44249)(21-17-18)

தகவல்:
இ.மகேந்திரன்
(இ.மி.ச.யாழ்ப்பாணம்)

# பார்த்திப வருடப் பலன்கள்

## தனுசு

தனுசு ராசி அன்பர்களே! இந்தத் தமிழ்ப் புத்தாண்டு சுமாராக இருக்கும். ஆண்டின் தொடக்கத்தில் சிற்சில பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டி வரலாம். ஆனால், அது படிப்படியாக மறைந்து பிற்பகுதியில் முன்னேற்றங்கள் பல காணலாம். தற்போது சனி பகவான் 7ஆம் இடமான மிதுனத்தில் உள்ளார். இது சிறப்பானது அல்ல. அவர், குடும்பத்தில் பிரச்சினையை ஏற்படுத்திக்கொண்டிருப்பார். அந்த சனி ஜூன் 26ஆம் திகதி கடகத்திற்குச் செல்கிறார். இது அஷ்டமனம் ஆகும். இதுவும் சிறப்பான இடம் அல்ல. அதனபின் அவர் உங்கள் முயற்சிகளில் தடைகளை ஏற்படுத்துவார். நிழல் கிரகங்களான ராகுவும் கேதுவும் இந்த ஆண்டு முழுவதும் நன்மை செய்யும் இடத்தில் இல்லை. ராகு 4ஆம் இடத்தில் நின்று உங்களை அலைக்கழிக்கலாம். கேது 10இல் இருந்து எதிரிகளால் இன்னலை உருவாக்கலாம். இன்னோர் அதிமுக்கியமான கிரகமான குருபகவான் தற்போது கேதுவுடன் இணைந்திருப்பது அவ்வளவு சிறப்பு அல்ல. அவர் பொருள் விரயத்தை ஏற்படுத்தலாம். ஆனாலும், அவரது 5ஆம் இடத்துப் பார்வையால் உங்களுக்கு வரக்கூடிய பிரச்சினைகளைத் தடுத்து நிறுத்தி வெற்றி கொள்ளச் செய்வார். குருபகவான் செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி பெயர்ச்சி அடைந்து 11ஆம் இடம் வருகிறார். இது உன்னத நிலை ஆகும். அதன்பின் அவர் பல்வேறு விதத்தில் உங்களை உயர்வுக்குக் கொண்டு வருவார்.

மேற்கண்ட நிலையில் இருந்து பார்க்கும்போது ஆண்டின் முற்பகுதியில் குருவின் பார்வையாலும் பிற்பகுதியில் குருவின் பலத்தாலும் நன்மைகள் பெறலாம். மேலும் சூரியன், செவ்வாய், புதன், சுக்கிரன், சந்திரன் ஆகிய கிரகங்களினால் அவ்வப்போது நன்மை கிடைக்கப்பெறலாம்.

ஏற்கனவே, நாம் கூறியபடி எந்தக் காரியத்தையும் சிறப்பாகச் செய்துமுடிக்கச் சற்றுச் சிரத்தை எடுக்கவேண்டிவரும். எதிரிகளின் இடையூறு அவ்வப்போது தலைதூக்கலாம். ஆனால், குருவின் 5ஆம் இடத்துப் பார்வையால் எதையும் முறியடித்து வெற்றி காண்பீர்கள். பொருளாதார வளம் சீராக இருக்கும். செலவுகள் அதிகரிக்கலாம். எனவே, சிக்கனம் தேவை. செப்ரெம்பருக்குப் பிறகு உங்கள் செல்வாக்கு உயரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். வீடு, மனை வாங்க யோகம் பிறக்கும்.

குடும்பத்தில் நிலைமை சிறப்படையும். தேவைகள் பூர்த்தியாகும். தம்பதியினரிடையே அன்பு நீடித்தாலும் வீட்டில் சிற்சில பிரச்சினைகள் வந்து மறையும். ஆனால், ஜூன் மாதத்திற்குப் பிறகு பிரச்சினை அகலும். பிரிந்திருந்த குடும்பம் ஒன்று சேரும். மேலும் இது தொடர்பாகக் குடும்பத்தை வெளியூர் மாற்றும் சூழ்நிலை உருவாகலாம். செப்ரெம்பருக்குப் பிறகு திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடக்கும். தடைப்பட்டு வந்த திருமணம் கைகூடும். சிலர் வசதியான வீட்டுக்குக் குடிபுகுவர். வாகன சுகம் கிடைக்கும்.

உத்தியோகம் பார்ப்பவர்கள் தற்போது சீரான நிலையில் இருக்கிறீர்கள். குருவின் பார்வையால எந்த இடையூறையும் சமாளித்து வெற்றிநடைபூண்டு வருகிறீர்கள். ஆனாலும், உங்களுக்குள் ஏதோ ஒரு மனக்குறை வருத்திக்கொண்டிருக்கும். சிலர் சுதாகரிப்பும் விவேகமும் இல்லாததால் பொறுப்பை இழக்க நேரிடலாம். செப்ரெம்பர் மாதத்திற்குப் பிறகு உங்கள் நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள். தடைப்பட்ட பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவை கிடைக்கும். விரும்பிய இடத்திற்கு மாற்றம் பெறலாம். கோரிக்கைகள் நிறைவேறும். வேலை நிமிர்த்தமாகக் குடும்பத்தை விட்டுப் பிரிந்தவர்கள் ஒன்றுசேருவர்.

வியாபாரிகள் சுமாரான நிலையிலேயே இருப்பீர்கள். உழைப்புக்குத் தகுந்த லாபம் கிடைக்கும். புதிய முதலீடு எதுவும் வேண்டாம். எதிரிகள் வகையில் சற்று கண்ணும் கருத்துமாக இருப்பது நல்லது. தீயோர் சேர்க்கையால் அவதிப்பட்டு வந்தவர்கள் ஜூன் மாதத்திற்குப் பிறகு அவர்கள் பிடியில் இருந்து விடுபடுவர். செப்ரெம்பருக்குப் பிறகு சிறப்பான வளர்ச்சி அடைவீர்கள். குறைந்த முதலீட்டில் புதிய தொழில் தொடங்கலாம். பத்திரிகைத் தொழில், தானிய வியாபாரம், மளிகைக் கடை போன்றவை நல்ல லாபத்தைக் கொடுக்கும். கூட்டாளிகளிடையே ஒற்றுமை ஏற்பட்டுத் தொழிலை விருத்தி அடையச் செய்யலாம்.

கலைஞர்கள் முயற்சியின் பேரில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். ஆனால், எதிர்பார்த்த புகழ், பாராட்டு போன்றவை கிடைக்காமல் போகலாம். ஆண்டு இறுதியில் அரசிடமிருந்து விருது, பாராட்டு போன்றவை கிடைக்கப் பெறலாம். பொதுநல சேவகர்கள், அரசியல்வாதிகள் ஆண்டின் பிற்பகுதியில் இழந்த பதவியைப் பெறலாம்.

மாணவர்கள் தற்போது முயற்சிக்கேற்ற பலனையே கண்டுகொண்டு இருப்பீர்கள். சிலர் கெட்டமாணவர்களுடன் சேர்ந்து கல்வியில் தேக்க நிலையை அடைந்திருக்கலாம். அடுதத கல்வியாண்டு மிகவும் சிறந்ததாக அமையும். விரும்பிய பாடங்கள் கிடைக்கும். விவசாயிகள் சுமாரான வருவாயைக் காண்பர்.

பெண்கள் திருப்தியுடன் காணப்படுவீர்கள். ஆண்டின் தொடக்கத்தில் சிற்சில விடயங்களில் வட்டுக்கொடுத்துப் போகவும். உஷ்ணம், தோல தொடர்பான உபாதைகள் வரலாம்.

சனி பகவானுக்கு அர்ச்சனை செய்து வழிபடுங்கள். தினமும் காக்கைக்கு அன்னம் படையுங்கள். சனி பெயர்ச்சி நாளில் சனி பகவானைத் தரிசனம் செய்யுங்கள்.

## மகரம்

மகர ராசி அன்பர்களே! இந்தப் புத்தாண்டுத் தொடக்கமே சிறப்பாக அமைந்துள்ளது. 3ஆம் இடத்தில் இருக்கும் ராகு, 6இல் உள்ள சனி, 9இல் உள்ள குரு ஆகியோர் நற்பலனைத் தந்துகொண்டிருக்கிறார்கள். ராகு ஆண்டு முழுவதும் அதே இடத்தில் இருந்து உங்கள் பொருளாதார வளத்தை மேம்படுத்துவார். காரிய அனுகூலத்தைக் கொடுப்பார். அவர் நன்மை செய்யும்போது கேதுவால் நற்பலனைக் கொடுக்கமுடியாது. அவரின் பிற்போக்கான பலனை ராகு முறியடித்து வெற்றிகொள்ள செய்வார். சனி ஜூன் மாதம் 26 ஆம் திகதிவரை பல்வேறு முன்னேற்றங்களைத் தருவார். அதன்பின் அவர் கடகத்திற குச் செல்கிறார். இது அவ்வளவு சிறப்பு அல்ல. அதிக அலைச் சலை உருவாக்குவார். குரு பகவான் தற்போது 9ஆம் இடத்தில் இருந்து சுபங்களைத் தந்து கொண்டிருக்கிறார். அவர் செப்ரெம்பர் 19ஆம் திகதி துலாம் ராசிக்கு மாறுவது அவ்வளவு சிறப்பு அல்ல. ஆனால், அவரது 5ஆம் இடத்துப் பார்வை சிறப்பாக அமையும்.

மேற்கண்ட நிலையில் இருந்து பார்க்கும்போது ராகு ஆண்டு முழுவதும் நன்மை தருவார். சனியும், குருவும் ஆண்டின் முற்பகுதியிலும் நற்பலனைக் கொடுப்பார்கள். இதுதவிர சூரியன், செவ்வாய், சுக்கிரன், புதன், சந்திரன் ஆகிய கிரகங்கள் அவ்வப்போது நன்மைதரத் தவறமாட்டார்கள். இனி சற்று விரிவான பலனைக் காணலாம். இது உங்களுக்குப் பொற்காலமாக அமையும். சுப கிரகமும், பாவக் கிரகங்களும் உங்களுக்கு நன்மை தரும் காலம். எனவே, இதைப் பயன்படுத்தி முன்னேறுவது உங்கள் கையில். எந்தவொரு முககிய காரியத்தையும் ஜூன் மாதத்துக்குள் தொடங்குங்கள். அதில் நல்ல வளர்ச்சியைக் காணலாம். பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும். தேவைகள் பூர்த்தி ஆகும். வீடு, நிலம் போன்றவை வாங்கலாம். மதிப்பு, மரியாதை அதிகரிக்கும்.

குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் - ஒற்றுமை ஏற்படும். கணவன் - மனைவி இடையே அன்பு அதிகரிக்கும். திருணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடக்கும். குறிப்பாகச் செப்ரெம்பர் மாதத்திற்குள் நற்காரியங்கள் கைகூடும். சிலர் குழந்தைப் பாக்கியம் பெறுவர். வீட்டுக்குத் தேவையான ஆடம்பரப் பொருள்கள் வாங்கலாம். ஜூன் மாதத்திற்குப் பிறகு சனி சாதகமற்ற இடத்திற்குச் செல்வதால் குடும்பத்தில் சிற்சில பிரிவுகள் வரலாம். சிலரது குடும்பத்தில் தனிக் குடித்தனம் செல்ல வாய்ப்பு உண்டு.

உத்தியோகம் பார்ப்பவர்கள் குதூகலமான பலன்களைக் காணலாம். பதவி உயர்வு, சம்பள உயர்வு தடை ஏதும் இருக்காது. வேலையின்றி இருப்பவர்களுக்கு வேலை கிடைக்கும். மேல் அதிகாரிகளின் ஆதரவும், ஆலோசனையும் கிடைக்கும். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர். செப்ரெம்பர் மாதத்துக்குப் பிறகும், நிலைமை சுமாராகவே இருக்கும். குரு சாதகமற்ற இடத்திற்குச் செல்வதால் வேலைப்பளு அதிகரிக்கும். எதிர்பாராத இடமாற்றம் காணலாம். இதனால், குடும்பத்தை விட்டு தற்காலிகமாகப் பிரிய நேரிடலாம். சிலர் வேலையில் அவ்வளவு நாட்டம் காட்டாமல் தங்கள்வசம் இருந்த பொறுப்பை இழக்க நேரிடலாம். அதேநேரம் குருவின் 5ஆம் இடத்துப்பார்வையால் உங்களுக்கு மிகவும் பின் தங்கிய நிலை உருவாகாது.

வியாபாரிகள் நல்ல வளர்ச்சியைக் கொண்டு இருப்பீர்கள். இந்த நன்மைகள் தொடரும். தடைகள் அனைத்தும் அடியோடு மறையும். பகைவர்களின் தொல்லை இருக்காது. அவர்கள் உங்களிடம் சரண் அடைவர். புதிய வியாபாரம் நல்ல வளர்ச்சி அடையும். கேதுவால் பணம் விரயம் ஆகலாம். ஆனால், அதைச் சமாளிக்கும் சாமர்த்தியம் வரும் ஜூன் மாதத்திற்குப் பிறகு சிலர் தீயோர் சேர்க்கையால் அவதிக்குள்ளாகலாம். எனவே, யாரிடமும் எச்சரிக்கையுடன் பழகவும். யாரையும் நம்பி எதையும் கொடுத்துவிட வேண்டாம்.

கலைஞர்கள் நற்பெயரும் நற்புகழும் கிடைக்கப் பெறுவர். புதிய ஒப்பந்தங்கள் தாராளமாகக் கிடைக்கம். நடிப்புத் திறன், கலை நயம் வளரும். செப்ரெம்பர் மாதத்திற்குள் அரசிடம் இருந்து விருது, பரிசு போன்றவை கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். பலர் நல்ல மதிப்பெண் எடுத்து வெற்றி காண்பர். ஆனால், அடுத்த கல்வி ஆண்டு இதேபோல் அமைய வாய்ப்பு இல்லை. ஆனாலும், பிற்போக்கான நிலை உருவாகாது. முயற்சிக்குத் தகுந்த பலன்கள் கிடைக்கும். சற்றுச் சிரத்தை எடுத்தால் விரும்பிய பாடமும் கிடைக்கப் பெறுவீர்கள்.

விவசாயிகள் குதூகல பலனைக் காணலாம். புதிய சொத்துக்கள் வாங்குவீர்கள். என்ன விதைத்தாலும் அது நன்றாக விளையும். வழக்கு விவகாரங்கள் சாதகமாக இருக்கும். பெண்கள் வாழ்க்கையில் எல்லையில்லா மகிழ்ச்சியைக் காண்பர். புத்தாடை, அணிகலன்கள், ஆடம்பரப் பொருள்கள் வாங்குவீர்கள். பிறந்த வீட்டில் இருந்து சீதனங்கள் அதிகமாக வரும். வேலைக்குச் செல்வோர் மற்றும் தொழில் நடத்தும் பெண்கள் நல்ல வளத்தைக் காண்பர். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகளில் அதிகமாகக் கலந்துகொள்வீர்கள்.

உடல்நலம் சீராக இருக்கும். கேது சாதகமற்ற நிலையில் இருப்பதால் சிற்சில உடல் உபாதைகள் வரலாம். இதனைக் கருத்திற் கொண்டு முன் எச்சரிக்கை நடவடிக்கையில் ஈடுபடுவது நல்லது.

இந்த ஆண்டு முழுவதும் கேது சாதகமாக இல்லை. எனவே, அவருக்கு அர்ச்சனை செய்து வழிபடலாம். ஞானிகள், சன்னியாசிகளுக்கு இயன்ற உதவி செய்யுங்கள். ஜூன் மாதத்திற்குப் பிறகு சனி பகவானுக்கு அர்ச்சனை செய்யுங்கள்.


(வளரும்)

# வீதி விஸ்தாரிப்புக் குறித்து மக்களுக்கு போதிய விளக்கம் தரப்படவேண்டும்

**யாழ்.** வீதிகளை அகலமாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக யாழ். அரச அதிபர் கலந்துரையாடல் நடத்தியதாக உதயன் நாளிதழில் வாசித்தேன். யாழ். மாநகரில் ஆரம்பமாகும் ஆறு வீதிகளை அகலமாக்கத் திட்டமிடப்படுவதாக அறிகிறேன். மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய யாழ். மாநகராட்சி மன்றம் இயங்காத நிலையில் வரியிறுப்பாளர் பிரதிநிதிகள், சனசமூக நிலையங்கள் மற்றும் சமூக அமைப்புகள் எவையும் அழைக்கப்படவில்லை. வீதிகளை இருபக்கமும் 10 மீற்றர் அகலமாக்குவது ஒரு சாதாரண விடயமல்ல. இவ்விடயத்தில் பாதிப்படைக்கூடிய மக்களின் கருத்துக்களைக் கேட்டறிவது மிக முக்கியம். ஒவ்வொரு வீதியிலும் என்ன விதமான மாற்றம் செய்யப்படுமென்பதை நில அளவைப்படங்கள் மூலம் மக்கள்முன் வைக்கப்படவேண்டும். காணிகள் என்னவிதமாகப் பதிப்படையும் என்பதைக் காணிக்காரர்கள் முன்கூட்டியே அறிய வேண்டும். பல காணிகள் உருக்குலைந்து குடியிருப்பதற்குப் பயன்படுத்தப்பட முடியாதவையாகி விடக்கூடும். எவ்வளவு பரப்புக் காணிகள் எடுக்கப்படும். கட்டடங்கள், வீடுகள் என்ன விதமாக இழக்கப்படும். இதற்குரிய இழப்பு எவ்விதம் ஈடுசெய்யப்படும் என்பது தெளிவாக விளங்கப்படுத்தவேண்டும். யார் இந்த இடிப்பு வேலைகளை மேற்கொள்வார்களென்பது தெளிவுபடுத்தப்படவேண்டும்.

இன்று எமது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பலதரப்பட்டவை. அன்றாட வாழ்க்கையை நடத்துவதே பெரும்பாடாக இருக்கின்றது. கட்டடங்கள், மதிற்சுவர்கள் இடிக்கப்பட்டால், அவற்றை மறுசீரமைப்பது, மீளவும் கட்டியெழுப்புவது யார் என்ற கேள்வி எழுகின்றது. இன்று கட்டடப் பொருள்களின் விலைவாசிகள் எப்படி இருக்கின்றன. சிமெந்து, மண், சல்லிக் கல்லு, கல்லு, கம்பி விற்கப்படும் விலைகளை யாரால் சமாளிக்கமுடியும். ஒரு லோட் மண் வாங்கமுடியுமா? லோட் கணக்கில் மண் கிடைக்குமா? மேசன்மார், வேலையாள்களின் நாளாந்தப் படிகளைச் செலுத்திக் கட்டடங்களைக் கட்டமுடியுமா?

வீதிகளை அகலமாக்குவது, மக்கள் அமைதியான வாழ்க்கை நடத்தும்போது தேவையானதுதான். அதற்கும் போதுமான யோசனைகளைக் கருத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். இன்றைய நிலையில் 10 மீற்றர் அகலமாக்குவது சாத்தியமானதா? அவசியமானதா? காங்கேசன்துறை வீதியைப் பொறுத்தவரை ஆஸ்பத்திரி வீதி சந்தியிலிருந்து வடக்குப் பக்கமாகக் கடைத்தெருவை இரு மருங்கிலும் அழித்துவிடமுடியுமா? முட்டாசுக்கடைச் சந்தியிலிருந்து எத்தனை கோயில்கள் - கதிரேசன் கோயில், வண்ணை வைத்தீஸ்வரன் கோயில், அரசடிப் பிள்ளையார் கோயில், பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில், நாச்சிமார் கோயில் ஆகியன பாதிப்படையக்கூடும். ஆகம விதிமுறைகள் மீறப்படக்கூடும். இந்தப் பகுதியிலே மட்டும் ஏற்படக்கூடிய இழப்புகளுக்கான இழப்பீட்டுத் தொகை எத்தனை கோடியாக இருக்கும். மானிப்பாய் வீதியில் ஓட்டுமடம் சந்திவரை எத்தனை எத்தனை வீடுகள், கடைக் கட்டடங்கள் பாதிப்படையக்கூடும். பருத்தித்துறை வீதி ஆஸ்பத்திரி வீதிச் சந்தியில் இருந்து மேறகுப் பக்கமாகப் பலாலி வீதி, பருத்தித்துறை வீதி சந்திவரை பாரிய வெள்ள வாய்க்கால் அமைந்துள்ளது. மழைகால வெள்ள நீர் பாய்கின்ற




பிரதான வாய்க்காலை மூடமுடியுமா. ஆரியகுளத்தில் எப்பகுதியை யாவது மூடமுடியுமா. மாரிகால வெள்ளம் கிழக்கு - வடக்கு குடிமனைகளை மூடி நிற்கும். குளத்தைச் சிறிதாக்கினால் அதன் விளைவு என்ன? பலாலி வீதி வழியூடாகக் குருநகர் குடிதண்ணீர்த் திட்டக் குழாய்கள் அமைகின்றன. அவற்றை மீள அமைப்பதற்கான திட்டங்கள் உண்டாவது சாத்தியமானது தானா? மாநகராட்சி மன்றம் மின்சார விநியோகத்துக்கான மின் கம்பங்கள் நிறுவிப் புதிதாக நிர்மாணிப்பதற்கான நிலைமையில் இருக்கின்றதா? அதனைச் செயற்படுத்த முடியுமா? பருத்தித்துறை வீதி, பலாலி வீதி இவ்விரு வீதிகளிலும் முழு நீளத்துக்கும் குடியிருபபு வீடுகள், கடைகள் நிரம்ப உள்ளன. இந்தக் காணிக்காரர்கள் அடையக்கூடிய பாதிப்புகள் என்னவென்று விளங்கப்படுத்தப்பட்டுள்ளதா? இழப்பீட்டுத் தொகை கணிக்கப்பட்டுள்ள மக்கள் எதை ஏற்றுக்கொள்வார்களா?

யாழ். மாநகரத்தில் நீரடைப்பு மலசல கூடங்கள் நிரம்பி வாழ்கின்றன. கிணற்று நீரை அசுத்தப்படுத்தும் நிலை ஏற்படுகின்றது. யாழ். மாநகரத்தைப் பொறுத்தவரை மிக முக்கிமானதும் அத்தியாவசியமானதுமான தேவை Sewerage System தனிப்பட்ட நீரடைப்பு மலசல கூடங்களுக்குப் பதிலாக விரிவான கழிவுப்பொருள்கள் அகற்றும் திட்டம் தாமதமின்றி நிறைவேற்றப்படவேண்டும்.

சி.நாகராஜா
முன்னாள் யாழ். மாநகர முதல்வர்,
(ஜேர்சி, அமெரிக்கா).

இன்றுள்ள வீதிகளே சரியான முறையில் பராமரிக்கப்படுவதில்லை. வீதிகளை அகலமாக்கி நிலைமையை மேலும் மோசமடையவிடுவதுதான் நோக்கமா. எல்லாவற்றுக்கும் மேலாக யாருக்காக இந்த வீதிகள் அகலமாக்கும் நடவடிக்கை கண்மண் தெரியாமல் ஓடுபவர்கள் மேலும் கண்மூடித்தனமாக ஓடுவதற்காகவா?

மக்களுடைய ஒத்துழைப்பின்றி இந்த நடவடிக்கையை நிறைவேற்ற முடியுமா? தாம் என்னவிதமாகப் பாதிப்படையப்போகின்றோம் என்பதைத் தெரிந்துகொள்ளாமல் மக்கள் எவ்விதம் ஒத்துழைப்புத் தரமுடியும். முதலில் குறுகிய காலத் திட்டம் என்ன என்பதை மக்கள நன்றாக அறிந்துகொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும். அதற்கான நில அளவைப்படங்கள் முன்வைக்கப்படவேண்டும். நிதியைப் பெறுவதில் சிக்கல் இல்லை என்று அரச அதிபர் இன்று சொல்லலாம். அவரோ எவரோ என்ன உத்தரவாதம் தரமுடியும். எவ்வளவு நிதி தேவை என்பதுபற்றி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா?

# கலந்துரையாடல்

சப்பிரகமுவ பல்கலைக்கழக அனைத்துப் பீடங்களுக் கும் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான கலந்துரை யாடல் 17.04.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும். அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- சிரேஷ்ட மாணவர்கள்.

(44225)(42-14)



## ஓர் அன்பான வேண்டுகோள்

சிறுகதைகள், தொடர்கதைகள், குறுநாவல் என்பனவற்றை எழுது வோர்களும் அவற்றை கார்டூன் சித்திரவடிவில் சித்தரிப்பதற்குத் தகுதி வாய்ந்த காட்டூன் சித்திர வரைஞர்களும் தேவைப்படுகின்றனர். தகுதிவாய்ந்தோர் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர். விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். அத்தருணம் தமது ஆக்கங்களையும் முன் அனுபவங்களையும் பரீசிலனைக்குச் சமர்ப்பிக்குமாறு வேண்டப் படுகின்றனர்.


விளம்பர இல: 2558
மே/பா. உதயன்,
யாழ்ப்பாணம்.

(44168)(42-14)



## 112 ஆம் நாள் நினைவஞ்சலியும்
16ஆவது பிறந்தநாள் நினைவலைகளும்

சுந்தரனாய் மண்ணில் 14 – 04 – 1988



சுனாமியால் விண்ணில் 26 – 12 – 2004

## செல்வன் விமலநாதன் தர்சன்

கடலன்னையே சொல்?
ஆசைக்கொரு மகனாய் அன்புக்கொரு சோதரனாய் பாசத்துக்கொரு தம்பியாய்
கல்வியிலே தன்நிகரில்லாத் தலைவனாகத் திகழவேண்டுமென்று
மயிலனித்தாயின் மடியிலே மகிழ்ந்து விளையாடி புலமையிலே சித்தி பெற்று
யாழ்.இந்துவின் மைந்தனாகி க.பொ.த.(சா/த)இல் நற்பேறுபெற்று
உயர்தரம் கற்று பல்கலைக்கழகம் சென்று பட்டங்கள்பல பெற்று
நானிலமும் போற்ற வாழவேண்டு என்று ஊண் உறக்கமின்றிப் படித்த
நம் சுந்தரச் செல்வனை 'சுனாமி' எனும் பெயரில் கோரத் தாண்டவ மாடி
அகவை பதினாறிலே எதற்காகப் பறித்தெடுத்தாய்?
அவன் ஆயுளுக்கு மட்டுமே உன்னால் அணைபோட முடிந்தது! ஆனால்,
அறிவுக் கடலுக்கு உன்னால் அணைபோடமுடியவில்லை!

அன்புத் தம்பியே! க.பொ.த.(சா/த) பரீட்சையில் 9AC பெற்று உன் உறவுகளையெல்லாம் கலங்கவைத்து விட்டு எங்கையா நீ சென்றாய்?

உன் பெறுபேற்கைக்காண கனவுகளுடன் காத்திருந்த அருமை ஆனந்தமாமாவையும் சித்தப்பாவையும் அண்ணனையும் பெரிய மாமா வையும் மச்சான்மாரையும் காவுகொண்டாள் கடலன்னையவள் என் செய்வோம் யாம்? இது விதியின் சதியே!

கடலைப் புலம்,
சுன்னாகம். (சி.42299)(42-14)

– தந்தை, தாய், சகோதரிகள்,
உறவினர்கள்.


## ஹற்றன் நகரில் சிங்களக் குடியேற்றமா?

கொழும்பு,ஏப்.16

தமிழர்கள் பெருபான்மையினராக வாழும் ஹற்றன் நகரின் மையத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் ஒன்று உருவாக்கப்பட் டுள்ளது. 'பொலீஸ் கொலணி' என்ற பெயரில் இந்தக குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில முற்றுமுழுவதாகப் பெரும்பான்மையின பொலீஸாருக்கே காணிகள் வழங்கப்பட்டுள் ளன. தமிழ், முஸ்லிம் பொலீஸார் புறக் கணிக்கப்பட்டுள்ளனர். இதனால் ஹற்றன் பிர தேசத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்கள் மத்தியில் அச்சமும் பீதியும் காணப்படுகின்றது.

ஹற்றன் பிராந்திய சிரேஷ்ட பொலீஸ் அத் தியட்சகர் அலுவலகம் அமைந்துள்ள நேர் ஸிங் ஹேோம் வீதியில் இந்தக் குடியேற்றத் திட்டம் உருவாக்கப்படுகின்றது.

1993 ஆம் ஆண்டு அரச ஊழியர்களுக்கு என 53 காணித்துண்டுகள், காணி அபிவிருத்தி அதிகாரசபையினால் இப்பகுதியில் ஒதுக்கப் பட்டன. இப்போது இக்காணிகள் ஹற்றன் பிராந்தியத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடமை யாற்றும் 57 பொலீஸாருக்குப் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளன. அவற்றில் வீடுகளை அமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

(க)

## மழை வெள்ளப் பாதிப்புக்கு 30 லட்சம் ரூபா நிதி

வலி.தென்மேற்கு,ஏப்.16

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் கடந்த வருடம் நவம்பர், டிசெம்பர் மாதங்களில் ஏற்பட்ட பெருமழை, வெள்ளத்தினால், வீடுகள் பாதிக்கப்பட்டு நஷ்ட மடைந்தவர்களுக்கு வழங்குவதற்காக 30 லட்சம் ரூபா நிதி கிடைத்துள்ளது. கொழும் பிலுள்ள சமூகநலன் நோன்பு அமைச்சு இந்த நிதியை யாழ்.மாவட்ட செயலகத்தின் ஊடாக அனுப்பி வைத்துள்ளது.

கடந்த வருடப் பிற்பகுதியில் ஏற்பட்ட பெரு மழை மற்றும் வெள்ளத்தின்போது வீடுகளுக்கு இப்பிரதேச செயலகப் பிரிவில் 56 லட்ச ரூபா நஷ்டம் ஏற்பட்டதாக கொழும்பிலுள்ள சமூக நலன் நோன்பு அமைச்சிற்கு அறிவிக்கப்பட் டிருந்தது.

தற்போது 30 லட்சம் ரூபா நிதி கிடைத் துள்ளதாகவும் -

நஷ்டஈடுகோரி ஏற்கனவே விண்ணப்பித் திருந்த வீட்டு உரிமையாளர்களுக்கு அவர் களது விண்ணப்பங்களுக்கு அமைவாக நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவை விரைவில் வழங்கு வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரு வதாகவும் - பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

கடந்த வருட இறுதியில் ஏற்பட்ட பெரு மழையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான வீட்டுப்பாவனைப் பொருள்கள் கடந்த பெப்ரவரி மாதத்தில் இப் பிரதேச செயலகத்தினால வழங்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட குடுமபங்களுக்கு அரிக்கன் லாம்பு, படுக்கை விரிப்பு, வாளி, நுளம்புவலை ஆகிய வீட்டுப் பாவனைப் பொருள்கள் இவ் வாறு வழங்கப்பட்டுள்ளன.

(ஒ-135)

## கல்வியியற் கல்லூரிகளின் பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.16

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 2002 ஆம் ஆண்டில் தேசிய டிப ளோமா பட்டப் படிப்பை முடித்துக்கொண்டவர்களுக்கான பட்டமளிப்பு விழா எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

2002 ஆம் ஆண்டில் வவுனியா, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டப்படிப்பை முடித்த வர்களை அன்றைய தினம் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளு மாறு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கே.பேர்னாட் கேட்டுள்ளார்.

அவர்களுக்குத் தனிப்பட்ட முறையிலும் கடிதங்கள் அனுப்பி வைக் கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-202)


## சாயி மங்கள சேவையினரால் வழங்கப்படும் சேவைகள்

(C/42293)(22-14-42)

உதவும் கரங்கள்:
- ★ வீட்டு நோயாளர்களைப் பராமரிப்பதற்கு
- ★ வீட்டு குழந்தைகளைப் பராமரிப்பதற்கு
- ★ வீட்டுப் பணிப்பெண்கள் (உள்ளூர்)
- ★ வேலைவாய்ப்புகள் : ஆண், பெண் இருபாலாருக்கும் (உள்ளூர்)
- ★ திருமண சேவை : ஆண், பெண் இருபாலாருக்கும் திருமண ஒழுங்குள் மற்றும் விவாகரத்துப் பெற்ற வர்களுக்கும் ஆதரவற்றவர்களுக்கும் திருமண ஒழுங்குகள்.

அனைத்து சேவைகளுக்கும் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
உதவும் கரங்கள் T.P: 021 222 7727,
C/o குமார் ஏஜென்ட், 077 3164375 .
133/3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.



## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 - 10 - 1946



உதிர்வு 16 - 04 - 1997

## அமரர் கனகன் தங்கராசா

(இ.போ.ச.நடத்துநர் -பருத்தித்துறை)

*பண்பின் உறைவிடமாய் பாசத்தின் சிகரமாய் வாழ்ந்த*
*எம் குல விளக்கே நீங்கள் மறைந்தாலும்*
*உங்கள் நினைவுகள் எம்மை விட்டு மறையாது.*

உங்கள் நினைவுடன் வாழும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், மாமன், மாமி,
பேரப்பிள்ளைகள்.

*வல்லை வீதி,*
*தொண்டைமானாறு.*

(C/42313) (22-14-42)



## CARITAS - HUDEC JAFFNA

# VACANCY

## Project Manager for Income Generating Projects

**CARITAS - Hudec is a Humanitarian Organization.**
**Within the framework of its 2 years program for relief after tsunami disaster, CARITAS - Hudec needs a project manager for income generating activities, in Jaffna.**

### Job description

**Project Manager for Income Generating Projects**

Integrated to the "Social Activities" Department and in charge of the implementation of the income generating projects to be set up under the direction of Caritas/ Hudec strategy: selection of projects, financial and administrative follow-up and networking with the other Humanitarian Organizations (local and international) involved in
Income Generating Projects.

Requirements
- Experience in micro-finance, micro-credits income generating activities
- Good analytic skills
- Fluency in English
- Ability to work on the field and travel extensively
- Good communication skills
- Good team player
- Computer skills (word, excel, internet, tally...)

Please send your application by Friday the 22nd of April to the director of CARITAS - Hudec:

**Father Jeyakumar**
**CARITAS - Hudec Jaffna**
14, Mathew's Road, Deogu Street, Jaffna

Please specify the post you apply for in your application.

(44214)(42)



## CARITAS - HUDEC JAFFNA

# VACANCY

## Program Assistant

Within the tramework of the Children Program HUDEC needs a program assistant. The Children Program will be implemented in coordination with Hudec relief operation for tsunami disaster.

### Job Summary

The Program Assistant will work closely with the Program Manager during the assessment, the formulation and the implementation of the Children Program to be set up under the direction of Hudec /Caritas strategy.

**Requirements**
- Working knowledge of English
- Good communication skills
- Experience to work in a social environment
- A clear and creative mind
- Good team player
- Computer skills (word, excel, internet...)
- Good Analytical skills
- Notions of local social-cultural context
- Willing to travel extensively

Please send your application by the 22nd of April to the director of Caritas -Hudec:

**Father Jeyakumar**
**Caritas - Hudec Jaffna**
14, Mathew's Road, Deougu Street
Jaffna

PLEASE SPECIFY THE POST YOU APPLY FOR IN YOUR APPLICATION.

# தமிழ் இலக்கியங்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட வேண்டும்

## நந்தியின் பாராட்டு விழாவில் குணராசா

நல்லூர்,ஏப்.15

தமிழில் வெளிவரும் இலக்கியப் படைப்புகள் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும். இதன் மூலம் புலம்பெயர்ந்து



வாழ்பவர்கள், அவர்களின் அடுத்த சந்ததிகள் எம் வரலாற்றையும் எமது இலக்கியத் தரத்தையும் புரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும்.

இவ்வாறு யாழ். மாநகர ஆணையாளரும் எழுத்தாளருமான கலாநிதி குணராசா தெரிவித்தார்.

பேராசிரியர் செ.சிவஞானசுந்தரத்தின் இலக்கியப் பணிகளை பாராட்டும் வகையில் நயினை கிருபாகரனால் ஒழுங்கு செய்யப்பட்ட விழா அண்மையில் நாவலர் மண்டபத்தில் நடைபெற்றது.

கலாநிதி குணராசா தனது தலைமையுரையில் கூறியதாவது:-

1939 களில் ஈழத்து நவீன இலக்கிய ஆரம்பம் சம்பந்தன், வைத்திலிங்கம் போன்றவர்களுடன் ஆரம்பித்தது. 1945 களில் சொக்கன், நந்தி போன்றவர்களின் பிரவேசம் இலக்கிய உலகிற்கு புது நம்பிக்கையைத் தந்தது. முன்பு வெளியான சிறந்த சிறுகதைகள் போன்று 2005 இல் வெளிவந்ததாக இல்லை. சிறந்த உன்னதமான சிறுகதைகளைத் தேர்ந்தெடுப்பதெனில் பேராசிரியர் நந்தியின் கதைகள் அதற்குள் நிச்சயமாக அடங்கும். 60 வருடங்கள் தொடர்ந்து எழுதி வருகின்றார். சம்பந்தர், வைத்திலிங்கம், இலங்கையர்கோன் என்ற தலைமுறையுடன் ஆரம்பித்து எங்களைப் போன்றவர்களின் காலம்வரை அவரது இலக்கியப் பணி ஓயவில்லை. இன்றும் தொடர்ந்தும் எழுதும் ஒரு பெரியார் அவர்.

இலக்கிய உலகில் பிரவேசித்த காலம் முதல் செய்துவரும் பணி படைப்பாளிகளுக்கு முன்னோடியாக உள்ளது. படைப்பாளிகளுக்குக் கல்விப் புலம் தேவையில்லை என்பது சிலரது கருத்தாகும். அதற்கு உதாரணமாக டானியல், டொமினிக்ஜீவா போன்றவர்களைக் காட்டலாம். என்னதான் இருந்தாலும் நவீன இலக்கியம் படைக்க கல்விப்புலம் அவசியம்.

கல்விப்புலத்தோடு கூடிய சமூக சிந்தனையுடன் மூத்த படைப்பாளிகள் எங்களோடு வாழ்கிறார்கள். தன்னுடையதை மட்டுமன்றிப் பிற படைப்பாளிகளினது ஆக்கங்களையும் படித்துப் பாராட்டும் உள்ளம் கொண்டவர் நந்தி. நான் மாணவனாக இருந்தபோது, அவரது 'மலைக் கொழுந்து' நாவலைப் படித்தேன். அதுபற்றி அப்போதே அவருக்கு ஒரு கடிதமும் எழுதினேன். இன்று வரை அந்தக் கடிதத்தை அவர் பாதுகாத்து வருவதை அறியும் போது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

வைத்தியத்துறை, இலக்கியத்துறை போன்ற பல்வேறு துறைகளில் ஈடுபாடு கொண்ட அவரது சிறு கதைகளைத் தொகுதது இலக்கிய மணிவிழாவாக இந்த விழாவை நடத்த ஏற்பாடுகளைச் செய்த நயினை கிருபாகரன் பாராட்டப்பட வேண்டியவர்.

நந்தியின் 160 இற்கு மேற்பட்ட சிறுகதைகள் முழுமையாக வெளிவரும்போது, ஈழத்துச் சிறுகதைகளின் கனதியை நாம் உணரமுடியும். போராட்ட காலத்தில் மூத்த எழுத்தாளர்கள் பயத்தினால் தமது பேனையை மூடிக்




கொண்ட நேரம், துணிச்சலாக எழுதியவர் நந்தி. தமிழில் எழுதும் படைப்புக்கள் புலம்பெயர்ந்து வாழும் எமது அடுத்த தலைமுறைகளுக்காக ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட வேண்டும் - என்றார்.

பேராசிரியர் சிவலிங்கராசா பேசும் போது கூறியதாவது:-

தமிழ் மக்களின் வாழ்வியல்புகளை அவர்களின் ஏற்ற இறக்கங்களைத் தனது பேனா வழியாக சமூகத்திற்குக் கொண்டு வந்தவர் பேராசிரியர் நந்தி. கலைகளில் ஈடுபாடும், சமூகத்தை நேசிக்கும் மானிடம் தழுவிய ஈடுபாடும் அவரது கதைகளில் பொதிந்துள்ளது. தமிழில் சிறுகதை என்பது ஆற்றல் வாய்ந்தது. சமுதாயத்திற்கு பல்வேறு கருத்துக்களைச் சொல்லக்கூடிய வடிவமாக இருப்பது இந் நூலில் கையாளும் மொழிநடை, கல்விப்புலத் தின் ஆளுமைச் சிறப்பு என்பன ஒட்டு மொத் தமாக இணைந்த படைப்பாகவுள்ளது. மானி டம் தழுவிய வாழ்வியலை இந்நூலினூடாக அறிய முடிகிறது. தான் கண்டதை, கேட்டதை, காணவிரும்பியதை, விரும்பாதவற்றை, எல்லாமே உள்ளடக்கி சமூகத்தைத் துருவிப் பார்க்கும் பார்வையை - இந்த மண்ணிலே நின்று கொண்டு மண்பட்ட துன்பங்களை அனுபவங்களை எங்களுக்குத் தந்துள்ளமை இதனைப் படிக்கும் போது புரியும் - என்றார்.

பேராசிரியர் நந்தி தனது பதிலுரையில் கூறியதாவது:-

இது எனக்கு எடுக்கப்பட்ட தனிப்பட்ட விழாவல்ல. கிருபானந்தன் செய்த இலக்கிய விழா 55 வயதில் நான் குருநாகலில் வேலைக்குப் போனேன். இப்போது பல்கலைக்கழகம் போகின்றேன். இலக்கியம், வாழ்வுடன், கலாசாரத்துடன், சமூகத்துடன் ஊறியது. மருத்துவத்தைப் பற்றி விழா வைப்பதானால் அது டாக்டர் சிவசூரியாவுக்குத்தான் எடுக்க வேண்டும். இப்போது மருத்துவபீடம் மூடப்பட்டுள்ளது. கடந்த 25 வருடங்களாக இது பற்றி யாரும் பேசவில்லை. திருமதி கணேசமூர்த்தி போன்றவர்கள் பதவிகளை எதிர்பார்க்காமல் அங்கே சேவை செய்திருக்கிறார்கள்.

இலக்கியத்திற்காக எனக்கு விழா எடுக்கிறார்கள், பட்டு மாலைகளுடன் என்னைப் பார்க்க வேண்டும் என்று கிருபா சொன்னார். மக்களை, மண்ணை நேசித்தேன் அதுவே இலக்கியமாகியது. இதுதான் எனது இலக்கியப்பணி. செங்கை ஆழியான் இன்றேல் பல எழுத்தாளர்களின் பெயர்களை இன்று அறிந்திருக்கமுடியாது. அவரின் முயற்சியால் இன்று மறைந்து கொண்டிருக்கும் எழுத்துக்கள் மீள எழுகிறது. நவீன தமிழ் இலக்கியத்திற்கென ஒரு பேராசிரியர் பல்கலைக்கழகத்திற்குத் தேவை. அதற்கென ஒரு பேராசிரியர் இருந்தால்தான் நவீன காலத்திற்கு ஏற்ப இலக்கியத்தின் தரம் தமிழின் தரம் உயரும் - என்றார்.

தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் அருட்திரு.எஸ். ஜெபநேசன், அருட்திரு.ரூபன் மரியாம்பிள்ளை, நயினை கிருபாகரன், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் ஆகியோரும் பேசினார்கள்.

பேராசிரியர் நந்திக்கு மூத்த எழுத்தாளர் வரதர் பொன்னாடை போர்த்த நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மலர் மாலை அணிவித்துக் கௌரவித்தனர். அவர்களைத் தொடர்ந்து ஆதரவாளர்களும் மலர் அணிவித்துக் கௌரவித்தனர்.

பேராசிரியர் சிவலிங்கராசாவிடம் இருந்து நூலின் முதல் பிரதியை சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. பெற்றுக்கொண்டார்.

(ப-111-204)

# சைவப் பாரம்பரியங்களைப் பேண பெற்றோர்கள் வழிகாட்ட வேண்டும்

## யாழ்.இந்து மகளிர் கல்லூரி அதிபர்

நல்லூர்,ஏப்.15

சைவ உலகின் வழிகாட்டிகளாக எமது சமயப் பண்பாடுகள் நிறைந்த சமுதாயமாக மாணவர்கள் உருவாக வேண்டும். இதற்கு பெற்றோர்களின் வழிகாட்டல் அவசியம்.

இவ்வாறு யாழ்.இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராசா கூறினார்.

2004 ஆம் ஆண்டு அகில இலங்கை சைவ நெறித் தேர்வுக்கான பரிசளிப்புவிழா யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினால் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவப்புலவர் வ.கந்தசாமியின் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசிய திருமதி சரஸ்வதி ஜெயராசா மேலும் கூறியதாவது:-

நாவலர் யாழ்ப்பாணத்தில் சைவசமயத்தைப் பல்வேறு இன்னல்களின் மத்தியில் வளர்த்தெடுத்தார். அந்தப்பணியை கந்தசாமி அவர்களின் தலைமையில் சைவபரிபாலன சபை இப்பொழுது நிறைவேற்றி வருகின்றது. சைவ சமயவளர்ச்சியின் ஒரு அங்கமாக சமய பாடப் பரீட்சைகளை இச்சபை நடத்திவருகின்றது. ஒருகாலத்தில் கொழும்பு விவேகானந்த சபையால் சமயபாடப் பரீட்சை நடத்தப்பட்டு வந்தது. அந்தப் பரீட்சைகளில் நாங்கள் பங்கு பற்றி வருவதுண்டு. இன்று அந்தப் பணியை எமது மண்ணில் உள்ள சைவபரிபாலன சபை இலங்கை பூராவும் மேற்கொள்வதுடன் பெறுமதிவாய்ந்த பரிசில்களையும் வழங்குகிறது. மாணவர்களுக்கு எமது சமயத்தின் விழுமியங்களைக் கற்கவும் அது காட்டும் நெறிநின்று வாழவேண்டிய சிந்தனையையும் ஊட்டி வருகின்றது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு எமது சமய நெறிமுறைகளைத் தெரிந்துகொள்ள உந்து சக்தியாக விளங்கவேண்டும். பாடசாலைகளும் வழிகாட்டியாக அமைய வேண்டும். கிறிஸ்தவ பாடசாலைகளில் பயிலும் பிள்ளைகள்கூட இந்தப் பரீட்சைகளில் கலந்து கொண்டு பதக்கங்களைப் பெற்றிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

சைவப் புலவர் வ.கந்தசாமி தனது தலைமை உரையில் சைவசமய நிகழ்ச்சிகள் மிகவும் முக்கியமானவை. எமது மத நெறிகளை எவ்வாறு மக்கள் மத்தியில் கொண்டுசெல்ல வேண்டும் என்பது குறித்து ஒவ்வொரு சைவ சமய மன்றங்களும் சிந்தித்துச் செயற்பட வேண்டும். மதமாற்றங்கள் என்று பல்வேறு செய்திகள் உலவும் இன்றைய காலகட்டத்தில் நாவலர் போன்று நாமும் முடிந்தவரை அர்ப்பணிப்புடன் செயற்பட்டாலே எமது மதத்தின் மேன்மையைப் பாதுகாக்கமுடியும் என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் தனது ஆசியுரையில் மாணவர்களிடையே போட்டிகளை நடத்தி அவர்கள் எமது சமயக் கோட்பாடுகளை, நெறிமுறைகளைத் தெரிந்துகொண்டு அதன்படி வாழக் கற்றுக்கொடுப்பது எமது இனத்திற்கும் நாட்டுக்குமே பெருமை தரக்கூடிய ஒன்றாகும். எமது சமயத்தில் கூறப்படும் ஒவ்வொரு தத்துவங்களும் கிரியைகளும் ஒருவன் பூரணத்துவம் நிறைந்த மனிதனாக வாழ வழிகாட்டுகிறது. சமய நெறிகளுக்கமைய வாழ்பவன் இறுதி வரை பிறரிடம் அன்பு செலுத்துபவனாகவே இருப்பான். பிறரை நேசிப்பதே மானிடத்தின் உயர்வாகும். என்று கூறினார்.

சமய பாடப் பரீட்சைகளை எழுதிய மாணவர்கள் சமய நெறிகளை உரிய முறையில் கைக்கொள்ளவேண்டும். எதிர்காலத்தில் ஒரு சிறந்தவர்களாக உயர்வதுடன் ஏனையோரும் எமது சமய நெறிகளைக் கைக்கொள்ள வழிகாட்ட வேண்டும். சைவபரிபாலனசபை நாவலர் வழியில் எமது சமய வளர்ச்சிக்கு ஆற்றிவரும் தொண்டுகள் சிறப்பானது - என்று மேலும் பேசுகையில் கூறினார்.

சைவநெறித் தேர்வில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குரிய பரிசில்களை திருமதி சரஸ்வதி ஜெயராசா வழங்கினார்.

தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் - சான்றிதழ்கள் என்பன வழங்கப்பட்டன.

முன்னதாக பாடசாலை மாணவர்களின் திருமுறை ஓதுதல் பூராணபடனம் என்பனவும் இடம்பெற்றது.

(ப-111-204)

# சிரித்து வாழ்வதன் மூலம், சிறந்த வாழ்வைப் பெறலாம்

## ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்

நல்லூர்,ஏப்.15

சிரிப்பு மனிதனுக்கு கிடைத்த சொத்து, அவன் அதனை உரிய முறையில் பயன்படுத்துவதன் மூலம் சிறந்த செல்வங்களைப் பெற முடியும். இறைவன் தந்த வரங்களில் ஒன்று.



இந்தச் சிரிப்பு சந்தர்ப்பம் அறிந்து சிரிப்பதன் மூலம் நிறையப் பயன்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு இவ்வாறு தெரிவித்தார்.

ஆசிரியர் க.அருந்தவராசாவின் 'கிராமத்துச்சிரிப்பு' நூல் வெளியீட்டு விழா அண்மையில் செங்குந்த இந்துக்கல்லூரியில் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்றது.

செங்குந்த இந்துக் கல்லூரியும் இணுவில் தெஸ்பியன் கலைக்கழகமும் இணைந்து நடத்திய இந் நிகழ்வில் கலாநிதி திருநாவுக்கரசு மேலும் தெரிவித்ததாவது:-

சிரிப்பு மகத்தானது - சிந்திக்க வைக்கும்- சிரிப்பு உயர்ந்தது. சிரிப்பு நூல்கள் குறைவான நிலையில் எல்லோரையும் ஈர்க்கும் வகையில் சாமானிய மக்களிடம் கூட நாட்டுப் பாடல்கள் தோன்றிய விதம் கல்வி கலாசார தத்துவவியல் போன்ற பல வாழ்வியல் முக்கியத்துவங்கள் இந்நூலில் தரப்பட்டுள்ளன. பன்முகப்பட்ட வகையான சிரிப்புக்கள் கொண்ட இந்த நூல் தமிழ் இலக்கிய ஆய்வாளருக்கு உதவும் என்றார்.

ஆறு.திருமுருகன் தனது தலைமையுரையில் கூறியதாவது:-

இதுவரை காலமும் வெளிவந்த நூல்களில் இருந்து இது சற்று வித்தியாசமானது. சிரிப்பு மனிதனுக்கு இறைவன் தந்த ஒன்று. இலக்கியங்கள் சமய வாழ்விலும் காணப்படும் இறைவனின் கொடை இது.

யானையை பல வகையிலும் ஆடச் செய்யலாம் கிளிகளைப் பேச வைக்கலாம் ஆனால் இவைகளைப் பார்த்து சிரி என்றால், அவைகளால் சிரிக்க முடியாது. மனிதர்களில் கூட சிலரிடம் சிரிப்பைக் காணமுடியாது. தமிழகத்தில் சிரிக்கவெனவே பல்வேறு நூல்கள் வெளி வருகின்றது. வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப்போகும் என்கிறார்கள். இனிமையான நகைச்சுவை நூல்கள் இந்தியாவல் ஏராளம். எங்கள் நாட்டில் சிரித்திரன் நூலைச் சுந்தர் வெளியிட்டார். இப்போது அது மீண்டும் வருகின்றது பலருக்குத் தெரியாது.

சிரிப்பைத் தமது பாரம்பரியத்தில் கொண்டிருந்த நகைச்சுவை வேந்தர்கள் பலரை நாம் சந்திக்காமல் விட்டுவிட்டோம். ஒவ்வொரு கிராமத்திலும் மகிழ்ச்சியான செய்தி உண்டு ஒருவர் நடிக்கும் பாத்திரங்களை வைத்து நகைச்சுவையாக அவருக்குப் பட்டங்களை வழங்கும் சம்பவங்களை கிராமங்களில் காணமுடியும். அர்த்தமான நகைச்சுவைகளினூடாக நாம் பெறக்கூடிய செய்திகள் ஏராளம். மனதைப் புண்படுத்தக்கூடிய நகைச்சுவைகளைத் தவிர்க்க வேண்டும். பொருள் பொதிந்த அருமையான நகைச்சுவைகளைத் தாங்கிய 'கிராமத்துச்சிரிப்பு' பெறுமதி வாய்ந்தது. ஆசிரியர் அருந்தவராசா சரியான தருணத்தில் இதைத் தந்ததுடன் தலைமை வகிப்புப் பொறுப்பையும் எனக்குத் தந்தது சந்தோஷமாக இருக்கிறது- என்றார்.

கல்விக்கழகப் பொறுப்பாளர் ஆர்வலன் பேசும்போது கூறியதாவது:-

நாங்கள் சிரித்துவாழவேண்டும். அதனால் நீண்ட ஆயுளைப்பெறமுடியும். எனினும், கால நேரம் தெரிந்து சிரிக்கவேண்டும். நகைச்சுவையில் அர்த்தம் பொதிந்த பல விடயங்கள் உண்டு எங்களிடம் படைப்பாற்றல் குறைந்து விட்டதாக மூதறிஞர் சொக்கன் மறைவதற்கு ஒருமாதம் முன்னதாகக் கூறினார். நிம்மதியான வாழ்வுக்காக ஏங்கிக்கொண்டிருந்தவேளை சுனாமியால் சிரிப்புக்களைத் தொலைத்து விட்டு மேலும் ஏக்க நிலைக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்த நூலின் சிறப்பு அது தாங்கி நிற்கும் சிரிப்பின் தன்மையைப் பார்த்த போது தேசியத் தலைவரால் மாமனிதர் என அழைக்கப்பட்ட சுந்தரின் ஆக்கங்கள் சிரித்திரனில் வெளியானவற்றை நினைக்கின்றேன் அதில் அவர் குறிப்பிடும் விடயங்கள் மக்களை சிரிப்பு சிநதனைகளில் ஆழ்த்தியது. இந்த நூலுக்கு ஆதரவளிப்பதன் மூலம் எமது சமூகத்திற்கு உதவவேண்டும் - என்றார்.

கலாநிதி கலாமணி, செங்குந்தா இந்துக் கல்லூரி அதிபர் திருமதி விசுவலிங்கம், காசிப்பிள்ளை வித்தியாலய அதிபர் கே.வடிவேல், தெஸ்பியன் கழக உறுப்பினர் சிவகுமார், நூலாசிரியர் க.அருந்தவராஜா ஆகியோரும் பேசினார்கள். நூலின் முதற்பிரதியை சபா ஜெயராசா[illegible] இருந்து வைத்திய கலாநிதி எஸ்.[illegible] பெற்றுக்கொண்டார்.

(ப-111-204)

# VACANCY

ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V.

## TRANSLATOR

## WALK IN INTERVIEW

ASB - Kilinochchi is a German nongovernmental organization.

There exists a vacancy in the above organization for the post of female Translator. Suitable candidates should be able to translate conversations from English to Tamil and vice versa. Kindly present yourself for an interview on Monday, 18th April 2005 at 02.30 p.m. with details of educational qualification. Basic knowledge on MS Office packages is essential.

Preference will be given to those with experience.

**ASB Regional Office,**
156, Jaffna Road,
Paranthan.
Tel.(021) 2285070.

(C/42283)(2614-17)

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 07 – 12 – 1926

உதிர்வு 14 – 05 – 1997

**திருமதி புவனேஸ்வரி அரியதுரை**

தீதி: 16.04.2005

கண்ணின் மணியாய் விளங்கி
பாட்டின் பண்ணாய்க் கலந்து – நீ
ஏட்டின் எழுத்தாய் மிளிர்ந்து – எம்
வீட்டின் விளக்காய் ஒளிர்ந்தாயே.

என்றும் உன் நினைவுகளுடன் வாழும்:
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வேலப்பர் வீதி,
அரியாலை. (44248)(32-14-17-26)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில் 16 - 09 - 1926

இறைவன் அடியில் 18 - 03 - 2005

**திருமதி கந்தையா பொன்னம்மா**

(பிறப்பிடம் - கட்டுவன், வதிவிடம் - நீர்வேலி தெற்கு)

அன்போடும் பண்போடும் வாழ்ந்த அன்புத் தெய்வமே!
ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

18-03-2005 அன்று அமரத்துவமடைந்த எமது அன்புத் தாயின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபச் செய்திகளைத் தெரிவித்தவர்களுக்கும் நோய்வாய்ப் பட்டிருந்த போது வைத்தியசாலையில் உதவி செய்த சகல உத்தி யோகத்தர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரி வித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (17-04-2005) ஞாயிற் றுக்கிழமை காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் கலந்துகொள்வதோடு, எமது இல்லத்தில் இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*அன்னாரின் பிரிவால் துயருறும்:*
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்,
மகன் - கந்தையா அருந்தவநாதன (லண்டன்),
மருமகள் - அசோகமாலா அருந்தவநாதன் (லண்டன்),
மகள் - கதிரமலை ஜெகசோதி (கனடா),
மருமகன் - க.பத்மநாதன் (கனடா).

'கந்தன் கருணை',
பருத்தித்துறை வீதி,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
T.P.: 060 2213443.
(44053)(26-14-17)

## 2,316 படகுகள் சுனாமியால் சேதம்

யாழ்ப்பாணம்,ஏப்.16

சுனாமி அனர்த்தத்தின்போது வடமராட்சிப் பிரதேசக் கடற்றொழிலாளர்களின் இரண்டாயிரத்து 316 மீன்பிடிக் கலங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

சுனாமி அனர்த்தத்தின்போது வடமராட்சிப் பிரதேசத்தில் அழிந்த மற்றும் சேதமான படகுகள் தொடர்பாகத் திரட்டப்பட்ட புள்ளி விவரங்களிலிருந்து இது தெரியவந்துள்ளது.

இவற்றில் இரண்டாயிரத்து 316 மீன்பிடிக் கலன்கள் முற்றாக நாசமாகியுள்ளன. ஆயிரத்து 339 மீன்பிடிக்கலன்கள் பகுதியான சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன.

பகுதியான சேதங்களுக்கு உள்ளான மீன்பிடிக்கலங்களைத் திருத்திக் கொடுக்கும் பணியில் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. இந்தத் தகவல்களை நீரியல்வளத் திணைக்களத்தில் யாழ். அலுவலகப் பரிசோதகர் து.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (ஒ-7)

## சண்டிலிப்பாயில் 14 பேருக்குத் தையல் இயந்திரங்கள்

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் கடந்த போர்க்கால அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்ட 14 பெண்களுக்குத் தையல் இயந்திரங்களும் அதற்கான உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்ட நிவாரண, புனர்வாழ்வு நல்லிணக்க செயலகத்தினால் இப்பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட தையல் இயந்திரங்களே இவ்வாறு வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (எ-135)

## சம்பள உயர்வு வழங்கக் கோரிக்கை

வலி.தென்மேற்கு,ஏப்.16

வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கைக்கிணங்க பண்டத்தரிப்பு பல நோ.கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கும் 2ஆயிரத்து 500ரூபா சம்பள உயர்வை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் பண்டத்தரிப்புக் கிளை சங்க நிர்வாகத்தைக் கடித மூலம் கேட்டுள்ளது.

கிளையின் தலைவர் சி.மகேந்திரன் சங்கத் தலைவருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். (எ-135)

## நகுலேஸ்வரர் ஆலயத்துக்கு மாமல்லபுரத்திலிருந்து கருங்கல் விக்கிரகங்கள்

வலி.தென்மேற்கு,ஏப்.16

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் ஆலயத்திற்கென மாமல்லபுரம் சிற்பக் கலைக்கூடத்தில் கருங்கல்லினால் உருவாக்கப்பட்ட விக்கிரகங்கள் விரைவில் இங்கு எடுத்துவரப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை ஆலய ஆதீனகர்த்தா சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் மேற்கொண்டு வருகின்றார்.

உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள இந்த ஆலயத்தில் புனரமைப்புப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவது தெரிந்ததே. (எ-135)

## காணி விற்பனைக்கு

காங்கேசன்துறை வீதி, தாவடி கொக்குவிலில் கிணற்றுடனும் சுற்றுமதிலுடனும் கூடிய 11 பரப்புக் காணியும் (இரண்டு பக்கமும் வீதிகளைக் கொண்டது), கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு அருகில் (காளிகோயிலடி) 8பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 077 9059840.**

## தேவை

**Home Nursing**

வீட்டு நோயாளிகளைப் பராமரிப்பவர்கள், வீட்டுச் சிறுவர்களைப் பராமரிப்பவர்கள், வீட்டுப் பணிப்பெண்கள் வேறு வேலைகளை விரும்புபவர்கள் எவரும் எந்த நாள்களிலும் ஆவணங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**உதவும் கரங்கள்**
**C/o குமார் ஏஜென்ட்,**
133/3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7727, 077 3164375 (44201)

## Diploma in Hardware Engineering

2 மாதங்களில் நீங்களே கணனியினை Assemble செய்துகொள்ளக் கூடியவாறு கற்பிக்கப்படும்.

- சிறுவர்களுக்கான கணனிக் கற்கை நெறி
- கணனிகளில் ஏற்படும் பழுதுகள் திருத்திக்கொடுக்கப்படும்.

**ஆரம்பம்: 20-04-2005**

தொடர்புகளுக்கு:
**GKC Academy,**
இல.5, வைமன் வீதி, நல்லூர். (44237)

## தபாலதிபர் நியமனம்

வலி.தெற்கு,ஏப்.16

காங்கேசன்துறை தபாற்கந்தோருக்குத் தபாலதிபராக எஸ்.கோபாலகிருஷ்ணன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறைத் தபால் நிலைய அதிபராகக் கடமையாற்றிய எஸ்.பவளத்துரை அளவெட்டி உபதபாலகத்தின் தபாலதிபராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். (ஒ-152)

யாழ்ப்பாணம் நாடகர் வழக்கியற் கழகமும்
பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகமும்
இணைந்து தயாரித்து வழங்கும்

**சங்கரதாஸ் சுவாமிகளின் "பவளக்கொடி"** [இசைநாடகம்]

காலம் : 16.04.2005 சனிக்கிழமை
நேரம் : மாலை 3.00 மணி
இடம் : கைலாசபதி கலையரங்கு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
அனுமதிச்சீட்டு ரூபா 20/- ரூபா 50/-
விளம்பர அனுசரணை: ஜெகன் பார்மசி
இல. 462, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(44239)(32-14-17-26)

## கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்குரிய மூர்த்தி, பிரபு ஆகியோரின் தந்தை

**கந்தையா செல்லத்துரைப் பத்தர்**

காலமானதையிட்டு மிக வருந்துவதுடன், அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், ஆத்மா சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**வைஷ்ணவி நகைப்பூங்கா**
பிரதான வீதி (பஸ் நிலையம்), நெல்லியடி.
(சி-42314)(42-14-17-26)

# SAFETY FIRST

உழைக்கும் வர்க்கத்தின் மத்தியில் பாதுகாப்பினைப் பற்றிய விழிப்புணர்வூட்ட வடமாகாணத்தில் கைத்தொழில் பாதுகாப்பு வாரம்

வைகாசி 1-7 வரை கொண்டாடப்படவுள்ளன.

*மேலதிக விவரங்களுக்குத் தொடர்பு:*

**தொழில்சார் பாதுகாப்புச் சுகாதார சேமநல தகவல் நிலையம்,**
**மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் அலுவலகம்.**
**133, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
T.P.: 021 2226332.

பிரிந்த உயிரினையோ, இழந்த உறுப்பினையோ நஷ்டஈட்டினால் மீளப்பெற முடியாது.

(44149)(26-14-17)

## குழந்தை யேசுவை நோக்கிச் செபம்

### அற்புதமான சக்திமிகு நவநாள் செபம்



அ) "கேளுங்கள் கொடுக்கப்படும்;
தேடுங்கள் கண்டடைவீர்கள்;
தட்டுங்கள் திறக்கப்படும்" என்று
திருவாய் மலர்ந்தருளிய யேசுவே!
உமது திருத்தாயார் அதிபரிசுத்த
மரியன்னை வழியாக அடியேன்
தட்டுகிறேன். என் மன்றாட்டைக்
கேட்டருளும்.
(தேவையைக் குறிப்பிடவும்)

ஆ) "என் நாமத்தினால் என் பிதாவிடம்
கேட்பதெல்லாம் உங்களுக்குத் தரப்படும்"
என்று திருவாக்களித்த மதுரமான யேசுவே! உமது
திருத்தாயார் அதிபரிசுத்த மரியன்னை
வழியாக அடியேன் தாழ்ச்சியோடு இந்த
அவசரமான எனது தேவையைத் தந்தருளுமாறு
உமது பெயரால் பிதாவிடம் கேட்கிறேன்.
(தேவையைக் குறிப்பிடவும்)

இ) "வானமும் பூமியும் ஒழிந்துபோகும்,
ஆனால் என் வார்த்தைகளோ
அழிந்து போகா" என்று திருவுளம் பற்றிய
அன்பான யேசுவே! உமது திருத்தாயார்
அதிபரிசுத்த மரியன்னை வழியாக எனது
மன்றாட்டு நிச்சயமாகக் கேட்டருளப்படும்
என்று நம்பிக்கையோடு விசுவாசிக்கின்றேன்.
(தேவையைக் குறிப்பிடவும்)

உங்கள் தேவை எவ்வளவு கடினமாய் இருப்பினும்!

- ஒவ்வொரு திங்கள் அல்லது வியாழன் தொடர்ச்சியாக 9 கிழமைகள் சொல்லலாம் அல்லது
- அவசரம் எனில் 9 நாள்களில் தொடர்ச்சியாக ஒரு நாளில் 9 முறை (சரியாக ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு தடவை வீதம்) சொன்னால் பலன் கிடைக்கும்.

**நன்றி கூறும் அடியாள்.**

(44159)(42-14-17-26)

# வீதிவிளக்குகள் பொருத்தப்படாமையே இரவுநேர விபத்துக்களுக்குக் காரணம்

## காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஏப்.16

கிளிநொச்சி நகர்ப் பகுதியில் இரவு நேரங்களில் விபத்துக்கள் இடம்பெற வீதி விளக்குகள் இன்மையே காரணம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் எஸ்.சிவகுமாரன்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

கிளிநொச்சி நகர வீதிகளூடாக இரவு நேரங்களில் பல நூற்றுக்கணக்கான வாகனங்கள் பயணிக்கின்றன. அந்தவேளைகளில் வீதிகளில் வாகனங்களின் வெளிச்சத்தைத் தவிர வேறு வெளிச்சம் எதுவும் இல்லை. எந்தவிதமான வீதிவிளக்குகளும் அங்கு பொருத்தப்பட்டிருக்கவில்லை.

இதன் காரணமாகவே, வீதிகளில் இரவு வேளைகளில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. இரவுநேரங்களில் வீதி விளக்குகள் இருக்குமானால் இரவில் நடக்கும் விபத்துக்களை ஓரளவு தடுக்கமுடியும். எனவே, உரியவர்கள் இதனைக் கவனத்தில் எடுத்து இதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் - என்றார். (எ-203)

# தற்காலிக முகாம்களில் வசிப்போருக்கு சமையல் உபகரணங்கள் அன்பளிப்பு

புதுக்குடியிருப்பு, ஏப்,16

சுனாமி அனர்த்தத்தால் முல்லைத்தீவில் பாதிக்கப்பட்டு தற்காலிக முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் சமையல் உபகரணங்கள், உடுபுடைவைகள் என்பனவற்றை வழங்கிவருகின்றன.

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு, கடந்த 11 ஆம் திகதி கள்ளப்பாடு மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையச் சிறுவர்களுக்கு உடுபுடைவைகளை வழங்கியது.

மேற்படி முகாமில் தங்கியிருப்போருக்கு 'போரூட்' நிறுவனமும் சமையல் உபகரணங்கள் மற்றும் உடுபுடைவைகளை வழங்கியிருந்தது. (எ-353-204)

## வீதி திருத்தும் பணிகள்

முழங்காவில்,ஏப்.16

கிளிநொச்சி, கிராஞ்சிக் கிராமத்தின் தபால் கந்தோர் வீதியின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பூநகரி பிரதேச சபை இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது.

கிராஞ்சி கிராமத்தின் வீதிகள் அனைத்தும் கடந்த 30 வருட காலமாகப் புனரமைக்கப்படாமல் இருந்தன. (எ-323-202)




## வெதுப்பக உற்பத்திகள் குறித்த பயிற்சி வகுப்பு

கிளிநொச்சி,ஏப்.16

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய வெதுப்பகப் பொருள்களை உற்பத்தி செய்வது தொடர்பான பயிற்சி வகுப்புகள் கடந்த 10 ஆம் திகதி பூநகரி பரமன் கிராய் வெதுப்பக வளாகத்தில் நடைபெற்றன.

ஐ.எல்.ஓ நிறுவன நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையகத்தால் நடைமுறைப்படுத்தப்படும் மேற்படி திட்டம் தொடர்பான பயிற்சி வகுப்பு கிளிநொச்சி மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தின் வெளிக்கள அலுவலர் அ.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இத்திட்டத்தில் பாடசாலையில் இருந்து இடைவிலகிய 14-18 வயதிற்கு உட்பட்ட 10 பயனாளிகளும், பெண்களைக் குடும்பத் தலைவர்களாகக் கொண்ட 10 பெண்களும் உள்வாங்கப்பட்டுள்ளனர். பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வில் பொருண்மிய மதியுரையக இணைப்பாளர் சி.விஜேந்திரா, ஐ.எல்.ஓ.நிறுவன இணைப்பாளர் ஜோசப், தென் இலங்கையைச் சேர்ந்த பயிற்றுவிப்பாளர்கள், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், செயலாளர் மற்றும் கிராம மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எ-202)

## கல்விப் பேரவையின் பொதுக்கூட்டம்

புதுக்குடியிருப்பு,ஏப்.16

முல்லைத்தீவு மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-353)

# முல்லைத்தீவில் ஒன்பது தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம்

புதுக்குடியிருப்பு,ஏப்.16

முல்லைத்தீவு வலயப் பாடசாலைகளுக்கு 9 ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றிய 9 ஆசிரியர்களே இவ்வாறு வடக்கு - கிழக்கு கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் விவரம் வருமாறு:-

இ.யோகலக்சுமி (முல்லைத்தீவு ம.வி.), வே.தயாளினி (வற்றாப்பளை ம.வி), கி.மங்களேஸ்வரி (வள்ளுவபுரம் பாரதி வித்தியாலயம் அ.கிருபாமணிதேவி (புதுக்குடியிருப்பு ம.வி), பே.கர்ந்தகுமாரி (வற்றாப்பளை ம.வி.), வே.மதிவதனி (சுதந்திரபுரம் அ.த.க. பாடசாலை), இ.இந்திரவதனி (உடையார்கட்டு ம.வி.), த.இராஜவதனி (சிலாவத்தை தமிழ் வித்தியாலயம்), கா.ஜெயா (கைவேலி கணேச வித்தியாலயம்).(எ-353-202)



பரந்தன் பிரதேச எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் கடந்த 28ஆம் திகதி பரந்தன் மகாவித்தியாலயத்தில் பேராளர் சங்கமம் நடத்தப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.
(படம்: பரந்தன் செய்தியாளர்)

# மக்கள் வங்கியின் நடமாடும் சேவை

புதுக்குடியிருப்பு,ஏப்.16

சுனாமி அனர்த்தத்தால் முல்லைத்தீவு பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசினால் வழங்கப்படும் நிதி, மக்கள் வங்கியின் நடமாடும் சேவைமூலம் வைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

மக்கள் வங்கியின் நீடித்த கரும பீடத்தின் ஊடாக மக்களுக்கு இச்சேவை வழங்கப்படுகிறது.

இன்று சனிக்கிழமை செம்மலை கிழக்கு நாயாறு கிராம மக்களுக்கு செம்மலை மகா வித்தியாலயத்திலும்

நாளை ஞாயிற்றுக்கிழமை உடுப்புக்குளம் கிராம மக்களுக்கு இப்பகுதி கிராம சேவையாளர் அலுவலகத்திலும்

அன்றையதினம் பிற்பகல் ஒரு மணிக்கு அளம்பில் மக்களுக்கு அளம்பில்தெற்கு கிராம சேவையாளர் அலுவலகத்திலும் நடமாடும் சேவை நடைபெறவுள்ளதாக மக்கள் வங்கி முகாமையாளர் தெரிவித்தார். (எ-353-204)

# கண்டாவளை பகுதி விவசாயிகளிடமிருந்தும் விரைவில் நெல்கொள்வனவு செய்யப்படும்

## கிளிநொச்சி அரச அதிபர் உறுதிமொழி

பரந்தன், ஏப்.16

கண்டாவளைப் பிரதேச விவசாயிகள் 2004 - 2005 பெரும்போகத்தில் உற்பத்தி செய்த நெல்லைக் கொள்வனவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

கண்டாவளைப் பிரதேச விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்யப்படாமை குறித்துக் கேட்டபோது அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

நெல்கொள்வனவுக்காக அரசு 50 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது. அது கிடைத்தவுடன், நெல்கொள்வனவுக்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ப.நோ.கூ.சங்கங்களுக்கு நெல்கொள்வனவுக்காக 2.5 மில்லியன் ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து விவசாயிகளிடமிருந்தும் பரவலாக நெல்லைக் கொள்வனவு செய்யுமாறு குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும் கண்டாவளை புறக்கணிக்கப்பட்டுள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை அரசு நெல் கொள்வனவுக்கென நிதி வழங்கியதும் புறக்கணிக்கப்பட்ட பகுதிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு நெல் கொள்வனவு செய்யப்படும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-352-204)

# வேளாண் உள்ளீட்டு உற்பத்தி தொடர்பான கருத்தூட்டல்

பரந்தன்,ஏப்.16

வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனத்தினரும் 'மல்ரி பிளெக்ஸ்' நிறுவனத்தினரும் இணைந்து கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் வேளாண் உள்ளீட்டு உற்பத்திகள் தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வுகளை நடத்தியுள்ளனர்.

இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தைச் சேர்ந்த டாக்டர் சிறீராம் 'மல்ரி பிளெக்ஸ்' நிறுவனப் பணிப்பாளர் வடிவேல் வரதராசன், வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவன விவசாய உத்தியோகத்தர் கந்தசாமி ஆகியோர் இணைந்து கருத்துரைகளை வழங்கினர்.

இராமநாதபுரம் கமநல சேவைகள் நிலையம், புன்னை நீராவி, உடையார்கட்டு கமநல சேவைகள் நிலையம், துணுக்காய் கமநல சேவைகள் நிலையம், பாண்டியன்குளம், ஐய்யன் குளம், பரப்பான் கண்டல், முழங்காவில், பூநகரி, மாமடு, ஆனந்தபுளியங்குளம், கனகராஜன் குளம், உருத்திரபுரம், முறிப்பு, வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம் ஆகிய இடங்களில் இக்கருத்தூட்டல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இரசாயன கிருமிநாசினி இல்லாத பயிர்ச் செய்கை முறைகள், கிருமி நாசினியின் தாக்கம், பயிர்களுக்கு வழங்க வேண்டிய இயற்கையான தயாரிப்புகள், திரவ-பசளை வடிவான உள்ளீட்டுப் பொருள்கள் என்பவை தொடர்பான விளக்கங்கள் இந்தக் கருத்தூட்டல் நிகழ்வுகளில் வழங்கப்பட்டன. (ஒ-202-352)



கற்சிலை மடுவில் பண்டாரவன்னியன் ஞாபகார்த்த சிலையருகே அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்ட கிணறு, பாழடைந்த நிலையில் காணப்படுவதைப் படத்தில் காணலாம். பிரதேசத்திலுள்ள மக்கள் குடிதண்ணீர் வசதியின்றி அல்லற்படும் இவ்வேளையில் இந்தக் கிணறைப் புனரமைத்து ...
... செய்தியாளர்)

# அக்கராயன் பிரதேசத்தில் கமக்கார அமைப்புகள்

ஸ்கந்தபுரம்,ஏப்.16

அக்கராயன் பிரதேசத்திற்குட்பட்ட பல்வேறு கிராமங்களில் கமக்கார அமைப்புக்களுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பாலன்குளம் கிராம கமக்கார அமைப்பிற்குத் தலைவராக சு.செல்வராசாவும் செயலாளராக சு.கிருஷ்ணசாமியும்

மணியன்குள கிராம கமக்கார அமைப்பிற்குத் தலைவராக ம.புவனேந்திரனும் செயலாளராக மா.கோபாலகிருஷ்ணனும் - தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வன்னேரிக்குளம் கிராம கமக்கார அமைப்பிற்குத் தலைவராக கா.யோகராசாவும் செயலாளராக க.யோகலிங்கமும்

ஆனைவிழுந்தான் கிராம கமக்கார அமைப்பிற்குத் தலைவராக பெ.றயினீசும் செலாளராக மா.இராசமூர்த்தியும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

திக்காய் கிராம கமக்கார அமைப்பிற்குத் தலைவராக கா.தர்மராசாவும் செயலாளராக நா.தில்லையம்பலமும்,

குஞ்சுக்குளம் கிராம கமக்கார அமைப்பிற்குத் தலைவராக ச.நவரட்ணமும் செயலாளராக த.புலேந்திரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

காந்திக் கிராம கமக்கார அமைப்பிற்குத் தலைவராக செ.யோகலிங்கமும் செயலாளராக ச.செல்வராசாவும்

ஊற்றுப்புலம் கிராம கமக்கார அமைப்பிற்குத் தலைவராக பெ.ஆனந்தனும் செயலாளராக சி.கந்தசாமியும் - தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஒ-381-202)

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600
Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519
யாழ்⇆கொழும்பு | யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள கொம்பிறசர் (100 லீற்றர் Tank), welding machine (Air cool) விற்பனைக்குண்டு. தொடர்பு: R.V.மோகன், 196/1, நாவலர் வீதி (ரயில்வே கடவைக்கு அருகில்), யாழ்ப்பாணம். (44202)

## வீடு உடன் விற்பனைக்கு

சுதுமலை கிழக்கு, மானிப்பாயில் (மலை வேம படி ஒழுங்கை) சுற்று மதிலுடனும் சகல வசதிகளுடனும் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: T.P.: 077 6020660. (44251)

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, ஈச்சமோட்டை வீதியில இலக்கம் 70/7, கொண்டதும் அமைதியான சூழலில் கிணற்று வசதி கொண்டதுமான வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: இலக்கம் 2, சிறீமகாபோதி வீதி, தெஹிவளை, தொலைபேசி இலக்கம். 2736751 (தெஹிவளை). (44254)

## தவறிவிட்டன

சடையாளி, காரைநகரைச் சேர்ந்த கதிரவேலு பற்குணராசா என்பவருடைய தே.அ.அ.இல. (762674920V), சாரதி அனுமதிப்பத்திரம் என்பவற்றுடன் கூடிய பேர்ஸ் மனோகரா தியேட்டருக்கு அருகே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் பணிமனை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். (44271)

கையடக்கத் தொலைபேசி ஒன்று 15.04.2005 வெள்ளிக்கிழமை 769 இலக்க பாதை பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தகவல் தரவும். செல்வராசா ஜெகந்தன, சாவகச்சேரி வடக்கு, மீசாலை T.P.: 0776 968881 (சன்மானம் வழங்கப்படும). (-4273)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் 1Kg 170/-. சுத்தம் செய்தது 1Kg 255/- மற்றும் புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பிற்கு NEW R.S.K. FARM - மான்ஸ் பாடசாலை வீதி உடுவில், NEW R.S.K. FARM மானிப்பாய் றோட் பெரியமதவடி, உடுவில். (44126)

புறொயிலர் இறைச்சிக்கோழிகளும், விறாத்துக் குஞ்சுகளும் கலப்பின சேவல்கோழிகளும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல்செற் அருகிலுள்ள புலவனார் வீதி. (44270)

## நாய்க்குட்டிகள விற்பனைக்கு

பூச்சி நீக்கப்பட்டதும் தடுப்பூசி போடப்பட்டதும் 2 மாதங்கள் நிறைந்ததுமான Pure Doberman Pinchar நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 55/1, பழம்றோட், கந்தர்மடம். (44181)

Great Dare நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. முற்பணம் செலுத்திப் பதிவு செய்தவர்கள் இன்று (16.04.2005) சனிக்கிழமை வந்து பெற்றுக்கொள்ளவும். அத்துடன், Dachshund பெண் நாய்க்குட்டி (ஒன்று) விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (44266)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்ப, 1964 ஆம் ஆண்டு ரேவதி நட்சத்திரம், 8இல் செவ்வாய் உள்ள மணமகளுக்கு (SRI LANKAN SCHOOL IN OMAN) ஆசிரியைக்கு இலங்கையில் பட்டதாரி அல்லது DOCTOR, ENGINEER மணமகன தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின்வீதி, சாவகச்சேரி. (44205)

இந்து கௌரவ குடும்பம், 1969ஆம் ஆண்டு உதயச் செவ்வாய் உத்தரம் 3ஆம் பாதம், உள்ள மணமகளுக்கு உள்ளூரில் அரச உத்தியோகம் அல்லது வெளிநாட்டில் உள்ள மணமகன தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின்வீதி, சாவகச்சேரி. (44203)

## மணமகள் தேவை

கௌரவ குடும்ப, 1976ஆம் ஆண்டு மிருகசீரிடம் முதலாம் பாதம் உள்ள U.K இல் உள்ள மணமகனுக்கு, றோமன் கத்தோலிக்க, படித்த, அழகான மணமகள் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின்வீதி, சாவகச்சேரி. (44204)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1977இல் பிறந்த, பாவங்கள் குறைந்த (ஏரேமகன்) சொந்தத் தொழில் செய்ப்வருக்கு படித்த, அழகிய மணமகள் தேவை. தொடர்பு: T.P.: 021 45 90227 (44253)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broilar குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 25.04.05 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும்,. சுட்டிபாம் - வட்டுக்கோட்டை,. சன்னதிபாம் - தொண்டைமானாறு,. ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி,. முருகன - சாவகச்சேரி,. நல்லூர் பாம் சென்ரர் - நல்லூர். (44267)

## திருமணசேவை

டாக்டர்கள், பட்டதாரிகள், பொருளியலாளர்கள், வர்த்தகர்கள், ஆசிரியர்கள் மற்றும் வெளிநாடுகளில் பிரஜாவுரிமை பெற்ற மணமக்களும் பாவம் கூடிய மணமக்களும் எம்மிடமுள்ளனர். தொடர்பு: 286, நாவலர் றோட், கமலக்கண்ணன் திருமணசேவை, கைலாசபிள்ளையார் கோயிலடி, யாழ்ப்பாணம். (44268)

## மாடு காணவில்லை

சிவப்பு நிறப்பசுமாடு - கன்று ஈனும் நிலையில் சங்குகட்டிய, சிறியசுருள் வளைந்த கொம்புகளுடன் - 07.04.2005 இலிருந்து காணவில்லை. கண்டவர்கள் இல.37, புங்கன்குளம் வீதி, அரியாலையிலுள்ள நவரட்ணம் புண்ணியமூர்த்தி (இ.மி.ச.) என்பவருக்கு தகவல் தரவும். தகுநத சன்மானம் வழங்கப்படும். (44272)

## அதிகரித்த சம்பளம் கிடைத்தது

தென்மராட்சி,ஏப்.16

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு அதிகரித்த சம்பளக் கொடுப்பனவான ரூ.2 ஆயிரத்து 500 ஏப்ரல் மாதச் சம்பளத்துடன் வழங்கப்பட்டுள்ளது. (எ-117)

## குருநகரில் முன்னிரவில் மின்தடை

குருநகர்,ஏப்.16

குருநகர் பகுதியில் கடந்த சில தினங்களாக முன்னிரவு வேளையில் மின்தடை ஏற்பட்டுவருவதாக இப்பகுதி மின்பாவனையாளர்கள் முறைப்படுகின்றனர்.

இரவு நேரங்களில் தினமும் 7மணி தொடக்கம் 8 மணி வரையில் இத்தடை ஏற்படுவதாகவும் -

வீதிகள் திடீரென இருளில் மூழ்கிவிடுவதனால் வீதிகளினூடாகப் பயணிப்போர் மிகுந்த நெருக்கடியை அனுபவித்து வருகின்றனர் என்றும் - கூறப்பட்டது.

மின்தடை காரணமாக சனசமூக நிலையங்கள் மற்றும் பொது மண்டபங்களில இரவு நேரங்களில் மீட்டல் வகுப்புக்களை பயிலும் மாணவர்களும் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் - கூறப்பட்டது. (எ-51)


# 21 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY



## ரகு தினேஸ்கரன் (மானிப்பாய்)

உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றான Monash University மெல்பேர்ன், ஆஸ்திரேலியாவில் பல் ஊடக நெறியில் பட்டதாரி மாணவனாகக் கல்வி பயினறுவரும் ரகு தினேஸ்கரன் தனது 21 ஆவது பிறந்த தினத்தை இன்று 16.04.2005 இல் மெல்பேர்னில் கொண்டாடுகின்றார். தினேஸ் அவர்களுக்கு அன்புடன் எமது நல் வாழ்த்துக்கள்!

நுணாவில் மத்தி, சாவகச்சேரி (44260)(22-16-42) சுந்தர் அங்கிள், திலகம் அத்தை.



# கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய

**சின்னராசா பாலசுப்பிரமணியம்(பாலா)**

அவர்கள் காலமானதையிட்டு நாம் எமது ஆழ்ந்த மன வருத்தத்தினையும் ஆழ்ந்த அனுதாபத்தையும் அவர்களின் உற்றார், உறவினர், நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம். அவரின் ஆத்மா சாந்தியடைய எலலாம் வல்ல வண்ணை ஸ்ரீ வீஸ்வலிங்க மகா கணபதிப்பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

தர்மகர்த்தா சபை
வண்ணை ஸ்ரீ வீஸ்வலிங்க மகா கணபதி கோயில்
(பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோயில்) யாழ்ப்பாணம். (44257)(22-16-42)


## வடக்கு - கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

### ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

### கடன் இலக்கம் - 1846 - ஸ்ரீ (எஸ்.எவ்.)

### யாழ்.மாவட்டத்தில் சமூக மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தை அமுல் படுத்துவதற்குப் பங்குதாரராவதற்கான அரசசார்பற்ற நிறுவனங்களின் (என்.ஜி.ஓ.) விருப்ப வெளிப்பாடு பற்றிய அழைப்பு

வடக்கு - கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக பல தரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. வட கிழக்கின் இன முரண்பாட்டினால் மக்களின், குறிப்பாக உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளான நிவாரணம், புனரமைப்பு வேலைகளுக்கு மேலும் வலுவூட்டி பங்களிப்புச் செய்வதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இத்திட்டம் வடகிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களில் செயற்படுவதோடு விடுவிக்கப்பட்ட, விடுவிக்கப்படாத பகுதிகளையும் உள்ளடக்கியதாகும்.

இத்திட்டம் அரசாங்க திணைக்களங்களின் உதவியுடன் (அரச திணைக்களங்கள், திட்ட வெளிக்கள உத்தியோகத்தர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள்) உள்ளூர் சமுதாய அமைப்புக்களினாலும், உள்ளூர் சமூகங்களினாலும் அமுல்படுத்தப்படும். இந்த சமூக அபிவிருத்தித் திட்டங்கள் சமூகத்தை மையமாகக் கொண்ட சமூகத்தவர்களின் பூரண பங்களிப்போடு செயற்படுத்தப்படும். இத்திட்டத்தில் பயன்பெறும் சமூகத்தினர் இத்திட்டத்தைத் திட்டமிடுவதிலும், அமுல் நடத்துவதிலும் இத்திட்டத்தின் அன்றாட அபிவிருத்தி வேலைகளைக் கண்காணிப்பதிலும் முற்றாகப் பங்களிப்புச் செய்வதை உறுதிப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பின்வரும் கிராமங்களில் இனங்காணப்பட்ட சமூகத்தினரிடையே சமூக அபிவிருத்தித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கும், சமூகத்தை அபிவிருத்திக்குத் தயார்ப்படுத்துவதற்கும், வளங்களை ஒன்றுபடுத்துவதற்கும் நிறுவன ரீதியான அபிவிருத்தியை உருவாக்குவதற்கும் ஏற்கனவே வடக்கு - கிழக்கில் திட்டங்களைச் செயற்படுத்தும் தகுதிவாய்ந்த அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து விருப்பத்தை வெளிப்படுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | கிராமம் | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | வடமராட்சி தெற்கு மேற்கு | யார்க்கரு - காட்டுப்புலம் | J/368 |
| | வலிகாமம் கிழக்கு | புத்தூர் மேற்கு - கலைமதி | J/273 |

ஆர்வமுடைய அரசசார்பற்ற நிறுவனம் இது பற்றிய மேலதிக விவரங்களை வேலைநாள்களில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 3.30மணி வரை என்னிடமிருந்து (தொலைபேசி 2223625 தொலைநகல் 2225163 மின்னஞ்சல் necrodjf@sltnet.lk) பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தை அமுல் நடத்த விரும்பும் தகுதிவாய்ந்த அரசசார்பற்ற நிறுவனம் தங்களுடைய விரும்பத் தெரிவை எனக்கு 02.05.2005 மாலை 3.00 மணிக்கு முன்பதாகத் தெரிவிக்க வேண்டும்.

விருப்பத் தெரிவை அறிவிக்கும் பொழுது பின்வரும் விவரங்களை அது உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.

1. விண்ணப்பிக்கும் நிறுவனம் பற்றிய விவரங்கள், நிறுவனத்தின் நோக்கம், முகவரி, தொலைபேசி இலக்கம், சட்டரீதியான பதிவுசெய்த விவரங்கள், ஆளணிகள், நிறுவன ஒழுங்கமைப்பு, கிளைக் காரியாலயம் முதலியன.
2. தொழில்சார் அனுபவமுடைய நிபுணர்களின் எண்ணிக்கையும் நிபுணத்துவம் பெற்ற துறையும்.
3. வடகிழக்கு மாகாணத்தில் புனரமைப்பு சமூக மீளமைப்பு வேலைகளில் உள்ள அனுபவம்.
4. விசேடமாக வடகிழக்கில் சமூக ஒருங்கிணைத்தல், சமூக பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள், சிறுகுழுக்களை உருவாக்குதல், சிறிய கடன் நடவடிக்கைகளை உருவாக்கல் ஆகியவற்றில் உள்ள அனுபவம்.
5. வட கிழக்கில் தற்போது தங்களால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத் தொகையும், கடந்த 05 வருடங்களாக நடைமுறைப்படுத்திய வேலைத் திட்டங்களின் விவரங்களும்.

06. இக்குறிப்பிட்ட துறையில் சாதித்த குறிப்பிடத்தக்க சாதனைகள்.
07. விரும்புத் தெரிவிற்கான வேறு ஏதாவது தகவல்கள்.

எல்லா ஆவணங்களும் விண்ணப்பமும் அந்தரங்கமாகப் பேணிக்காக்கப்படும் என்பதையும் அவை திருப்பி அனுப்பப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**க.கணேஷ்,**
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம். (சி.42321)(42-16)


## 13.04.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 1598

22 61 63 64 03

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.20,00,000/-

| | | | |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 20,00,000/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 17 | 5,000/- | 85,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 201 | 1,000/- | 2,01,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 691 | 500/- | 3,45,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 10,215 | 40/- | 4,08,600/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 9,672 | 20/- | 1,93,440/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 1,45,838 | 10/- | 14,58,380/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 41,89,920/-

200234264-3-09
200232655-9-26
200229393-8-21
200234025-9-53
200229564-1-03


## விவசாயப்பயிற்சி விண்ணப்பம்

வலி.தெற்கு,ஏப்.16

மருதனார்மடத்தில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் விவசாயப் பயிற்சி நெறிககான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விவசாய மூலதததுவம், பயிரியல், பூங்கனியியல், மிருக பரிபாலனம் ஆகியதுறைகளை உள்ளடக்கியதாக நான்கு மாதங்களுக்கான பயிற்சி நெறிகளே வழங்கப்படவுள்ளன.

இலவசமாக நடத்தப்படவுள்ள இந்தப் பயிற்சிநெறியில் ஜி.சீ.ஈ.சாதாரண தரம் வரை கல்விகற்ற 18 இற்கும் 26 இற்கும் இடைப்பட்ட வயதுடைய இரு பாலாரும் இணைந்து கொள்ள முடியும்.

பயிற்சி நெறியில் கலந்துகொள்ள ஆவமுடையவர்களை இம்மாதம் 27ஆம் திகதி காலை 9 மணிக்கு மேற்படி நிறுவனத்தில் நடைபெற உள்ள நேர்முகப் பரீட்சைக்குச் சமுக மளிக்குமாறு விவ சாய நிறுவன அதிபர் அறிவித்துள்ளார். (எ-152)

சென் . பற்றிக்ஸ் கல்லூரியும் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதும் காட்சி





இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் புங்குடுதீவு மகா வித்தியாலயமும் மோதும் காட்சி.

யாழ்.பாடசாலைகள் உதைபந்தாட்டம்

# சென்.பற்றிக்ஸ், ஹென்றீஸ் அணிகள் மாவட்ட சம்பியன்களாகத் தெரிவாகின

## விறுவிறுப்பாக நடந்த ஆட்டங்களில்

வலி.வடக்கு,ஏப்.16

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 17 வயதுப் பிரிவில் இளவாலை யங்ஹென்றீஸ் கல்லூரியும் 19 வயதுப் பிரிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மாவட்டச் சம்பியன்களாகின.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இறுதியாட்டங்கள் கடந்த புதன் கிழமை இடம்பெற்றன.

19வயதுப் பிரிவினருக்கான இறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும், சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதல்பாதி ஆட்டம் ஆரம்பமாகிய சில நிமிடங்கள் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு சாதகமான முறையில் விளையாட்டு அமைந்தபோதிலும், போட்டியை மானிப்பாய் இந்துக் கல்லூரியினர் தமது பக்கம் எடுத்து சென்.பற்றிக்ஸ் கல்லூரியை நெருக்கடிக்கு உள்ளாக்கினர்.

இரு அணிகளும் விடாமுயற்சியுடன் விளையாடியபோதிலும் முதல்பாதி ஆட்டம் முடிவடையும் வரை இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறமுடியவில்லை.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மிகவும் நெருக்கமாக விளையாடியதுடன் கோல்கள் பெறும் வாய்ப்பையும் கொண்டு இருந்தனர். இதனை உரிய முறையில் பயன்படுத்தவும் தவறினார்கள்.

ஆட்டம் முடிவடைய 10 நிமிடங்கள் இருக்கும் நிலையில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி பின்னணி வீரன் தனது அணியின் வலதுகரை வீரன் கயானனுக்கு கொடுத்த பந்தைப் பெற்று அவர் கோல் கம்பத்தை நோக்கி அடித்தார்.

கோல் கம்பத்திற்கு அருகில் நின்று இதனைத் தடுத்து விளையாட முயன்ற மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பின்னணி வீரனின் காலில் பட்ட பந்து கோல் கம்பத்தில் நுழைந்தமையால் தனது அணிக்கு தானே கோலைத் தட்டியதன் மூலம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கான முதலாவது கோல் கிடைக்கப்பெற்றது.

ஆனாலும், தொடர்ந்து மானிப்பாய் இந்துக் கல்லூரி விடாமுயற்சியுடன் மிகவும் வேகமாகவும் நெருக்கமாகவும் விளையாடினார்கள்.

ஆட்டமுடிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை வெற்றி கொண்டு மாவட்ட சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

17 வயதுப் பிரிவினருக்கான இறுதி ஆட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் புங்குடுதீவு மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

இரு அணியினரும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்லர் என்ற நிலையில் விளையாடினார்கள். ஆனாலும், புனித ஹென்றியரசர் கல்லூரி தனக்கு தண்டனை உதை எல்லைக்கு சற்று வெளியே கிடைத்த நேர் உதையொன்றை சுதர்சன் கோல் கம்பத்தை நோக்கி உதைக்க அதனை கோல் காப்பாளர் கோல் கம்பத்தினுள் தட்டிவிட முயன்ற போது பந்து கோல்கம்பத்தினுள் கையில்பட்டு சென்றமையால் முதலாவது கோல் புனித ஹென்றியரசர் கல்லூரிக்கு கிடைக்கப் பெற்றது.

தொடர்ந்து புங்குடுதீவு மகாவித்தியாலயம் மனம் சோராது தொடர்ந்தும் வேகமாக விளையாடினார்கள்.

முதல்பாதி ஆட்டம் 1:0 என்ற கோல் கணக்கில் பூர்த்தி அடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் தனது அணிக்கான கோல்களைப் பெறவேண்டும் என்ற ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்களின் ஆலோசனைகளுடன் வீரர்கள் ஆட்டத்தைத் தொடங்கினார்கள்.

ஆட்டம் தொடங்கிய சில நிமிட நேரத்தில் புனித ஹென்றியரசர் வீரன் ஒருவர் தவறு செய்தமையால் மத்திய பகுதியில் இருந்து சுமார் 3அடி தூரத்தின் முன்னாள் நேர் உதையொன்று புங்குடுதீவு மகா வித்தியாலயத்திற்கு வழங்கப்பட்டது.

இதனைப் பின்னணி வீரன் அன்ரனி விவேஸ் நல்ல முறையில் கோல் கம்பத்தை நோக்கி அடிக்க கோல்காப்பாளர் அதனைத் தடுக்க முயன்றும் தடுக்காமல் விட, அது கோல் கம்பத்தினுள் சென்று முதலாவது கோலை புங்குடுதீவு மகாவித்தியாலயத்திற்குப் பெற்றுக் கொடுத்தது.

இரு அணிகளும் ஆட்டம் முடிவடையும் நேரம் வரை பெரு முயற்சியுடன் விளையாடிய போதிலும் கோல்களைப் பெறமுடியவில்லை.

ஆட்டம் தலா ஒரு கோல்கள் என்ற நிலையில் முடிவடைந்தது.

மேலதிகமாக Golden Goal முறையில் நேரம் வழங்கப்பட்டது. இதிலும் முதல் ஐந்து நிமிடத்தில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை.

அடுத்த ஐந்து நிமிடத்தில் ஆட்டம் முடிவடைய ஒரு சில செக்கன்கள் இருக்கும்போது புனித ஹென்றியரசர் கல்லூரி வீரன் உயர்த்தி அடித்த பந்தை கோல் காப்பாளர் பிடிப்பதற்குப் பதிலாக கையால் குத்தி வெளியே அனுப்ப முயன்றபோது பந்து கோல் காப்பாளரின் கையில்பட்டு முன்னால்நின்ற புனித ஹென்றியரசர் கல்லூரி வீரன் ஜீவகுமாரின் முதுகில் பட்டு கோல்கம்பத்தினுள் நுழைந்தது.

ஆட்டத்தில் 2:1 என்ற கோல்கணக்கில் புனித ஹென்றியரசர் கல்லூரி, புங்குடுதீவு மகா வித்தியாலயத்தை வெற்றி கொண்டது.

3ஆம் இடத்திற்கான ஆட்டங்களில் 17 வயதுப் பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் 19 வயதுப் பிரிவில் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி வித்தியாலயமும் சமுகம் கொடுக்காமையால் 3ஆம் இடங்களை 17,19 வயதுப்பிரிவு முறையே கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன. (3-86)

வலிகாமம் வலய கரபந்தாட்டம்

# சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி இரு பிரிவுகளில் சம்பியன்

வலிகாமம் கல்விவலயத்தின் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற கரபந்தாட்ட போட்டிகளில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி இரு பிரிவுகளில் வெற்றிபெற்று சம்பியன் ஆகியது.

இவ்வருடம் நடைபெறவுள்ள மாவட்ட மட்டப் போட்டிகளில் 15 வயது, 17 வயது பிரிவு அணிகள் இரண்டும் பங்குபற்ற தகுதிபெற்றுள்ளன.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த மாதம் 30ஆம் திகதி இடம்பெற்ற கரபந்தாட்டப் போட்டிகளின் போது சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் 15 வயது பிரிவு அணியினர் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய அணியினரையும் 17 வயது பிரிவு அணியினர் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய அணியினரையும் எதிர்த்து விளையாடினர்.

இவ்விரு போட்டிகளிலும் சண்டிலிப்பாய் இந்து அணியினர் 2:0 செற் கணக்கில் வெற்றியீட்டினர். (3-135-152)

# மேசைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.16

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினால், யாழ்.மாவட்ட கழகங்களுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் மாலை 3.30 மணிமுதல் யாழ்.மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

பெண்களுக்கான போட்டியில் 4 கழகமும் ஆண்களுக்கான போட்டியில் 7கழகமும் பங்குபற்றுகின்றன. (3-190)

# தென்மராட்சி வலய போட்டிகள் இன்றுமுதல்

தென்மராட்சி,ஏப்.16

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

15 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரபந்தாட்டப் போட்டிகள் இன்றும் நாளையும் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மைதானத்திலும் -

19 வயது ஆண், பெண் பிரிவுகளுக்கான பூப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் திங்கள், செவ்வாய்க்கிழமைகளில்-

சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் தெரிவித்தார். (3-117)

# யாழ். நகரப் படையணி நடத்திய கிரிக்கெட்டில் பொலீஸார் வெற்றி

யாழ்ப்பாணம் ¹ஆவது படைப்பிரிவின் அனுசரணையுடன் 514ஆவது படைப்பிரிவினால் ஒழுங்குசெய்யப்பட்டு நடத்தப்பட்ட இராணுவப் படைப்பிரிவுகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு வைபவமும் கடந்த வாரம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன. இந்த இறுதியாட்டத்தில் பொலீஸ் அணி வெற்றி பெற்றது.

இறுதியாட்டத்தில் பொலீஸ் அணியை எதிர்த்து இராணுவ படை அணியினர் மோதினர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய பொலீஸ் அணியினர் 20ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 157 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டனர்.

158 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என களமிறங்கிய இராணுவப் படை அணியினர் 20 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 91 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

பொலீஸ் அணி 66 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். நகரப் படைத்தளபதி மேஜர் ஜெனரல் டபிள்யூ. எதிரிசிங்க கலந்துகொண்டு வெற்றிபெற்றவர்களுக்கு பரிசிலினை வழங்கினார். (3-190)



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற மாபெரும் துடுப்பாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி தமது விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர், பயிற்றுநர் சகிதம் வெற்றிக் கிண்ணத்துடன் காணப்படுகின்றனர். (3-190)

# பாடசாலைகளுக்கான மென்பந்து கிரிக்கெட் இன்று ஆரம்பமாகின்றது

வலி.வடக்கு,ஏப்.16

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் அரியாலை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானங்களில் காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளன.

ஏற்கனவே வலய மட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகள் இப்போட்டிகளில் கலந்துகொள்ளவிருக்கின்றன. (3-86)

# தீவக கல்வி வலய போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.16

தீவக வலயப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் பெண்களுக்கான கரபந்தாட்டத்தில் கரம்பன்புனித சிறிய புஸ்ப மகளிர் பாடசாலை முதலிடத்தைப் பெற்றது.

காரைநகர் தியாகராசா ம.வி. இரண்டாம் இடத்தைப்பெற்றது.

பெண்களுக்கான 15 வயதுக்குட்பட்டோர் பிரிவில் வேறு பாடசாலைகள் எதுவும் பங்கேற்காத நிலையில் கலந்துகொண்ட காரைநகர் தியாகராஜா ம.வி.வெற்றி பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் இப்போட்டிகள் நடைபெற்றன.(3-51)

## ஆலய சந்நிதிகளில்

திருநெல்வேலி அரசடி ஸ்ரீசிவகாமசுந்தரி அம்பாள் ஆலயப் பெருந் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள உற்சவத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவ மும் இடம்பெறவுள்ளன. (3-203)

★ ★ ★

அல்வாய் சாமணந்தறை ஆலறப்பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

இந்த உற்சவத்தில் எதிர்வரும் 23ஆம்திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (3-70-203)

## 33 ஆம் நாள் நினைவலைகள்

| வித்தாக | | விழுதாக |
|---|---|---|
| 10 | | 15 |
| 07 | | 03 |
| 1936 | | 2005 |



கணேஸ்வரம், அளவெட்டியைப் பிறப்பிடமாகவும்
குளமங்கால், மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட

### அமரர் இளையவி கிருஷ்ணபிள்ளை

ஓடுகின்ற கதிரவன் உறங்க நினைத்தாலும்
நீங்கள் ஒருபோதும் ஓய்வெடுக்க நினைக்கவில்லை
இன்றுடன் நீங்கள் மறைந்து இருநாளொடு
மாதமொன்று அவசரமாய் ஓடியபோதும்
ஆறாத எம் துயரங்கள் ஓடிடுமா?
பாசமிகு அப்பாவே!
ஒன்றென்ன எத்தனை யுகங்களானாலும்
உங்கள் ஊக்கங்களின் உணர்வுகள்
எங்கள் ஞாபகங்களில் கலந்திருக்கும்
வாழ்ந்தோம் பலகாலம் உங்களோடு
மீந்திருக்கும் காலமும் உங்கள் நினைவுகளோடு
எத்தனை பிறப்புகள் எடுத்தாலும்
எங்கள் நிழலில் உங்கள் நிஜங்கள் தொடரும்

உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டி
உங்கள் பாதக் கமலத்திற்கு எங்கள் கண்ணீர்ப்
பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

குளமங்கால்,
மல்லாகம். (44277) (24-14-15)

உங்கள் பிரிவின் துயரில்...
குடும்பத்தினர்.

## நாடகமும் அரங்கியலும்

வழிகாட்டல் கருத்தரங்கும்
துரித மீட்டல் வினாவிடையும்
ஆரம்பம் - 18.04.2005திங்கட்கிழமை
நேரம் 9.00 - 11.00
வழங்குபவர்கள் – T.J.சுதன் B.A.Hons
– S.சுகந்தன் B.A.Hons
– S.கணேஸ் B.A.Hons
அச்சடித்த பாடக்குறிப்புகள் வழங்கப்படும்.
பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ளவும். (43937)(38-11-45)

**Beacon கல்வி நிலையம்**
யாழ். நகர்.

### கோழிக்குஞ்சு விநியோகம்

நம்பர்-1 பகீரா, பிறிமா, புறோயிலர் கோழிக் குஞ்சுகளும் PRIMA சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும் 20-04-2005 மாலை விநியோகிக்கப்படும். உடன் பதிவுகளை மேற் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: **றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி,**

கிளை: தாரகை, முதலாங்கட்டை, பருத்தித்துறை.
றஞ்சித் 517, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,
மதுரா, 221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
ஹரிஸ் ஸ்ரோஸ், பிரதேச சபைக்கட்டடத் தொகுதி, வழக்கம்பரை, தொல்புரம்.
P.ரவி, சாவகச்சேரி - ராஜா, மாவடி, வட்டுக்கோட்டை.
T.P.: 2867, 3529 (44265)(21-24-15-14)

பிரிவு 02
A/L 2007
Acc - திரு. பாலகஜன்
Eco - திரு. மோகன்
திரு. ஜெயக்குமார்
B.st - திரு. யசோ
ஆரம்பம் :16-04-05 Sat 4.00
BEACON
வெலிங்டன் சந்தியருகில்

### உடுபுடைவைகள் அன்பளிப்பு

சாவகச்சேரி, மீசாலை ஆகிய பகுதிகளில் உள்ள வறிய குடும்பங்களுக்கு உடுபுடைவை கள் வழங்கப்பட்டுள்ளன.

பிரிட்டனில் இருந்து கொண்டுவரப்பட்ட உடுபுடைவைகளும் கொழும்பிலுள்ள வர்த்தக நிறுவனமொன்றினால் அனுப்பிவைக்கப்பட்ட உடு புடைவைகளுமே இவ்வாறு வறிய குடும்பங் களுக்கு வழங்கப்பட்டன எனக் கூறப்பட்டது. சாவ கச்சேரி லயன்ஸ் கழ கத்தினூடாக இந்த உடுபுடைவைகள் வழங்கப்பட்டதாக லயன் சி.சற்குணநாதன் தெரி வித்தார். (எ-117)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா சிவசாமி

புங்குடுதவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, மருதானையை வசிப்பிடமாகவும் வவுனியா, நெடுங்குளத்தைத் தற் காலிக வதிவிடமாகவும் கொண்ட பிரபல தொழிலதிபரும் சமாதான நீதிவானுமாகிய கலாநிதி செல்லையா சிவசாமி (உரிமையாளர், லலிதா ரேடிங் கம்பனி - கிளிநொச்சி) சிவசாமி அன் கம்பனி கொழும்பு, Thank with you - கிளிநொச்சி) அவர்கள் 12-04-2005 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் லலிதாம்பிகையின் அன்புக் கணவரும் திலகவதி (கன்டா), நடணசபாபதி (கனடா), இரத்தினசிங்கம் (எயார் லைன் றேடர், கொழும்பு), காலஞ்சென்ற மங்கையர்க்கரசி மற்றும் தவமணிதேவி (கனடா), ஞானசீலன் (கனடா), குணசீலன் கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரிமளபவானி (கனடா), செல்வகுமார் (சுவிஸ் எக்ஸ் கம்பனி), சிவகுமார் (லலீதா பல்பொருள் வாணிபம்), தமிழ்ச்செல்வி (லண்டன்), லலித்குமார் (பழைய மாண வன், கொழும்பு றோயல் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தை யும் சிறிஸ்கந்தராசா (கனடா), சசிகலா (கொழும்பு), இரஞ்சலிங் கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அருணன் (கனடா), அற்புதன் (கனடா), கீர்த்திகா (கனடா), ஷேஷான் (கொழும்பு), சுபானு (லண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு பொரளை ஜயவர்த்தன மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (17-04-2005) ஞாயிற் றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கனத்தை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண் பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*லலிதா கொம்பனி,*
*பரவிப்பாஞ்சான்,*
*கிளிநொச்சி.* (சி-42330)(24-14-15)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### சதாசிவம் சிவகுருநாதன் (நல்லையா)



காளிகோயிலடி திருநெல்வேலியைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரான சதாசிவம் சிவகுருநாதன் (நல்லையா) ஆச்சாரி அவர்கள் 15.04.2005 வெள்ளிக்கிழமை அதி காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சோம சுந்தரம் வீரசிங்கம் - நவரட்ணமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் நாகலோகதேவியின் அன்புக் கணவரும் குமரகுருநாதன் (ஜேர்மனி), திருச்சோதி (பிரான்ஸ்), புண்ணியவதி (கனடா), ஆனந்தகிருஷ்ணன், குருமூர்த்தி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவந்தினி, சுந்தரலிங்கம் (பிரான்ஸ), தவேந்திரன் (கனடா), டயாளினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாம னாரும் காலஞ்சென்ற சிவக்கொழுந்து, சிவனடியார், காலஞ்சென்ற சின்னையா, செல்வராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் மயில வாகனம், மகாலட்சுமி, சிவபாக்கியம், திலகவதி, கமலநாதன், இரா ஜேஸ்வரி, பத்மசோதி, இராசலிங்கம் (கனடா), சண்முகலிங்கம் (பிரான்ஸ்), சடாட்சரம் (லிபியா), சதானந்தராசா (கனடா) ஆகியோான் அன்பு மைத்துனரும் சாயிப்பிரியா, மதுஷா, அஜிதா (பிரான்ஸ்), நிருஷா, நிவேந்தன், நிரோஜன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்மன் வீதி, காளிகோயிலடி,*
*திருநெல்வேலி.* (44280)(22-14-15-24)

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலிகள்

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத் தலைவர்

### லயன் நவரட்ணம் ஜெயதிலகன்



தனது இறுதி மூச்சுவரை மக்கள் பணியில்
தன்னை இணைத்துக்கொண்டு அரும்பணியாற்றிய
எம் கழகத் தலைவருக்கு
கண்ணீர் அஞ்சலிகள்.

*திருநெல்வேலி வட்ட*
*லயன்ஸ் கழகம்.*

(44281) (24-14-15)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் இராசமாணிக்கம் சிவச்செல்வம்

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமானவரே
ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்,

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (17.04.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு இன்பர்சிட்டி கடற்கரை மடத்தில் நடைபெறவுள்ளது.

ஆகவே, அந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் சபிண்டீகரண நிகழ்வுகளிலும் கலந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இன்பர்சிட்டி.*
*பருத்தித்துறை.* (சி/42336) (42-24-14-15)

- குடும்பத்தினர்.

நீண்ட இடைவேளையின் பின்னர்
யாழ். மண்ணில்
வண்டிச் சவாரி
புத்தாண்டையொட்டி
சக்தி FM, சக்தி T.V. நடத்தும்
மாட்டுவண்டிச் சவாரி

17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நீர்வேலி சவாரித்திடலில் மாலை 2.00 மணிக்கு சவாரிக்குத் தயாராகுங்கள்.
இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் போட்டி தினத்தன்று போட்டி நடைபெறும் இடத்திற்கு வருகைதரவும். மேலதிக விவரங்களுக்கு:
இல.03, நவீன சந்தை மேல்புறம், யாழ்ப்பாணம்.

மாட்டுவண்டிச் சவாரி நிறைவுற்ற கையோடு அதே இடத்தில் -
★ முதல் முறையாக நடமாடும் இசை மேடையில்....
★ ஐங்கரன் இசைக்குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியையும் கண்டு களிக்கத் தவறாதீர்கள்!

உத்தியோகபூர்வ நாளிதழ்: உதயன்
(C/42307)(50-14)



## மிகக் குறைந்த கட்டணத்தில் திருமணக் கார்

குளிரூட்டப்பட்ட ஜப்பான் கார்
திருமணத் தேவைகளுக்கு
வாடகைக்கு உண்டு.
யாழ். நகரப்பகுதிக்கு
ரூபா 2800/- மட்டுமே.
(ஏனைய இடங்களுக்குத் தூரங்களுக்கேற்ப கட்டணம் அதிகமாகும்)
தொடர்பு:- 0777283795
★ (ஒரு சில முகூர்த்த நாள்களே பதியப் படாமல் உள்ளன. எனவே, உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்) (44261) (33-11-45)


## புனர்வாழ்வு குறித்த பிராந்திய மாநாடு

யாழ்ப்பாணம்,ஏப்.16

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு தொடர்பான கூட்டுப் பிராந்திய மாநாடு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

லயன்ஸ் கழகங்களில் சர்வதேச ஒன்றியத்தின் 10ஆம், 11ஆம் பிராந்தியத் தலைவர்களின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் லயன்ஸ்கழக மாவட்ட ஆளுநர் எஸ்.சிவானந்தன் தம்பதியினர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.(ஒ-203-204)

## மரக்கிளை பட்டு ஒருவர் காயம்!

யாழ்ப்பாணம்,ஏப்.16

தறித்த மரம் விழுந்தபோது அதன் கீழ் நின்றிருந்த ஒருவர் மரக்கிளை பட்டுத் தலையில் படுகாயமடைந்தார்.

உரும்பிராயில் நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் குஞ்சர் பரமானந்தம் (வயது -43) என்பவரே படுகாயடைந்தராவார். அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-15)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1927 09 14
மறைவு 2004 04 27



அமரர் முத்துராஜா மீனாட்சிசுந்தரம்

திதி : 16.04.2005

பல்லாண்டு வாழ்வாயென்று
பகலிரவாய் கனவு கண்டு வாழ்ந்திருந்தோம்
பொல்லாத காலரக்கன் எம்முகத்தைப் பாராமல்
பாசமின்றி பறித் தெடுத்தான் உன்னுயிரை
கொள்ளாத துயர்மேகம் சூழ்ந்து எம்மை
சோவெனவே கண்ணீர் மழை பெய்யுதையா.
ஓராண்டுடன் ஊழிதான் சென்றாலும்
உன்னினைவோ அகலாது எம்மைவிட்டு.

கடற்கரை வீதி,
நீர்கொழும்பு. (44282)(33-11-45)
பிரிவுத் துயரால் வாடும்:
- குடும்பத்தினர்.


நாதன்ஸ் சினிமா அல்லைப்பிட்டி முன்பாக யாழ்ப்பாணம். குளிரூட்டப்பட்டது
இரண்டாவது வெற்றிவாரம்,
தாவடிமைந்தன் ஜெய்ஆகாஷ்,
பிரணதி, நாசர்,
தாமு, வையாபுரி
நடித்த குருதேவா (சினிமா)



கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா,
வடிவேல் நாசர்
நடித்த



காட்சிகள 11.00. 3.0 7.00 (பு.நே)
விசேட காட்சிகள்: 10.00. 1.00 (பு.நே.)

லக்ஷ்மி இணுவில்
ஸ்ரீகாந், மீராஜஸ்மின், விவேக்
நடித்த ஜீ (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, (பு.நே.)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு கமலஹாசன்,
மனிஷா கொய்ராலா, நாசர் நடித்த



மும்பை X பிரஸ் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

மனோகரா யாழ்ப்பாணம்
விஜய், ஹரினி,
வடிவேல் நடித்த
சச்சின்



காட்சி நேரம்:
10.30 a.m., 2.30.p.m.,6.30p.m.,9.30 p.m.

நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், நமிதா, வடிவேல்
நடித்த ஏய் (ரீல்ஸ்)
கா.நேரம்:
11.00, 2.45,
6.00 (பு.நே)



IIS CITY CAMPUS

# MBA

( Master of Business Administration )

Manipal பல்கலைக்கழகத்தின் மேற்படி கற்கை நெறி எமது நிறுவனத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. யாழ். குடாநாட்டில் பயில விரும்புவோர் அல்லது கற்கைநெறி தொடர்பாக ஆர்வம் உடையோருக்கான கருத்தரங்கு ஒன்று நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கருத்தரங்கில் பல்கலைக்கழகத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இடம்: IIS பிரதான மண்டபம்
#100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

காலம்: இன்று மாலை 03.00 மணி

ஆர்வமுடையோர் பங்கு பற்றிப் பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

மேலதிக விபரங்களுக்கு :
Mrs. Chelvy Suntheresen, Centre Manager
T.P : 021 222 8060

Director
IIS, City Campus,
# 181, Navalar Road, Jaffna.


## ஈராண்டு நினைவஞ்சலி

மண்ணகம் 18 12 1922
விண்ணகம் 07 04 2003



அமரர் குட்டித்தம்பி குருநாதன் (J.P)

(பிரபல கட்டட ஒப்பந்தகாரர்)

திதி: 16.04.2005

ஈராண்டு கழிந்தாலும் ஈரவிழிநீர் குறையாது ஐயா
ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும்
அணையாத தீபமாய் ஒளிவீசுவீரே.
ஆத்ம சாந்திக்காக வேண்டுகின்றோம் இறைவன் பாதமலரை!

ஏழாலை தெற்கு,
மயிலங்காடு, சுன்னாகம். (44289)(33-11-45)
- குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் செல்லையா சிவசாமி அவர்கள்

பிரபல வர்த்தகரும், கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி ஆலய அறங்காவல் சபையின் மூத்த உறுப்பினராகவும், பொருளாளராகவும் செயற்பட்டு ஆலய வளர்ச்சிக்காக அரும்பணி ஆற்றியவராவார். அன்னாரின் இழப்பு எமது ஆலயத்திற்கும் கிளிநொச்சி மாவட்டத்திற்கும் ஒரு பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கந்தப் பெருமானை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

ஆலய அறங்காவல் சபையினரும்,
திருப்பணிக்குழுவினரும், தர்மகர்த்தா சபையினரும்,
ஆலயக்குருக்கள்மார்களும்.

(சி.42328)(39-33-11-45)

## மரண அறிவித்தல்கள்

### நவரட்ணம் ஜெயத்திலகன் (Banker)

(இளைப்பாறிய வங்கியாளர் இலங்கை வங்கி,செலான் வங்கி)



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரட்ணம் ஜெயத்திலகன் 15.04.2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நவரட்ணம் - புனிதவதி தம்பதிகளின் அன்பு மகனும், விசாலாட்சியின் அன்புக் கணவரும், ஜெயதீசன் (லண்டன்), ஜெயசீலன்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

92, பலாலி வீதி,
திருநெல்வேலி. (44290)(56-33-11-45)
தகவல்:
விசாலாட்சி (மனைவி).

### திருமதி மேரி சரஸ்வதி

நீராவியடியைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட மேரி சரஸ்வதி 13.04.2005 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பிள்ளை அன்னலிங்கத்தின் அன்பு மனைவியும் பவளராசா (பிரான்ஸ்), மன்மதராசா (சுவிஸ்), சண்முகராசா (நீர்கொழும்பு), இந்திரா, உருத்திரா ஆகியோரின் அன்புத் தாயும் அற்புதராணி (பிரான்ஸ்), நிர்மலா (சுவிஸ்), சிவஞானம் (நீர்கொழும்பு), விக்கினராசா, உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (16.04.2005) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'அன்பகம்'
உதயசூரியன் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (44274) (35-33-11-45)
தகவல்:-
பிள்ளைகள்.

## ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் ஓவியக் கலை வட்டம் நடத்தும் 'கடல் வரைந்த ஓவியம்' என்ற ஓவியக் கண்காட்சி நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணியளவில் கொழும்பு 201 இல. ஜெம்பட்டா வீதியில் அமைந்துள்ள கலாசுரபி கவின் கலைபயிலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கண்காட்சி எதிர்வரும் 21ஆம் திகதி மட்டக்களப்பு வாகரை கதிரவெளி தமிழ் மகா வித்தியாலயத்திலும்-

23ஆம் திகதி வவுனியா வைரவப் புளியங்குளம்இல. 195/1, புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்திலும்-

26, 27 ஆம் திகதிகளில் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியிலும் - நடைபெறும். (ஒ-88-190)


நாங்கள் என்றும் உங்களுடன்
யாழ்.நகரில்...



பாஸ்போட், அடையாள அட்டைப் படங்களை உடனுக்குடன் படம்பிடித்து (10-15 நிமிடங்களில்) பிரதியாக்கம் செய்து தருகின்றோம்.

இதுமட்டுமா?
▶ Album Binding
▶ Photo Creations
▶ Duro Laminating
▶ Photo Graphing
▶ Digital Video

MOORTHY STUDIO AND DIGITAL COLOUR LAB
62/16, Stanley Road, Jaffna.
(பழைய தபால்கந்தோர் ஒழுங்கை)
Jaffna Road, Manipay.
(C/42332)(50)

# மஹிந்தபுர முகாம் நோக்கி வியாழனன்று துப்பாக்கிச் சூடு!

## விடுதலைப் புலிகள் மறுப்பு

திருகோணமலை, ஏப்.16

திருகோணமலை மஹிந்தபுர இராணுவ முகாமை நோக்கி நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் 25 துப்பாக்கிவேட்டுக்களைத் தீர்த்தனர் என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். ஆனால் புலிகள் இதனை மறுத்துள்ளனர்.

துப்பாக்கி வேட்டுகள் அனைத்தும் இராணுவ முகாமிற்கு மேலாகச் சென்றன என்றும் இராணுவத்திற்கோ முகாமிற்கோ அவற்றால் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்றும் இதுவொரு யுத்த நிறுத்த மீறல் என்றும் -

இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

மஹிந்தபுர இராணுவ முகாமிற்கும் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கும் இடைப்பட்ட சூனியப் பிரதேசத்தில் சிலர் ஆயுதங்களுடன் நடமாடுகின்றனர் என எமக்குத் தகவல் கிடைத்தது.

இதனையடுத்து அப்பிரதேசத்தை நாம் சோதனையிட்டோம். அச்சோதனை நடவடிக்கையின் போதே சில துப்பாக்கி வேட்டுக்கள் எம்மால் தீர்க்கப்பட்டன.

இப்பிரதேசம் அடர்ந்த காட்டுப்பகுதியாக இருப்பதாலும் மஹிந்தபுர இராணுவ முகாமிற்கும் இப் பகுதிக்கும் இடையில் தூரம் அதிகம் என்பதாலும் எமது துப்பாக்கி வேட்டுக்கள் இராணுவ முகாமை நோக்கிச் செல்வதற்கான வாய்பே இல்லை. ஆனால் துப்பாக்கி வேட்டுச் சத்தத்தை மாத்திரம் மஹிந்தபுர இராணுவ முகாமில் இருந்தவர்களால் கேட்க முடிந்திருக்கும்.

இராணுவ முகாமை நோக்கியே நாம் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தேம் என்ற குற்றச்சாட்டை நாம் அடியோடு மறுக்கின்றோம் எனக் கூறினார். (க)

# ஆற்றல் மேம்படுத்தல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்.16

மொறட்டுவைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றம் இலவச தொழில்சார் கற்கை நெறி வழிகாட்டல் ஆற்றல் மேம்படுத்துகை மற்றும் கணனியியல் கருத்தரங்குகளை நடத்தவுள்ளது.

சர்வதேச லயன்ஸ் கழக மாவட்டம் 306 பியின் யாழ். மாவட்ட தொழில் வழிகாட்டல் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் தமிழீழ மாணவர் அமைப்பின் அனுசரணையுடன் இக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும், நாளை ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரியிலும், நாளை மறுதினம் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி ஆகிய இடங்களிலும் காலை 8.30 மணி தொடக்கம் இந்தக் கருத்தரங்கு நடைபெறும். (எ-202)

# சொருவில் பிரதேசத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களும், ஐந்தாவதில் புதிதாக வாங்கப்பட்ட உடுபுடைவைகளும் இருந்தன.

இந்த முகாங்களை கருணா குழுவின ரும் ஈ.என்.டி.எல்.எவ். அமைப்பினரும் இணைந்து மிக அண்மையிலேயே அமைத்திருந்தனர் என்று தமிழ் நெற் இணையத் தள தெரிவித்தது.

ஏற்கனவே, வெலிகந்தை தீவுச்சேனைப் பிரதேசத்தில் கருணா குழுவினரின் முகாம் இருப்பதாகச் செய்திகள் வெளியாகி இருந்தன. இதனால் அப்பகுதி ஊடகங்களின் அதிக கண்காணிப்புக்கு உட்பட்டது. இதனையடுத்து அங்கிருந்த கருணா குழுவினர் இந்தப் பகுதிக்கு இடம்மாறினர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கருணா குழுவினரின் இந்த முகாம் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் தாக்குதலுக்குள்ளாகியுள்ளது என்று இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து நேற்றுக்காலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்ட 5 சடலங்களைத் தாம் மீட்டனர் என்று அரலங்கவில பொலீஸ் பிரிவைச் சேர்ந்த சிரேஸ்ர பொலீஸ் அத்தியட் சகர் எஸ்.எஸ்.ஜே.சவங்கம தெரிவித்தார்.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்ட இருவரை தாங்கள் மீட்டு பொலன்னறுவை வைத்தியசாலையில் சேர்ந்தனர் என்றும் அவர் கூறினார்.

இந்தச் சம்பவத்தில் கருணா குழுவைச் சேர்ந்த 5 பேர் கொல்லப்பட்டனர் என்றும் இருவர் காயமடைந்தனர் என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்னாயக்க தெரிவித்தார்.

காயமடைந்தவர்கள் காத்தான் பிள்ளையான் யோகராஜன், சின்னத்தம்பி மகேந்திரன் ஆகியோர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். இவர்கள் இருவரும் கருணாவுக்கு மிக நெருங்கியவர்கள் என்று கூறப்படுகின்றது. இவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கின்றது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

காயமடைந்த பிள்ளையான் என்பவர் அண்மையில் தீவுச்சேனையில் நடந்த தாக்குதல் ஒன்றில் காயமடைந்து சிகிச்சை பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வண்ணான்துரையடி முகாமில் இருந்த கருணா குழுவினருக்கும் ஈ.என்.டி.எல். எவ். குழுவினருக்கு இடையே ஏற்பட்ட உள் முரண்பாடே இந்தத் தாக்குதலுக்குக் காரணம் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் தென்னிந்தியாவில் இருந்து செயற்பட்டு வருவதாகக் கூறப்படும் ஈ.என்.டி.எல்.எவ். உறுப்பினர்கள் மூவரும் அடங்குவர் என்றும் -

அவர்களில் அந்த அமைப்பின் மூத்த உறுப்பினரான விஜயன் என்பவரும் உயிரிழந்து விட்டார் என்றும் - தமிழ் நெற் கூறுகின்றது. விஜயன் குழு என்ற பெயரிலேயே இந்தக் குழு அழைக்கப்பட்டும் வந்தது.

நேற்றைய தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் சொருவிலைச் சேர்ந்தவர்களான தேவதாசன் தெய்வேந்திரன் (வாசு), கந்தசாமி ஜெயநிதன் (காந்தன்), வாழைச்சேனையைச் சேர்ந்த சின்னப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை (துரை), செல்லையா குழந்தைவேலு (கவி), இராசேந்திரன் பேரின்பநாதன் (விஜயன்) ஆகியோர் என அடையாளம் காணப்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களின் சடலங்கள் பொலன்னறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளன.

கொல்லப்பட்ட விஜயன், புலிகளின் மட்டு. - அம்பாறை அரசியல்துறையின் முன்னாள் பொறுப்பாளர் கௌசல்யன் கொலையில் முக்கிய பங்கேற்றவர் என்று புலிகள் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. விஜயனின் குடும்பம் தமிழ்நாட்டில் இருக்கின்றது.

விஜயன் குழுவினர் அண்மையிலேயே இந்தியாவில் இருந்து இலங்கை வந்திருந்தனர். இவர்களுக்கும் பிள்ளையான் குழுவினருக்கு இடையியே ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து இவர்களுடன் இருந்தவர்களே இவர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்கள் என்று சந்தேகிக்கப்படுவதாகவும் மற்றொரு இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தத் தாக்குதலின் போது கருணாகுழுவில் இருந்தவர்கள் எனக் கூறப்படும் இருவரைக் காணவில்லை என்று பொலீஸாரும் நேற்றுக் காலை தெரிவித்தனர்.

தாக்குதல் இடம்பெற்ற இடத்திற்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சென்று பார்வையிட்டு விசாரணைகளை நடத்தியுள்ளனர். பொலன்னறுவைப் பதில் நீதிவான் சாந்தினி மீகொட சம்பவ இடதிற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார்.

கொலைகள் பற்றி விசாரிக்குமாறு அவர் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை, சொருவிலில் தாக்குதல் நடத்தப்பட்ட பகுதியில் இருந்து பல புகைப் படங்கள் மீட்கப்பட்டன என்றும் -

அவற்றில் பதவியா இராணுவ அதிகாரிகளுடன் தமிழ் இளைஞர்கள் சிலர் நிற்ப தும், பயிற்சி பெறுவதும் பதிவாகியுள்ளது என் றும் புலிகளின் ஆதரவு இணையத்தளம் ஒன்று தெரிவித்தது. (க)



அடுத்த பாப்பரசரைத் தெரிவுசெய்வதற்காக கர்தினால்கள் வத்திக்கானில் கூடியுள்ளனர். அவர்கள் வாக்களித்து பாப்பரசர் தெரிவு செய்யப்பட்டதும், வாக்குச்சீட்டுக்களை ஒரு வகைக் கலவையுடன் சேர்த்துத் தீ மூட்டுவார்கள். அப்போது எழும் புகை வெண்புகை. அங்குள்ள புகைக் கூண்டு வழியே வெளியேறும். இதுவே பாப்பரசர் தெரிவு செய்யப்பட்டார் என்பதனை உலகுக்கு அறிவிக்கும் முதல் சமிக்ஞை ஆகும்.

இதற்காக வாக்களிப்பு இடம்பெறும் சிஸ்டின் ஆலயக் கூரையில் புகைக்கூண்டு பொருத்தப்படுவதைப் படத்தில் காணலாம்.

# இராணுவமே ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலமும் அறிந்துகொண்டோம்.

தேசவிரோதிகளான கருணா குழுவைச் சேர்ந்த பிள்ளையான் குழுவினருக்கும் ஈ.என்.டி.எல்.எவ். விஜயன் குழுவினருக்கும் இடையில் ஏற்பட்ட உட்பூசல் மற்றும் முரண்பாடு காரணமாக இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. தேசவிரோதிகளை ஒற்றர் படையாகப் பயன்படுத்தும் ஸ்ரீலங்கா அரசும் இராணுவப் புலனாய்வுப் பிரிவுமே இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும் - என்று அவர் தெரிவித்தார்.

# திருக்கோவில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணை நடத்திவரும் திருகோவில் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.காரியப்பர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலைக்கான காரணம் என்னவென்பது உடனடியாகத் தெரியவரவில்லை. இவர் விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர் என்று கூறப்படுகின்றது.

கல்முனையைச் சேர்ந்த இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த திருக்கோவில் பொலீஸார் அவரது சடலத்தை மீட்டு திருக்கோவில் மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

இவரைச் சுட்டவர்கள் எனக் கருத்படும் எந்தவொரு நபரும் உடனடியாகக் கைதுசெய்யப் படவில்லை. இந்தக் கொலை தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலீஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ஓ -12)

# இளம் தாயும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லாத வேளையில் தாயும் பிள்ளையும் தனித்திருந்த போதே இச்சம்பவம் நடந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. எனினும், ஊர்ஜிதமான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

வேலணை, மண்கும்பானைச் சேர்ந்த உதயராஜ் குமுதினி (வயது-22) உதயராஜ் சபீனா (வயது ஒன்று) ஆகிய இருவருமே இக்கதிக்கு ஆளாகியுள்ளனர்.

உயிரிழந்த குழந்தையின் முதலாவது பிறந்த நாள் கொண்டாட்டம் நாளை 17 ஆம் திகதி நடத்தப்பட இருந்ததாகவும் -

அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த நிலையிலேயே இந்தச் சம்பவம் நிகழ்ந்திருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஜ-12)

# இம்முறை மேதின...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தை நடத்துவதென்றும் -

நேற்று முடிவு செய்யப்பட்டது. தமிழ் மக்களின் அவலங்களை உள்ளடக்கியதான மேதினப் பிரகடனம் ஒன்றும் அன்றைய கூட்டத்தில் வெளியிடப்படவுள்ளது. கூட்டத்தின் முடிவில் இசை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது.

இம்முறை பேரணியில் பெருந்திரளான மக்களை ஒன்று திரட்டுவதற்கென பிரதேச ரீதியாக கருத்தரங்குகள், கூட்டங்கள் என்பவற்றை நடத்தவும் ஏற்பாடுகளை மேற்கொள்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், மேதின ஊர்வலத்தில் கலந்துகொள்ளும் அமைப்புகள் மேதினத்ததைப் பிரதிபலிக்கும் ஊர்திகள், பதாகைகள், சுவரொட்டிகள் என்பவற்றை தயாரிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஊர்வலத்துக்கு மக்களை ஒன்று திரட்டுவதற்கும், நிகழ்வு முடிந்த பின்னர் அவர்கள் மீண்டும் சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கும் அதிகளவிலான போக்குவரத்து வசதிகளை செய்வதற்கும் ஏற்பாடாகியுள்ளது.

இந்த மேதின நிகழ்வை மிகப்பிரமாண்டமான முறையில் நடத்துவதற்கு அனைத்துத் தரப்பினரையும் ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர். (ஒ-8)

# மட்டுவிலில் கோஷ்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வயது-24) என்பவரும் நேற்றுப் பின்னிரவு யாழ்.போதனா வைத்தியசாலையில் மேலதிகச் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

இந்த மோதலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலீஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை மேற் கொண்டனர்.

இதேவேளை -

சாவகச்சேரி அல்லாரைப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற மற்றொரு தாக்குதல் சம்பவத்தில் இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நேற்று இரவு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (ஓ-12)


புதுமடம் திருக்குடும்ப சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்ட
அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| முதலாம் | பரிசு | அதிர்ஷ்ட இலக்கம் | 957 |
| இரண்டாம் | பரிசு | அதிர்ஷ்ட இலக்கம் | 2926 |
| மூன்றாம் | பரிசு | அதிர்ஷ்ட இலக்கம் | 3145 |
| நான்காம் | பரிசு | அதிர்ஷ்ட இலக்கம் | 1004 |
| ஐந்தாம் | பரிசு | அதிர்ஷ்ட இலக்கம் | 1114 |

ஆறுதல் பரிசுகள்
அதிர்ஷ்ட இலக்கங்கள்:- 55, 2846, 2804, 739, 631
தொடர்பு: திருக்குடும்ப சனசமூக நிலையம், புதுமடம், உருவில். (44298) (33-11-45)

BRIGHTMAN
நாவலர் வீதி, யாழ். நகர்.
புதிய பிரிவு
A/L2007 கணித, உயிரியல்
Phy:- திரு. ஜெயசீலன்
Che.:- திரு. டயஸ்
C.maths:- திரு. துரையப்பா
Bio:- திரு. ஞானேந்திரன்
ஆரம்பம்: 16.04.2005 3 p.m. sat.
ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.
(44290)

கணக்கியல்
திரு. வின்சன் (B.B.A, HRM SPL)
2007A/L
பிரிவு II
ஆரம்பம்: 16.04.2005 சனி. 9.00 A.M.
(C/42320) (33-11-45) வினைல்ஸ் - சுன்னாகம்

ENGLISH CLASSES
ஆண்டு 9,10,11 மாணவர்களிற்கான
ENGLISH LANGUAGE
ENGLISH LITERATURE
பிரிவு V இற்கான
23.04.2005
ஆசிரியர் S.தெய்வதவபாலன்
மேலதிக விபரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
இல. 07, பலாலி வீதி யாழ்ப்பாணம்.
T.P:- 021-222 3335, 0773 086716

பட்டதாரிகளுக்கான மாகாண
பொதுச் சேவைகள் போட்டிப் பரீட்சை
வகுப்புகள் நடைபெறுகின்றன
★ D.M.I. யாழ். நகர் சனி 3.00–5.00
★ கிறிஸ்ரல் நெல்லியடி ஞாயிறு 4.00–6.00
★ புதிதாக இணைபவர்களுக்கு மேலதிக வகுப்புகள் நடைபெறும். (44296) (33-11-45)

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.
O/L Day Class
எமது Super Grade ஆசிரியகுழு
ஆரம்பம் 18.04.2005 திங்கள் காலை 8.00

CHEMISTRY
GROUP CLASS
Organic (for 2006)
ஆரம்பமாகவுள்ளது.
இடம்: 136, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.
2007இற்கான General + Basic
ஆரம்பமாக உள்ளது.
By: N.VAKEESAN
T.P.: 0777593793
(44136)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
(44298) (33-11-45)